# உள்ளே...




கற்றது கைம்மண்ணளவு
கல்லாதது உலகளவு

**நியூ செஞ்சுரியின்**

# உங்கள் நூலகம்

**மாத இதழ்**

*திருவள்ளுவராண்டு 2049*

*மலர் - 11 இதழ் - 4 - ஜூலை - 2019*

ஆசிரியர்

**த.ஸ்டாலின் குணசேகரன்**

பொறுப்பாசிரியர்

**சண்முகம் சரவணன்**

ஆசிரியர் குழு

*எஸ். சண்முகநாதன்*
*தி.ரெத்தினசபாபதி*
*அ.கணேசன்*
*அ.கிருஷ்ணமூர்த்தி*
*ஜி. சரவணன்*

இதழ் வடிவமைப்பு

*ஞா. சரிதா*

நியூ செஞ்சுரி வாசகர் சங்கம்
பதிவு எண் : 21/2005/ 11/2/2005
16 (142), ஜானி ஜான்கான் ரோடு,
இராயப்பேட்டை, சென்னை - 600 014
ungalnoolagam@gmail.com | www.ncbhpublisher.in
இணைய தள முகவரி: **www.keetru.com**

தனி இதழ் ₹ 30.00, ஆண்டு சந்தா ₹ 360.00
மாணவர்களுக்கு ₹ 300.00
ஆயுள் சந்தா ₹ 3000.00
அயல்நாடு (ஆண்டு சந்தா) ₹ 2750.00
*சந்தா தொகையை*
**New Century Reader's Sangam**
*என்ற பெயரில் அனுப்பலாம்.*

உங்கள் நூலகம் பற்றிய விமர்சனக் கடிதங்கள்,
உங்கள் நூலகத்திற்கான படைப்புகள், கட்டுரைகள்,
நூல் விமர்சனங்கள், மதிப்புரைக்கான நூல்கள்
ஆகியவற்றைக் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்புமாறு வேண்டுகிறோம்.

**பொறுப்பாசிரியர்**
**உங்கள் நூலகம்**
**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**
**41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,**
**அம்பத்தூர், சென்னை - 600098.**
**தொலைபேசி எண் : 044-26251968, 26258410**



படித்துப் பாருங்களேன்...
ஆ.சிவசுப்பிரமணியன்............................................. 04

இராஜீவ்காந்தி மருத்துவக்கல்லூரி ஒரு வரலாற்றுப் பார்வை
டாக்டர் சு. நரேந்திரன்..............................................13

பிளேக், குளஉடைப்பு பற்றி சிந்து பாடிய கம்பம் கவிஞன்
அ.கா.பெருமாள்.......................................................17

இந்தியாவின் விடுதலைக்குப் பின் மக்களின் மாபெரும் எதிர்பார்ப்புகள்
சி.ஆர்.ரவீந்திரன்...................................................... 21

தஞ்சாவூர் பெருவுடையார் கோயிலின் தளிச்சேரிப் பெண்டுகள்
முனைவர் கி.இரா.சங்கரன்..................................... 26

தமிழ் நாவல்கள்
பொன்னீலன்............................................................ 31

இந்தியப் பொருள்முதல்வாதத் தத்துவம்
ராமகிருஷ்ண பட்டாச்சார்யா.................................... 39

கொஞ்சம் அனுபவம் கொஞ்சம் ஆராய்ச்சி
இரா.காமராசு.......................................................... 49

தமிழ்க் குழந்தை இலக்கியத்தில் நாட்டுப்புற இலக்கியத்தின் தாக்கம்
சுகுமாரன்............................................................... 53

தமிழ் இந்தி சமஸ்கிருதம்
உதயை மு.வீரையன்.............................................58


உ.வே.சாமிநாதையர் ‘தமிழ்த் தாத்தா’ ஆன வரலாறு
முனைவர் இரா. வெங்கடேசன்.............................. 64

பகிர்வு

# படித்துப் பாருங்களேன்...

ஆ.சிவசுப்பிரமணியன்

சென்ற இதழ் தொடர்ச்சி




இந்திய விடுதலைக்கான அறப்போராட்டம், 1905-1919
டேவிட் ஹார்டிமேன் (2018:)

The Non-Violent Struggle for Indian Freedom, 1905-1919, David Hardiman (2018)
Penguin Viking, Gurgaon, Haryana

தென் ஆப்பிரிக்காவில் காந்தி மேற்கொண்ட அறப்போராட்டத்தை விவரித்த நூலாசிரியர், அவரது இந்திய வருகைக்குப்பின் இந்தியாவில் நிகழ்ந்த மூன்று குடியானவர் போராட்டங்களை அறிமுகம் செய்துள்ளார். இவை மூன்றும் வடஇந்தியாவில் நிகழ்ந்துள்ளன. இந்திய கிராமப்புறங்களில் தேசிய இயக்கத்திற்கான அடித்தளமிடுவதில் இவற்றின் பங்களிப்பு இருந்துள்ளது.

இந்திய விடுதலைக்கான போராட்டத்தில் அமைதியான முறையில் எதிர்ப்பை வெளிப்படுத்துவது, கிராமப்புறக் குடியானவர்களை அதில் இணைத்துக் கொள்வது குறித்த சிந்தனைப்போக்கை அரவிந்த் கோஷ் வெளிப்படுத்தியுள்ளார். நிலவரியைச் செலுத்தமாட்டோம் என்று பரந்த அளவில் குடியானவர்கள் முடிவெடுத்தால் அதை

எதிர்கொள்வது ஆங்கிலேயருக்குக் கடினமானதாக இருக்கும் என்பது அவரது கருத்தாக இருந்தது. சமூகம் சார்ந்த அழுத்தத்தை இந்தியக் குடியானவர்களால் வெளிப்படுத்தமுடியும் என்றும், எழுத்து வடிவிலான சட்டங்களை விட சமூகப் புறக்கணிப்பு என்பது இந்திய மக்களிடம் செல்வாக்குப் பெற்றிருந்தது என்றும் அவர் கருதினார்.

வன்முறை சார்ந்தும் சாராமலும் இந்தியக் குடியானவர்கள் தம் எதிர்ப்பை வெளிப்படுத்தியது தொடர்பாக நீண்ட வரலாறு உள்ளது. ஆங்கில ஆட்சியின் தொடக்கத்தில் 'சர்கார் (அதிகாரிகள்) சவுகார்' (வட்டித்தொழில் புரிவோர்) சமிந்தார் (பெருநிலக்கிழார்கள்) என்ற மூன்று தரப்பினருக்கும் எதிராக வன்முறை சார்ந்த எழுச்சிகள் பரவலாக அமைந்துள்ளதை ரணஜித்குகா எடுத்துக்காட்டியுள்ளார்.

குடியானவர் எழுச்சியில் பங்கேற்ற குடியானவர்கள் தம் நிலங்களை இழந்துள்ளனர்; சொத்துப் பறிமுதலுக்கும் சிறைத்தண்டனைக்கும், நாடுகடத்தலுக்கும் ஆளாகியுள்ளனர்.

இத்தகைய அச்சங்களின் காரணமாக வன்முறையில் இருந்து விலகி நின்றார்கள். தாம் உற்பத்தி செய்வதிலும், ஈட்டுவதிலும் இருந்து நியாயமான பங்கையே ஆட்சியாளர்கள் எடுத்துக் கொள்வார்கள் என்ற தார்மீகம் சார்ந்த வாதத்தை முன்வைத்ததுடன் நின்றுவிட்டார்கள். தன்னைவிட உயர்நிலையில் இருப்போருக்கு நிபந்தனையெதுவுமின்றி கீழ்ப்படிய வேண்டும் என்று எதிர்பார்க்கும் ஒரு சமூகம் முக்கியமாக இழப்பது அதன் தார்மீக நிலையைத்தான்.

சில போழ்து, ஒடுக்குவோர் ஆட்சிபுரியும் பகுதியில் இருந்து இடம் பெயர்ந்து வேறு பகுதிக்குக் குடியேறப் போவதாக அச்சுறுத்தினார்கள். தலத்தில் உள்ள நில உரிமையாளர்கள் அல்லது அதிகாரிகளின் அத்துமீறல்களில் இருந்து விடுபட அவர்களுக்கு மேலே உள்ள ஆட்சியாளர்களிடம் முறையிட்டு நியாயம் கேட்பதைத் தம் தார்மீக உரிமையாகக் கருதினர். இச்செயலின் வாயிலாக ஆளுவோனின் பார்வைக்கு இத்தவறான செயல்பாடுகளைக் கொண்டு சென்று அவனுக்கு உதவுவதாக எண்ணினார். இவ்வாறின்றி, ஒடுக்குமுறை மேற்கொள்ளும் அதிகாரியை அவன் பணிபுரியும் பகுதியிலேயே வெளிப்படையாகத் தண்டித்தனர். சான்றாக இமாசலப் பகுதியில் அதிகாரி ஒருவரை மக்கள் தண்டித்ததைக் குறிப்பிடலாம்.

தன் செயல்பாடுகளால் மதிப்பிழந்த ஓர் அதிகாரியின் தலையை மொட்டை அடித்து மீசையை மழித்தனர். அவர் முகத்தில் கரி பூசி, கழுதைமேல் ஏற்றி கிராமத்தில் ஊர்வலமாக அழைத்துச் சென்றனர். இருப்பினும் மிகக் கொடூரமான ஒடுக்குமுறையாளர்களைக் கூடக் கொல்வதென்பது அரிதாகவே இருந்தது.

இது போன்ற செயல்பாடுகளில் கிராமத்தின் மேட்டிமையோரும் அடித்தள மக்களும் இணைந்தே செயல்பட்டனர். ஆங்கில ஆட்சியில் உருப்பெற்ற வழக்கறிஞர்களும், தேசிய அரசியல்வாதிகளும் இவர்களுக்கு உதவ முன்வந்தனர். ஆங்கிலேயரின் நேரடி ஆட்சி நிலவிய பகுதிகளிலும், அவர்களின் கட்டுப்பாட்டிற்குள் இயங்கிய மன்னராட்சிப் பகுதிகளிலும் குடியானவர்களின் வன்முறையற்ற



டேவிட் ஹார்டிமேன்

எதிர்ப்புகள் 19-ஆவது நூற்றாண்டில் நிகழலாயின. குறிப்பாக 1857 சிப்பாய் எழுச்சி ஒடுக்கப்பட்ட பின்னர் குடியானவர்களின் எதிர்ப்புகள் வெளிப்பட்டன.

கிராமப்புற மக்களிடம் இருந்து ஆயுதங்களைப் பறித்து அவர்களின் போராட்டங்களை வலுக்குன்றச் செய்ததுடன், தமது இராணுவப் பலத்தையும் ஆங்கிலேயர் வலுவாக்கிக் கொண்டனர். இரயில்போக்குவரத்தின் வளர்ச்சியானது

அவர்களது படைவீரர்களை விரைவாக அனுப்பத் துணைபுரிந்தது. அவர்கள் கையாண்ட, படைக் கருவிகள் சார்ந்த தொழில்நுட்பம் வளர்ச்சியடைந்து அவர்களை வலுவுள்ளவர்களாக்கியது.

அதே நேரத்தில் அமைதியான போராட்டங்களுக்கு அனுமதி வழங்கவும் செய்தது. 1873ஆவது ஆண்டில் சமின்தார்களுக்கு எதிரான போராட்டம் பாட்னா நகரில் நிகழ்ந்தபோது கட்டுப்பாடுகளுடன் கூடிய அனுமதியை வழங்கியது. வன்முறையால் சிறிதளவே பயன் கிட்டுவதாக அடித்தள மக்கள் உணர்ந்திருந்தார்கள். ஆங்கிலேயர்களின் மிதவாதக் கோட்பாடுகள் வெற்றி தரும் என்று எண்ணினார்கள். காலனிய ஆட்சியும் வன்முறை வடிவிலான எதிர்ப்புக்கு மாறாக வன்முறையற்ற போராட்டங்களை நிகழ்த்தத் தூண்டியது.

இருப்பினும் ஆங்காங்கே பொதுமக்களின் எழுச்சிகளில் வன்முறை நுழைந்து அரசு அல்லது உள்ளூர் மேட்டிமையோரின் தாக்குதலுக்கு ஆளானது.

★★★

இராஜஸ்தானில் உள்ள பிஜ்ஜோலியா பகுதியில் 1897-இல் நிகழ்ந்த குடியானவர் கிளர்ச்சியானது, தேசிய இயக்கத்தினர், முற்போக்கான மேட்டிமையோர் ஆகியோரின் தலைமைக்கு வழிவகுத்தது.

**பிஜ்ஜோலியா, 1897-1922**

இராஜஸ்தான் பகுதியானது பெரும்பாலும் மன்னர் ஆட்சிப்பகுதியாக விளங்கியது. இம்மன்னர்களில் பெரும்பாலோர் இராஜபுத்திரர் சாதியைச் சேர்ந்தவர்கள். முகலாயர் ஆட்சியின் போது, முகலாயப் பேரரசர்களின் தலைமையை ஏற்றுக் கொண்ட சிற்றரசர்களாக இருந்தனர். ஆங்கில ஆட்சியின்போது அந்நிய நாட்டு ஏகாதிபத்தியவாதிகளின் மேலாதிக்கத்தை ஏற்றுக்கொண்டனர். (இந்திய விடுதலைக்குப் பின் காங்கிரஸ் கட்சி, பி.ஜே.பி. ஆகிய இருகட்சிகளின் சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களாகவும், மத்திய அமைச்சர்களாகவும், மாநில முதல்வர்கள், அமைச்சர்களாகவும் விளங்கி வருகின்றனர்)

மன்னர் ஆட்சிப்பகுதியில் அவர்களைக் கண்காணிக்க ‘அரசியல் முகவர்’ என்ற பதவியை ஆங்கில அரசு உருவாக்கியிருந்தது. திறமையற்றவர்கள், ஊழல் புரிபவர்கள், விசுவாசமில்லாதவர்கள் என்போர் மன்னர்களாக இல்லாதவாறு பார்த்துக்கொள்வது அரசியல் முகவர்களின் பணியாக இருந்தது. மன்னர்களின் ஊழியர்களாக ஆங்காங்கே விளங்கிய ராஜபுத்திரர்கள் தம் பொறுப்பில் இருந்த பகுதிகளில் வாழ்ந்த குடிமக்களிடம் வரிவாங்கி மன்னரிடம் கொடுத்தார்கள். இராணுவப் பணிகளை மேற்கொண்டார்கள். இவர்களின் பொறுப்பில் இருந்து பகுதிகள் ஜாகிர்கள் எனப்பட்டன. ஜாகிரின் நிர்வாகியாகச் செயல்பட்டமையால் ஜாகிர்தார்கள் என அழைக்கப்பட்டனர்.

ராஜஸ்தானின் தென்பகுதியில் இருந்த உதயபூர் நகரை உள்ளடக்கிய மேவார்ப் பகுதியின் மகாராணாவாக (பேரரசன்) விளங்கிய பதேசிங் 1849ல் பிறந்தவர். 1884ல் ஆட்சிப் பொறுப்பை ஏற்றவர். பிற்போக்கான சிந்தனை கொண்டவராகவும், விட்டுக்கொடுக்கும் தன்மையற்ற நிர்வாகியாகவும் விளங்கிய இவர் நிலவுடைமை அரசின் பழைய முறைகளில் மாற்றம் செய்வதை விரும்பாதவராய் இருந்தார்.

அதிக வரிவிதிப்பு குறித்தும், அதிகாரிகள் ஜாகிர்தார்களின் மக்கள் விரோதச் செயல்பாடுகள் குறித்தும் மனுக்கள் வாயிலாக மகாராணாவுக்குத் தெரிவிப்பது மரபாக இருந்தது. இவ்வகையில் பிஜ்ஜோலியா ஜாகிரில் வாழும் மக்களின் அவலம் குறித்து மனுக்கள் வாயிலாக அப்பகுதியினர் தெரிவித்தனர். நீதி வழங்கும் முறையின் ஒழுங்கற்ற தன்மை, அதிக வரிவிதிப்பு, ஜாகிர் அதிகாரிகளின் குதிரைகளுக்கு இலவசமாகத் தீனிவழங்க வேண்டிய கட்டாயம், கட்டணமின்றி மாட்டுவண்டிகளை வழங்குதல், எந்த நேரத்திலும் பொருள் வடிவிலோ, உழைப்பு வடிவிலோ ஊதியம் வாங்காது அரசு அதிகாரிகளுக்கு உழைக்கவேண்டிய கட்டாயம் என அவர்கள் அல்லலுக்கு ஆளாகிவந்தனர். இப்பணிகளைப் பெற, குடியானவர்களைக் கடுமையாக அடிக்கவும் செய்தனர். இதனால் குடியானவர்களில் சிலர் இறந்தும் போயினர். இவற்றைப் பொருட்படுத்தாது ஆளுவோர் ஊதாரித்தனத்தில் திளைத்தனர்.

குடிமக்களின் வீடுகளில் நிகழும் திருமணத்திற்கு வரிவிதிக்கும் முறையை கிருஷ்ணாசிங் என்ற ஜாகிர்தார் அறிமுகம் செய்தார். இதை எதிர்த்து 1897ல் தக்காட் சாதியைச் சேர்ந்த குடியானவர்கள் ஜாகிர்தாரின் இல்லம் நோக்கிச் சென்றனர். இவ்வரியின்றி திருமணம் செய்ய அனுமதி வழங்க வேண்டி திருமணமாகாத 200 பெண்களும்

இவ் ஊர்வலத்தில் கலந்து கொண்டனர். அவர்களது வேண்டுகோளை கிருஷ்ணாசிங் ஏற்றுக்கொள்ளவில்லை.

தம் எதிர்ப்பை வெளிப்படுத்தும் வழிமுறையாக வேறுபகுதிக்குக் குடியேறப்போவதாக அவர்கள் அறிவித்தனர். அக்குடியானவர்கள் செலுத்தும் வரி நின்றுவிடும் என்ற அச்சத்தால், திருமணவரியை நீக்கிவிடுவதாக அவன் அறிவித்தான். அதன் பிறகு கிளர்ச்சியாளர்கள் தம் கிராமத்திற்குத் திரும்பினர். திருமணவரியை நிறுத்தியதில் பெற்ற வெற்றியின் தூண்டுதலால், வேறு சில குறைபாடுகளையும் நீக்கும்படி மேவாரின் மகாராணாவை அக்குடியானவர்கள் வலியுறுத்தினர்.

நிலவாடகை தொடர்பாக சீர்திருத்தங்கள் தேவை என்பதை அவர்கள் தெரிவித்த போது, ஓர் அதிகாரியை மகாராணா அனுப்பி வைத்தார். தன் உரிமைக்கு அப்பாற்பட்டு அவர் வரிவாங்குவதாக அதிகாரி தெரிவித்தார். இது தொடர்பாக ஜாகிர்தாருக்கு எச்சரிக்கை அனுப்பப்பட்டது. ஆயினும் இக்குறைபாட்டை வெளிப்படுத்திய இரு தலைவர்களின் பண்ணைகள் பறிமுதல் செய்யப்பட்டு வெளியேற்றத்திற்கு ஆளானார்கள். கடுமையான தண்டம் கட்டிய பின்னரே அவர்களால் திரும்பிவர முடிந்தது. வளம் படைத்த குடியானவர்கள் சிலருக்கு சலுகைகள் வழங்கி குடியானவர்களின் ஒற்றுமையை ஜாகிர்தார் குலைத்தான்.1899-1900 ஆண்டுகளில் இப்பகுதியில் ஏற்பட்ட கடும்பஞ்சத்தினால் குடியானவர்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருந்தனர். பஞ்சத்தின் தாக்கம் தொடர்ந்த நிலையில் தம் அவல நிலை குறித்து மகாராணாவுக்கு குடியானவர்கள் மனு அனுப்பினர். நிலைமையை ஆராய அதிகாரி ஒருவரை மகாராணா அனுப்பினார். ஜாகிர்தார் தன் நிலையில் இருந்து மாறவில்லை.

1904-ல் பெரும்பாலான குடியானவர்கள் தம் எதிர்ப்பைத் தெரிவிக்கும் வகையில் பயிர் செய்யாமல் இருந்தனர். அத்துடன் பலமுறை ஜாகிர்தாருக்கு மனுக்கள் அளித்தனர். இதனால் வேண்டா வெறுப்பாக வரிக்குறைப்புக்கு அவர் ஒத்துக்கொண்டார். 1906ல் இதை மீறியதுடன் புதியவரிகளை விதித்தார்.

**சாது சீத்தாராமதாஸ் (1883 - )**

இருபதாம் நூற்றாண்டின் முதல்பகுதியில் சாது சீத்தாராமதாஸ் என்ற இளைஞர் இப்பகுதியில் சமூகப் பணியாற்றி வந்தார். கற்றறிந்த இவர் சமஸ்கிருத மொழியிலும், ஆயுர்வேத மருத்துவத்திலும் தேர்ச்சி பெற்றவராக இருந்தார். மித்திரா மண்டல் (நண்பர்கள் கழகம்) என்ற அமைப்பை 1905-இல் இப்பகுதியில் நிறுவி தேசிய இயக்கத்தை அறிமுகம் செய்யலானார். ஜாகிர்தார் மீது எதிர்ப்புணர்வு கொண்ட கல்வியறிவு கொண்ட மேட்டுக்குடியினர் சிலர் இவ்வமைப்பில் இணைந்தனர். 1907-இல் இவர் ஜாகிர்தாருடன் இணைந்து சில பொறுப்புக்களை வகித்தார். கருத்து வேறுபாடு ஏற்பட்டு 1908-இல் அவருடன் இருந்து விலகினார். பின் ஹோமியோ மருத்துவராகச் செயல்பட்டர். இப்பணியின் காரணமாகக் குடியானவர்களுடன் அவருக்கு நெருக்கமான உறவு ஏற்பட்டது. குடியானவர்களின் அவல வாழ்க்கையை அவர் அறிய இவ்வுறவு உதவியது. அவர்களது வாழ்க்கையை மேலும் அறிந்து கொள்ளும் ஆர்வம் ஏற்பட்டதால் கிராமங்களுக்குப் பயணித்தார்.

அதிக வரிகளையும், கட்டாய வேலை முறையையும் எதிர்க்கும்படிக் கூறியதுடன் எவ்வளவு காலம் விளைச்சலில் நாற்பது விழுக்காட்டை ஜாகிர்தாருக்கு வழங்குவீர்கள்? அடிமையாக வாழ்வதை எவ்வளவு காலம் ஏற்றுக்கொள்வீர்கள்? என்ற வினாக்களை அவர்களை நோக்கி எழுப்பினார். சிறிதளவாவது சுயமரியாதையுடன் இருக்கும்படியும், முறையாக அமைப்பின் அடிப்படையில் ஒன்று திரண்டால் இறுதியில் அவர்கள் வெற்றிபெறுவார்கள் என்றும் அறிவுறுத்தினார். இந்தியாவில் நடைபெறும் புரட்சிகர நடவடிக்கைகள் குறித்துக் கூறியதுடன் தேசிய இயக்கப் பாடல்களையும் பாடிக்காட்டினர்.

தாக்காட் சாதித் தலைவர்களுடன் நெருக்கமானதுடன் முக்கிய கோரிக்கைகள் அடங்கிய பட்டியல் ஒன்று உருவாக்கும்படியும் அறிவுறுத்தினார். அப்பட்டியலில், அதிக வரி விதிப்பில் இருந்து விடுபடல், குடியானவர்களிடம் இருந்து சேகரிக்கும் தானியங்களை எடை போட, நேர்மையான அதிகாரிகளை நியமித்தல், வாங்கிய பணத்திற்கான கணக்கைப் பராமரித்தல் என்பன அப்பட்டியலில் இடம்பெற்றன.

மார்ச் 1913இல் சாது சீதாராமதாஸ் தலைமையில், குடியானவர்களுடனும், கற்றறிந்த மேட்டுக்குடியினருடனும் இணைந்து ஜாகிர்தாருக்கு எதிரான இயக்கத்தை தாக்காட் சாதித்தலைவர் தொடங்கினார்.

தம் எதிர்ப்பைத் தெரிவிக்கும் வழிமுறையாக இரண்டாண்டுக் காலம் பயிர் செய்தலையும்,

ஊதியம் பெறாத உழைப்பை ஜாகிருக்காக மேற்கொள்வதையும் நிறுத்திவிட்டனர். தம் குறைகளைக் கூறுவதற்குச் சென்ற இம்மக்களைச் சந்திக்க அதிகாரிகள் மறுத்துவிட்ட நிலையில், குடியானவர்களில் பலர் இடம் பெயர்ந்து சென்றுவிட்டனர்.

ஏறத்தாழ இரண்டாயிரம் குடியானவர்கள் உணவும் தண்ணீரும் இன்றி ஜாகிரின் தலைமை அலுவலகத்தை மூன்று நாட்கள் முற்றுகையிட்டனர். சாது சீதாராமதாஸ் கைதாகி ஆறுமாதம் சிறையில் அடைக்கப்பட்டார். இந்நிகழ்வுகளை அவர் திலகருக்குத் தெரிவிக்க இது குறித்து, தமது பத்திரிக்கையில் திலகர் எழுதினார். இதன் பின்னர் ஆங்கில அரசு மகாராணாவுக்கு கடிதம் அனுப்பி சீதாராமதாசை விடுவிக்கும்படிச் செய்தது. குடியானவர்களின் வேண்டுகோள்கள் சில ஏற்றுக் கொள்ளப்பட்டன. இதன்படி சில வரிகள் நீக்கப்பட்டன, சில வரிகளின் அளவு குறைக்கப்பட்டது. 1913-இல் தொடங்கி போராட்டம் 1915 டிசம்பரில் முடிவுற்றது.

குடியானவர்களின் இவ்வியக்கமானது நீண்ட காலப் போராட்ட வடிவமான இடப்பெயர்ச்சி முறையைக் கொண்டிருந்தாலும், தலத்தில் உள்ள கற்றறிந்தோர், தேசிய இயக்க ஆதரவாளர்கள், சமூக சேவையுணர்வு கொண்டோர் என்போரை உள்ளடக்கியதாக விளங்கியமை குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

★★★

1915-இல் ஆசிரியர் ஒருவர் மேவார் நகரில் ‘வித்யா பிரச்சாரினி சபா’ (கல்வி பரப்பும் கழகம்) என்ற பெயரில் அமைப்பு ஒன்றைத் தொடங்கி இருந்தார். சிறார்களுக்குக் கல்வி கற்பித்தலும் பொது மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தலும் இதன் குறிக்கோளாகும். இவ்வமைப்பின் கிளை ஒன்றை சீதாராமதாசும் அவரது தோழர்களும் இணைந்து பிஜ்ஜோலியாவில் நிறுவினார்கள். இதன் வாயிலாக விஜய்சிங் பத்திக் என்ற தேசிய இயக்கவாதியுடன் இப்பகுதியின் தலைவர்களுக்குத் தொடர்பு ஏற்பட்டது.

**விஜய்சிங் பத்திக் (1882 - )**

இவரது இயற்பெயர் பூபசிங் குஜார் என்பதாகும். உத்திரப்பிரதேச மாநிலத்தைச் சேர்ந்த இவர் புரட்சிகர தேசிய இயக்கத்தைச் சேர்ந்தவர். இவரது தாத்தா 1857 சிப்பாய் எழுச்சியில் முக்கிய பங்கு வகித்தார். புரட்சிகர தேசிய இயக்கத்தில்



விஜய்சிங் பத்திக்

பத்திக் இணைந்திருந்தார். இவ் இயக்கப் பணிகளை மேற்கொள்ள இராஜஸ்தான் பகுதிக்கு இவரை அனுப்பி வைத்தனர். இப்பணியில் ஈடுபட்டிருந்தபோது ஆங்கில அரசால் கைது செய்யப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டார். சிறையில் இருந்து தப்பி வந்து தன் பெயரை விஜய்சிங் பத்திக் என்று மாற்றிக் கொண்டு வித்தியா பிரச்சாரினி சபையின் செயல்பாடுகளில் ஈடுபட்டார். இத்தொடர்பினாலேயே குடியானவர் போராட்டத்திற்குத் தலைமையேற்க அழைக்கப்பட்டார். இச்சபையில் ஆசிரியராகவும், 1917இல் பணியாற்றினார். தேசிய இயக்கம், அஞ்சாமை, அநீதிக்கும் சித்திரவதைக்கும் எதிராக அச்சமின்றியும், அர்ப்பணிப்பு உணர்வுடனும், போராடல் என்பனவற்றை மாணவர்களுக்குக் கற்றுக் கொடுத்தார். அத்துடன் இலத்திக்கம்புகளையும், வாட்களையும் பயன்படுத்துதல், மற்போர், அடக்குமுறையில் இருந்து தப்பிக்க, காட்டில் எவ்வாறு ஒளிந்து கொள்வது என்பனவற்றையும் கற்றுக் கொடுத்தார். ஒரு கிராமத்தில் இருந்து மற்றொரு கிராமத்திற்குச் செய்தி அனுப்பும் வழிமுறைகளையும் உருவாக்கினார். நல்ல சொற்பொழிவாளராகவும், கவிஞராகவும், பாடகராகவும் விளங்கினார். கீழ்நிலையில் இருந்து மேல்நிலை வரையிலான அரசு அதிகாரிகளுடனும் அவருக்குத் தொடர்பிருந்தது.

அநீதிக்கு எதிரான போராட்டத்தைத் தொடங்க உதவும் வகையில் ‘உபர்மால் கிசான் சபா’ (குடியானவர் சேவைக்குழு) என்ற அமைப்பை

உருவாக்கினார். இதை வழிநடத்திச் செல்ல தலைவர், செயலாளர், நிர்வாகக்குழுவினர், என்ற பதவிகளை உருவாக்கி குடியானவர்களில் இருந்து சிலரை இப்பொறுப்புகளை ஏற்கும்படிச் செய்தார். இவர்களில் சிலர் தேர்தல் வாயிலாகவும், சிலர் நியமனத்தின் வாயிலாகவும் இப்பொறுப்புகளுக்குத் தேர்வு செய்யப்பட்டனர்.

இவ்வமைப்பானது நீதிவழங்கல், கல்வி, சமூக நலம் சார்ந்த செயல்பாடுகளை மேற்கொண்டது. ஜாகிரில் இருந்த நீதிமன்றத்திற்கு மாற்றாகச் செயல்பட்டு, உரிமையியல், குற்றவியல் வழக்குகளை விசாரித்துத் தீர்ப்பு வழங்கியது. அரசு நீதிமன்றம் போன்று இதுவும் தனக்கென, நீதிமன்ற முத்திரைத்தாள், நீதிமன்றக் கட்டணம், எழுத்தாவணமாக (அபிடவிட்) வழக்குகளைத் தாக்கல் செய்தல், சாட்சிகளின் பட்டியல் தரல் என்பனவற்றை உருவாக்கிக் கொண்டு செயல்பட்டது. ஒன்று அல்லது இரண்டு நாட்களில் தீர்ப்பு வழங்கப்பட்டது. யாரேனும் அரசு நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்தால் இயக்கத்தில் இருந்து வெளியேற்றப்படுவதுடன் சாதிவிலக்கிற்கும் ஆளாயினர். அவர்களுடன் சமூக உறவு கொள்ளாமை, திருமண உறவுகளை மேற்கொள்ளாமை என்பன சாதிவிலக்கத்தின் முக்கிய கூறுகளாக இருந்தன.

பள்ளிக்கூடம் ஒன்றை கிராமம் ஒன்றில் இவ்வமைப்பு நிறுவியது. அது இரவு நேரத்தில், ஆண்களுக்கும், பெண்களுக்குமான முதியோர் கல்வி நிறுவனமாகவும் செயல்பட்டது. எல்லாவற்றிற்கும் மேலாக ஓர் இணையரசாகவும், சனநாயகத்தன்மை கொண்டதாகவும் செயல்பட்டது. மேவார் ஆட்சியாளர்கள் ஜாகிர்தார்கள் ஆகியோரின் நிலவுடைமைக் கொடுமைகளை எதிர்த்துச் செயல்பட்டது. இதன் சனநாயகத் தன்மையினால் இதன் தலைவரை, அரசு அதிகாரிகளுக்கும் மேலாக மதித்து அவரது கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து நடந்தனர். தம்மைப் பற்றிச் சிந்தித்து ஜாகிர்தார்களின் செயல்பாடுகளில் உள்ள நியாய - அநியாயத்தன்மைகள் குறித்துக் கேள்வி கேட்கும் துணிச்சலைப் பெற்றனர். மன்னராட்சிப் பகுதிகள் என்பன, தேவையற்ற ஒன்று என்பதையும், சுரண்டல் தன்மையுடன் கூடிய அராஜகத்தன்மை கொண்டவை என்பதையும் வெளிப்படுத்தினர்.

நிலத்தைவிட்டு வெளியேறி அருகாமையில் உள்ள வேறு பகுதிகளில் குடியேறல், ஜாகிருக்கு வரி கொடாமை என்ற வழிமுறைகளை இவ்வமைப்பு மேற்கொண்டது. பத்திக், சீதாராமதாஸ் ஆகியோரும் ஏனைய தலைவர்களும் இதன் கூட்டங்களில் கலந்து கொண்டு அறிவுரை கூறினாலும் இதன் செயல்பாடுகளில் தம் ஆதிக்கம் உள்ளது என்ற கருத்து குடியானவர்களிடம் தோன்றாதவாறு பார்த்துக் கொண்டனர். நிலத்தில் பயிரிடும் பயிருக்கு ஏற்ப வரி வாங்குவதை நிறுத்திவிட்டு, நிலத்தின் பரப்பளவுக்கு ஏற்ப நிலையான வரிவிதிப்பை வலியுறுத்தினர். கால்நடைக்கான மேய்ச்சல் நிலம் ஒதுக்குதல், நில உரிமைகளில் மாற்றம் செய்தல், பள்ளிக்கூடங்களும், மருந்தகங்களும் நிறுவுதல், எழுத்து வடிவில் வெளியிடப்பட்ட சட்டங்களைப் பின்பற்றி நீதி வழங்கும் நீதிமன்றங்களை நிறுவுதல், நிர்வாக ஆணைகளை வாய்மொழியாக அன்றி எழுத்துவடிவில் வெளியிடல் என்பன இவ்வமைப்பு முன்வைத்த பிற வேண்டுகோள்களாக அமைந்தன.

குடியானவர்களின் போராட்ட உணர்வைத் தூண்டும் தன்மையிலான பாடல்களை, மார்வாரி மொழியிலும், இந்தி மொழியிலும் எழுதி, பத்திக்கும் ஏனைய செயல்பாட்டாளர்களும் பரப்பினர். இவை நூல் வடிவிலும், வெளிவந்தன. ஜாகிரின் அவலநிலை, ஒற்றுமையை வலியுறுத்தல், குடியானவர்களின் இவ்வமைப்பையும், அதன் தலைவர்களையும் போற்றுதல், சமூக சீர்திருத்தம் வேண்டல் என்பன இவற்றின் கருப்பொருளாக அமைந்தன. கையெழுத்து வடிவிலான வாரஇதழ் ஒன்றும் வெளிவரலாயிற்று. 1917இல் தொடங்கிய இவ்வியக்கம் வலுப்பெறலாயிற்று. இவ்வமைப்பின் முக்கிய தலைவர்களைக் கைது செய்ய அனுமதிக்கும்படி மேவார் நிர்வாகத்திடம் ஜாகிர் அதிகாரிகள் வேண்டினர். மேவாரில் அரசுப் பணியில் இருந்த நண்பர்கள் வாயிலாக, தம் மீது கைது ஆணை பிறப்பிக்கப்பட்டதை அறிந்து கொண்ட பத்திக் அங்கிருந்து வேறு மாநிலத்துக்கு இடம் பெயர்ந்தார். அங்கிருந்து இரவு நேரத்தில் பயணித்து வந்து இயக்கத்தை நடத்துவதற்கு வழிகாட்டிக்கொண்டிருந்தார். சீதாராமதாசும் வேறு ஒரு தலைவரும் கைது செய்யப்பட்டார்கள். அவர்கள் தூண்டுதலின் அடிப்படையிலேயே அரசுக்கு எதிராகச் செயல்பட்டதாக சாட்சியம் அளிக்க குடியானவர்கள் மறுத்துவிட்டனர். தன்னிச்சையாகவே தாங்கள் செயல்பட்டதாகக் கூறினர்.

அரசு எதிர்ப்புச் செயல்பாடுகளை 1918-இல் இவ்வமைப்பு நிறுத்திவிட்டு 'சேவா சமிதி' (சேவை அமைப்பு) என்ற அமைப்பைத் தோற்றுவித்தது. ஜாகிர் அதிகாரிகளின் தவறான பரப்புரைகளுக்கு எதிர்வினையாற்றியது. அத்துடன்



கிணறுகள் ஏரிகளைத் தூர்வாருதல் போன்ற பணிகளை ஒவ்வொரு மாதமும் குடியானவர்களின் துணையுடன் இருநாட்களுக்கு மேற்கொண்டது. இயக்கத்திற்கு எதிராகச் செயல்பட்ட கிராமத்தினரின் கிணறுகளை அழித்தும், பயிர்களைக் கொளுத்தியும், மரங்களை வெட்டியும், வேலிகளை அழித்தும் தண்டனை வழங்கியது. காந்தியின் பார்வையில் இது 'அனாத்மா' (ஆன்ம விரோதம்) ஆகும். அதே நேரத்தில் உடல் சார்ந்த வன்முறை எதுவும் நிகழவில்லை.

குடியானவர் எழுச்சியை அடக்கும் வழிமுறையாக அவர்களது கிசான் சபாவும் சேவை அமைப்பும் சட்டவிரோத அமைப்புகளாக அறிவிக்கப்பட்டு, தடை செய்யப்பட்டன. மாதவ்சிங் கோத்தாரி என்ற கடுமையான அதிகாரி புதிய நிர்வாகியாக நியமிக்கப்பட்டார். அனைத்துக் கூட்டங்களும் தடை செய்யப்பட்டன. சபாவின் தூதர்கள் கைது செய்யப்பட்டனர். குடியானவர்கள் சித்ரவதைக்கு ஆட்படுத்தப்பட்டதுடன், ஊதியமில்லாத கட்டாய வேலையை மேற்கொள்ளும்படி பணிக்கப்பட்டனர். வலுக்கட்டாயமாக வரி வாங்கப்பட்டது. சில நேரங்களில் குடியானவர்களுக்கும் ஜாகிர் அதிகாரிகளுக்கும் இடையே வன்முறையிலான மோதல்கள் நிகழ்ந்தன. அறப்போராட்டம் என்ற எல்லையைக் கடந்து குடியானவர் போராட்டம் பழைய நிலைக்குச் சென்றது. இந்நிகழ்வுகளையெல்லாம் செய்தித்தாள்களின் வாயிலாக இந்தியாவின் பிற்பகுதிகளுக்குக் கொண்டு செல்லும் முயற்சியில் பத்திக் ஈடுபட்டார். *1918*-இல் டில்லியில் நடந்த காங்கிரஸ் மாநாட்டில் அவர் கலந்து கொண்டு காந்தியைச் சந்தித்தார். அவரும் பிஜோலியாவில் நடைபெறும் நிகழ்வுகளை அறிந்து கொள்வதில் ஆர்வம் கொண்டிருந்தார். *1919*-இல் அவரை பம்பாய் வரும்படி அழைப்பு விடுத்தார். பத்திக் உருவாக்கிய இயக்கம் அவருக்கு நிறைவளித்த நிலையில் தன் செயலாளர் மகாதேவ் தேசாயை பிஜோலியாவுக்கு அனுப்பி அங்கு நிகழும் நிகழ்வுகளை அறிந்துவரும்படிக் கூறினார். அவரும் அங்கு சென்று அங்கு நடக்கும் நிகழ்வுகளைத் தெரியப்படுத்தினார்.

இந்தியாவின் முக்கிய தேசியத் தலைவர்களுடன் போராட்டக்காரர்கள் தொடர்பு கொள்கிறார்கள் என்பதையறிந்தவுடன், புதிதாக நியமிக்கப்பட்ட நிர்வாகி மதோசிங் கோத்தாரி போராட்டக்காரர்களை ஒடுக்குவதில் முனைப்புடன் செயல்பட ஆரம்பித்தார். குடியானவர்களின் தலைவர்கள் அய்ம்பது பேரைக் கைது செய்து ஜாகிரின் தலைமை அலுவலகத்தில் அடைத்து வைத்தார்.

ஏனைய குடியானவர்கள் கைது ஆணை இன்றியே கைது செய்யப்பட்டனர். வரிகளைக் கட்டுவதாகவும், ஊதியம் இல்லா கட்டாய வேலையை மேற்கொள்ளுவதாகவும் எழுத்து வடிவில் ஒப்புக்கொள்ளும்வரை அடிக்கப்பட்டனர். பெற்றோர் கண்முன்பே சிறார்கள் அடிக்கப்பட்டனர். உறவினர்களின் கண்முன்பே ஜாகிர் அதிகாரிகளால் குடியானவர் குடும்பப் பெண்கள் மானபங்கப்படுத்தப்பட்டனர்.

குடியானவர்களின் வீடுகள் சூறையாடப்பட்டன. பயிர்களை அழித்ததுடன் கால்நடைகளைக் கவர்ந்து சென்றனர்.

இத்தகைய சூழலில் மேவாரின் மகாராணர் பிஜோலியா ஜாகிர் குறித்து ஆய்வு நிகழ்த்த 1919 ஏப்ரலில் உத்தரவிட்டு மூவர் கொண்ட விசாரணைக் குழுவை நியமித்தார். தம் தலைவர்கள் அய்ம்பது பேரையும் விடுவித்தால்தான் விசாரணைக்குழுவிடம் பேசமுடியும் என்று கூறும்படி, பத்திக் குடியானவர்களை அறிவுறுத்தினார். அக்குழுவிடம் வழங்க மனு ஒன்றையும், தயாரித்துக் கொடுத்தார். கல்வி மருத்துவ வசதிகள் ஏற்படுத்தித் தரவேண்டும் என்ற வேண்டுகோளும் அம்மனுவில் இடம் பெற்றிருந்தது. இம்மனு விசாரணை ஆணையத்திடம் ஏற்படுத்திய தாக்கத்தினால், குடியானவர் தலைவர்கள் அய்ம்பது பேரையும் விடுவிக்கும்படி அது உத்தரவிட்டது. சிறிதளவு வரிக்குறைப்பும் செய்தது. ஆனால் இது நடைமுறைப்படுத்தப்படவில்லை. இதன் பின்னர் ஆங்கில ஆட்சியில் இருந்த ஆஜ்மீரில் தங்கி பிஜோலியா குடியானவர்களை பத்திக் வழிநடத்திக் கொண்டிருந்தார். ஜாகிரின் ஆணைகளுக்குக் கீழ்ப்படிய வேண்டாம் என்றும் வரிசெலுத்தவும், கட்டாய வேலை செய்யவும் மறுக்கும்படியும், ஜாகிரின் தலைமை அலுவலத்திற்குச் செல்ல வேண்டாமென்றும் அறிவுறுத்தினார். இவை தவிர பின்வரும் புதிய வேண்டுகோள்களையும் முன்வைத்தார்.

- குடிப்பதை நிறுத்த வேண்டும்.
- இறப்பு விருந்துகளை நிறுத்த வேண்டும்.
- ஜாகிர் நிலங்களில் பயிரிட வேண்டாம்.
- அந்நியத் துணிகளைப் புறக்கணிக்க வேண்டும்.
- அவ்வப்பகுதியில் உள்ள பனியாக்களையும் வட்டித் தொழில் புரிவோரையும் புறக்கணிக்க வேண்டும்.

இவ்வேண்டுகோள்கள் நல்ல பயனை அழித்தன. ஜாகிரின் வருவாயும் சிறு ஜாகிர்தார்களின் வருவாயும் குறைந்து போயின. மிகுந்த நெருக்கத்திற்கு ஆளான நிலையில் சிறு ஜாகிர்தார்கள் பத்திக்கை அணுகி, குடியானவர்களின் கோரிக்கைகளை ஏற்றுக் கொள்வதாகக் கூறினார். அவரும் அவர்களது நிலங்களில் பயிர் செய்து உரிய நிலவாடகையைக் கொடுக்கும்படிக் கூறினார். இப்பொழுது அவர் காந்தியவாதியாக மாறி இருந்தார். வன்முறையற்ற போராட்ட வழியில் இருந்து விலகி வன்முறைப் போராட்டத்தில் ஈடுபடுவது, போராட்டங்களைக் கடுமையாக ஒடுக்குவதை நியாயப்படுத்த, ஆட்சியாளர்களுக்கு உதவும் என்பது அவரது கருத்தாக இருந்தது.

1921-இல் கிசான் சபை கூறியதன் அடிப்படையில் குடியானவர்கள் சாகுபடி செய்தனர். பழைய சாகுபடிப் பாக்கியைச் செலுத்திய பின்னரே தற்போதைய சாகுபடிக் கணக்கு ஒழுங்கு செய்யப்படும் என்று ஜாகிர் அதிகாரிகள் கூறிவிட்டனர். குடியானவர்கள் அதை ஏற்றுக்கொள்ளாமல் அறுவடை செய்து விளைச்சலைக் கொண்டு சென்றனர். அதிகாரிகள் படைவீரர்களை அனுப்பினர். ஆனால் தானியங்களைக் கைப்பற்ற படைவீரர்கள் மறுத்துவிட்டனர். வேறுவழியின்றி ஆஜ்மீரில் பேச்சு வார்த்தைக்கு அதிகாரிகள் வந்தனர். இறுதியில் மீண்டும் போராட்டம் தொடங்கியது. இப்போது அருகில் உள்ள ஒன்பது ஜாகிர்களின் குடியானவர்களும் போராட்டத்தில் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வுகள் நிகழ்ந்து கொண்டிருந்த போது, ராபர்ட் ஹாலந்து என்ற ஆங்கிலேயர் ராஜபுதனாவில் அரசியல் முகவராகப் பணியாற்றி வந்தார். தலத்தில் செயல்படும் ராஜபுத்திர ஜாகிர்தார்கள் மற்றும் அவர்களது கைக்கூலிகளின் வழிமுறைகளை ஆதரிக்கமுடியாது என்பதை அவர் உணர்ந்திருந்தார். இராஜஸ்தான் குடியானவர்களின் கிளர்ச்சிகளில் நியாயம் உள்ளது என்பதும் அவரது கருத்தாக இருந்தது. இப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் மகாராணா தடைக்கல்லாக இருப்பதையும் அவரது அதிகாரிகள் ஊழல் புரிபவர்களாகவும், சுயநலவாதிகளாகவும் இருப்பதையும் நீதிவழங்குதல் குறைபாடுமிக்கதாக இருப்பதையும் அவர் கண்டறிந்தார். நீக்குபோக்கு இல்லாதவராகவும் பிற்போக்கான சிந்தனை கொண்டவராகவும் விளங்கும் தற்போதைய மகாராணாவை அப்பதவியில் இருந்து நீக்குவதன் வாயிலாகவே குடியானவர் பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியும் என்ற முடிவுக்கு வந்தார்.

இம்முடிவின் அடிப்படையில் தந்தையைப் போலன்றி, கல்வியறிவும், பரந்த மனப்பான்மையும் கொண்ட அவரது மகனிடம் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைக்கும்படி வற்புறுத்தினார். முதலில் இதை ஏற்றுக்கொள்ள மறுத்த மகாராணா வேறு வழியின்றி, தன் மகனிடம் தன் அதிகாரங்களை வழங்குவதாக வெளிப்படையாக அறிவித்தார்.

– தொடரும்

## தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம்
## நியூ செஞ்சுரி புத்தக நிறுவனம்

இணைந்து நடத்தும்

# இலக்கியப் போட்டி 2019

## அறிவிப்பு

*31-வது ஆண்டாக, படைப்பாளிகளுக்குக் கீழ்க்கண்ட வகைகளுக்குப் போட்டி அறிவிக்கப்படுகிறது:*

1. சிறந்த ஆய்வு நூல்கள்

பேராசிரியர் நா. வானமாமலை நினைவு விருது ● முதுமுனைவர் வ.ஐ. சுப்பிரமணியன் நினைவு விருது

2. சிறந்த மொழிபெயர்ப்பு நூல்கள்

தொ.மு.சி. ரகுநாதன் நினைவு விருது ● அறந்தை நாராயணன் நினைவு விருது

3. சிறந்த நாவல்கள்

அழகியநாயகி அம்மாள் நினைவு விருது ● தென்னமநாடு இராமசாமி–மாரியம்மாள் நினைவு விருது

4. சிறந்த சிறுகதை நூல்கள்

எழுத்தாளர் தனுஷ்கோடி ராமசாமி நினைவு விருது ● திருமதி சுந்தரி சாந்திலால் நினைவு விருது

5. சிறந்த சிறுவர் நூல்கள்

தவத்திரு குன்றக்குடி அடிகளார் நினைவு விருது ● எம். கௌதம் நினைவு விருது

6. சிறந்த கவிதை நூல்கள்

கவிஞர் கே.சி.எஸ். அருணாசலம் நினைவு விருது ● பின்னையூர் மா. சண்முகம் நினைவு விருது

7. சிறந்த கட்டுரை நூல்கள்

என்.சி.பி.எச். இராதாகிருஷ்ணமூர்த்தி நினைவு விருது ● மேலவாசல் கோ. இராமசாமி நினைவு விருது

8. சிறந்த குறும்படம்

தோழர் பா. முத்துசாமி நினைவு விருது

9. சிறந்த ஆவணப்படம்

பி.என்.பாலு–பாக்கியலட்சுமி நினைவு விருது

- *பரிசுக்கான (1 - 5) நூல்கள் 2015-க்கு முன் வெளிவந்தவையாக இருக்கலாகாது.*
- *பிற பரிசுகளுக்கான (6 - 7) நூல்கள் 2018, 2019-களில் வெளிவந்தவையாக இருக்க வேண்டும்.*
- *பரிசுக்கான 8, 9-வது பிரிவுக்கு 2018, 2019-களில் தயாரிக்கப்பட்ட படங்கள் அனுப்பப்பட வேண்டும்.*
- *நூல்கள் அச்சுப் படிகளாகவோ கையெழுத்துப் படிகளாகவோ இருக்கலாம். கையெழுத்துப் படிகள் அச்சில் 90 பக்கங்கள் வருமாறு இருக்க வேண்டும்.*
- *படைப்பாளிகள் இப்போட்டிகளில் 2014-க்குப் பிறகு பரிசு பெற்றவர்களாக இருக்கலாகாது.*
- *போட்டிக்கென தனி நுழைவுப் படிவம் இல்லை. படைப்பாளிகளின் முகவரி, தன்குறிப்பு, நூல் / குறுந்தகடு பற்றிய சிறுகுறிப்பு ஆகியவற்றுடன் நூலின் / குறுந்தகட்டின்* **இரண்டு படிகள்** *அனுப்புக. தொலைத் தொடர்பு எண், மின்னஞ்சல் முகவரி தெரிவிக்க.*
- *படைப்புகளை 31-07-2019-க்கு முன் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்புக:*

முனைவர் நா. இராமச்சந்திரன்,
55/3, பீட்டர் தெரு, எஸ்.டி.சி. சாலை,
பெருமாள்புரம்,
திருநெல்வேலி – 627007
*பேச: 9443554805 மின்னஞ்சல்:* nrfolk@gmail.com

இரா. காமராசு
மாநிலப் பொதுச் செயலாளர்

சி. சொக்கலிங்கம்
மாநிலத் தலைவர்

நா. இராமச்சந்திரன்
செயலாளர் – இலக்கியக் குழு



# இராஜீவ்காந்தி மருத்துவக்கல்லூரி ஒரு வரலாற்றுப் பார்வை

டாக்டர் சு. நரேந்திரன்




*180 ஆண்டுகள் பழைமை வாய்ந்த அன்றைய மதராஸ் மருத்துவக் கல்லூரி, 255 ஆண்டுகளுக்கு முன் ஆரம்பித்த அரசு பொது மருத்துவமனையுடன் இணைந்து, 2722 படுக்கை வசதிகளுடன் ஆசியாவிலேயே பெரிய மருத்துவமனைகளில் ஒன்றாகச் சிறப்பான வசதிகளுடன் இன்று இராஜீவ்காந்தி மருத்துவமனை என்ற புதுப் பெயருடன் நவீன வசதிகளுடன் புதுப்பொலிவுடன் இயங்குகிறது.*

இம்மருத்துவமனையும், கல்லூரியும் சுமார் 47.5 ஏக்கரில் சென்னை பெரு நகரத்தின் மையத்தில் மையத் தொடர்வண்டி நிலையத்திற்கு அருகில் தென்னக இரயில்வே அலுவலகத்திற்கு எதிரில் அமைந்துள்ளது. இந்தியாவிலேயே இங்குதான் முதன்முதலில் முதுநிலை மருத்துவப்பட்டப் படிப்பு ஆரம்பிக்கப்பட்டது. தற்பொழுது இக்கல்லூரியில் 5 இளநிலை பட்டப்படிப்பு, டி.எல்.ஓ., டி.எம்.ஆர்.டி. போன்ற 17 உயர்நிலை பட்டச் சான்றிதழ் படிப்பு, எம்.டி. போன்ற 25 உயர்நிலை மருத்துவப் படிப்பு, இதய அறுவை, இரைப்பை, குடல் அறுவைக்கான எம்.சி.ஹெச், டி.எம். போன்ற 14 மிக உயர்ந்த பட்டப்படிப்பு ஆகியவைகள் கற்பிக்கப்படுகின்றன. இக்கல்லூரியில் ஆங்கிலம் பேசும் நாடுகளில் முதன்முறையாக ஒரு பெண் மருத்துவம் பயின்று பட்டம் பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

பிறகு மதராஸ் பல்கலைக்கழகத்துடன் 1857 - அல் இணைந்து 1988 வரை நீடித்து, அதன் பிறகு தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகம் என்ற பெயரில் மருத்துவத்திற்காக தமிழ்நாட்டில் தொடங்கிய புதிய பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டது.

மருத்துவக் கல்லூரியின் வரலாற்றைத் திரும்பிப் பார்க்கையில் பல நிகழ்ச்சிகள் நம் கவனத்திற்கு வருகின்றன. இக்கல்லூரியின் அலுவலகக் கட்டிடம் இருபக்கமும் வளைவாக இருப்பதால் "ஜீரோ ஹால்" என்று மாணவர்களால் அழைக்கப்படுகிறது. இக்கல்லூரி வளாகத்தில் கிழக்கே கால் பந்தாட்ட மைதானத்தை ஒட்டி, இந்திய முகமதிய கட்டிடக் கலை பாணியில் சிகப்பு வண்ணம் பூசப்பட்ட கட்டிடம் செங்கோட்டை என அழைக்கப்படுகிறது. இது, உடல்கூறு பாடம் கற்பிக்கப்படும் கட்டிடமாக 1906லிருந்து திகழ்கிறது. இதில் உள்ள வகுப்பறைகளில் அமரும் பெஞ்சுகள் கீழிலிருந்து மேலே உயர்ந்து கூரைவரை செல்லக்கூடியதாக உள்ளன. இங்குள்ள மர நாற்காலி, மேசை உட்பட அனைத்தும் அக்காலத்திலேயே செய்யப்பட்டவை. இச்செங்கோட்டைக்குச் சற்று மேற்கே 1940ஆம் ஆண்டுவரை ஒரு கல்லறையும், நினைவுச் சின்னமும் இருந்தன. இது டாக்டர் எட்வர்ட் பல்க்கி (Dr. Edward Balkley) யுடையதாகும். இவர் 1692இல் பொதுமருத்துவமனைக்கு தலைவராய் இருந்து சட்ட மருத்துவத்திற்கான முதல் சவப் பரிசோதனை செய்து அறிக்கை சமர்ப்பித்தார். இத்துடன் இந்தியாவிலேயே முதன்முறையாக 1693 ஆகஸ்ட் 28-ஆம் தேதி நோயுற்ற நிலையில் விடுமுறை அளிக்கும் சான்றிதழ் வழங்கிய பெருமை இவரைச் சாரும். (Madras rediscovered - p. 338)

இதன்பிறகு இரண்டு ஆண்டுகள் கழித்து முதன்முறையாக காயமடைந்ததற்கான சான்றிதழையும் சட்ட மருத்துவத்திற்கு உதவும் விதமாக வழங்கினார். இவர் அக்காலத்தில் மதராசின் சிறந்த குடிமகனாகப் போற்றப்பட்டார். 1714-இல் இறந்தபிறகு இவர் புதைக்கப்பட்ட இடம் இவருடைய சொந்தத் தோட்டம் ஆகும். இவரை அடுத்து அக்கால கட்டத்தில் நினைவுகூரத்தக்கவர்கள் ஜான் வால்டோ மற்றும் ப்சாலியல் சர்மேன் (John Waldo & Bezaliel Sherman). இவர்கள் 1678 - இல் இந்தியாவில் முதன் முறையாகக் காவலில் அடைக்கப்பட்டிருந்த தாமஸ் சாவேஸ் என்ற மது அருந்திய நபரை அங்கிருந்த காவலர் கழுத்தில் காலால் உதைத்து இறந்ததைக் குறித்துச் சான்றிதழ் வழங்கினார்கள்.

1934இல் கட்டப்பட்ட அறுவை சிகிச்சைப் பகுதிக் கட்டிடத்திற்கு 1924இல் அறுவை சிகிச்சைப் பேராசிரியர் மற்றும் பொது மருத்துவமனையின் கண்காணிப்பாளராகப் பணியாற்றிய எர்னெஸ்ட் பிராட்ஃபீல்டு (Ernest Bradfield) என்பவரின் பெயர் சூட்டப்பட்டது.

### கலா அசார் நோய்க்குக் காரணம் என்ன?

இவைகளைவிட மிக முக்கியமானது கலாஅசார் நோய். 1824இல் இறப்பை ஏற்படுத்தும் நோய் என அறிந்த பின்னர், மூன்று ஆண்டுகளில் 7,50,000 நபர்கள் இறந்தனர். இதுவே பிறகு ஒரு தொடர்கதையாகி 20-ஆம் நூற்றாண்டுவரை நீடித்தது. கர்னல் சார்லஸ் அடானோவான் 1903 - இல் இந்நோய்க்கான தொற்றுண்ணியைக் கண்டுபிடித்தமைக்கான பாராட்டும் நினைவுக்கல் முக்கிய வளாகக் கட்டிடத்தில் மெயின் பிளாக்கில் இருந்தது. இப்போது அது காணப்படவில்லை. டோனோவான் இந்தியாவில் 1863 - இல் பிறந்து டப்லின் டிரினிடி கல்லூரியில் படித்தபின் இக்கண்டுபிடிப்பின்போது இவர் உடல் இயங்கியல் பேராசிரியராக மதராஸ் மருத்துவக் கல்லூரியில் பணியாற்றுவதற்கு முன் இரண்டாவது மருத்துவராக ஹொவ்லாக் வார்டில் பணியாற்றி ஆராய்ச்சி செய்து கொண்டிருந்தார். இக்கண்டுபிடிப்பு லண்டனுக்கு மூன்று மாதங்கள் கழித்தே சென்றடைந்தது. அச்சமயத்தில் அங்கு லீஸ்மேன், (Leishman) என்பவரும் இதே தொற்றுண்ணியைக் கண்டுபிடித்து அறிவித்துவிட்டார். ஆகவே, அத்தொற்றுண்ணிக்கு லீஸ்மேன் டோனோவான் என இரண்டு பெயர்களையும் இணைத்து பெயரிடப்பட்டன என்பது ஒரு சோகக் கதை. பிறகு டோனோவான் மதராஸ் மருத்துமனையின் அங்கமான

தன்னுடைய மருத்துவ ஆலோசனையை காலை 6.30 மணிக்குத் தொடங்கி, தன் வீட்டின் ஜன்னல் அருகில் அமர்ந்து நோயாளியிடம் ஆலோசனைக்கான பணத்தைக் கேட்டுப் பெறாமல் அவர்களையே பணத்தை எதிரில் உள்ள உண்டியலில் போட்டுவிடக் கூறுவாராம்.

இராயப்பேட்டை மருத்துவமனைக்கு 1912இல் கண்காணிப்பாளரானார். இம்மருத்துவமனையில் இவரால் கரும்பலகையில் வரையப்பட்ட கலா அசார் தொற்றுண்ணியின் படம் கண்ணாடிப் பெட்டகத்தில் இன்றும் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

மற்றொரு பெயர் பொறித்த நினைவுக்கல் டாக்டர் முகமுது அப்துல்லா உறைவிட மருத்துவ அலுவலகப் பணியாளராகப் பணிபுரிந்து கொண்டிருந்த பொழுது சமையற்காரரால் சமையல் பொருட்கள் கணக்கில் குறைவாக உள்ளதைக் கண்டுபிடித்ததால் 1947 - இல் கொலை செய்யப்பட்டதன் நினைவாக உள்ளது. இக்கொலைக்குக் காரணமாக இன்னொரு கருத்து பாலில் கலப்படம் செய்ததைக் கண்டுபிடித்தமைக்காகக் கூரையின் ஓட்டைப்பிரித்து கீழே குதித்து கொலை செய்யப்பட்டார் என்பதாகும். (Madras rediscovered - p. 339)

**பறக்கும் டாக்டர்**

கல்லூரியின் வாசலருகில் டாக்டர் எஸ். ரங்காச்சாரியின் முழு உருவச் சிலை நின்றுகொண்டிருக்கிறது. அவர் ரோல்ஸ்ராய் என்ற விலை உயர்ந்த காரை அக்காலத்திலேயே வைத்திருந்தார் என்பது அக்காலத்து சென்னைவாசிகளுக்கான அதிசயம்.

மேலும் இவர் தனக்காக ஒரு விமானம் வைத்திருந்ததும், அக்காலத்திய பெரிய செய்தியாகும். இது குறித்து மக்கள் இவரைப் 'பறக்கும் டாக்டர்' என்று செல்லமாக அழைப்பது வழக்கம். ரோல்ஸ்ராய் காரை இவர் வைத்திருப்பதைக் குறித்து கேட்கும்பொழுது, "நாள்முழுதும் நான் நோயாளிகளைப் பார்ப்பதற்குச் செல்ல எல்லா வசதிகளையும் கொண்ட காரை வைத்துள்ளேன். இந்நிலையில் எனக்கு எதற்குப் பெரிய அளவில் வீடு" என்று கூறுவாராம்.

இதுபோல மற்றொரு சிலை மருத்துவக் கல்லூரிக்கு எதிர்ப்புறமாக மருத்துவமனை வளாகத்தில் முதல் இந்திய மருத்துவப் பேராசிரியராக 30 ஆண்டுகள் பணிபுரிந்த ஏழைப் பங்காளரான சித்த மருத்துவ முன்னேற்றத்தைக் கவனத்தில் கொண்ட டாக்டர் எம்.ஆர்.குருசாமி முதலியாரின் சிலை உள்ளது.

இவரே "மெட்டீரியா மெடிகா" என்னும் மருந்துகளின் பயன்பாடு குறித்த நூலை எழுதி வெளியிட்டவர். இது அக்காலத்தில் ஆங்கிலம் பேசும் அத்தனை நாடுகளிலும் மருத்துவ மாணவர்களால் படிக்கப்பட்டன. இவர் தன்னுடைய மருத்துவ ஆலோசனையை காலை 6.30 மணிக்குத் தொடங்கி, தன் வீட்டின் ஜன்னல் அருகில் அமர்ந்து நோயாளியிடம் ஆலோசனைக்கான பணத்தைக் கேட்டுப் பெறாமல் அவர்களையே பணத்தை எதிரில் உள்ள உண்டியலில் போட்டுவிடக் கூறுவாராம். இவருடைய நன்கொடையினால் ஒரு உயர்நிலைப் பள்ளி சென்னையில் 28 ஏக்கரில் நடைபெற்று வருகிறது.

**கல்லூரியின் மற்றைய பெருமைகள்**

இம்மருத்துவமனையில் புகழ்பெற்ற அறுவை சிகிச்சைப் பகுதி 1934 மார்ச் 26 மதராஸ் கவர்னர் சர் ஜார்ஜ் ஸ்டான்லியால் திறக்கப்பட்டது. பிறகு மூளை, நரம்பு அறுவை, இதய நுரையீரல் அறுவை, இரைப்பை, குடல் நோய், சிறுநீரக அறுவை,

நாள்முழுதும் நான் நோயாளிகளைப் பார்ப்பதற்குச் செல்ல எல்லா வசதிகளையும் கொண்ட காரை வைத்துள்ளேன். இந்நிலையில் எனக்கு எதற்குப் பெரிய அளவில் வீடு என்று கூறுவாராம்.

எலும்பு முறிவுத்துறை என தற்பொழுது பிரிந்து தனித்தனியாக இயங்கி வருகின்றன.

**மூளை நரம்பியல் துறை**

1968இல் இக்கட்டிடத்திற்கான அடிக்கல்லை நாட்டியவர் அன்றைய முதல்வர் திரு சி.என்.அண்ணாதுரை. பிறகு 1972 பிப்ரவரி 9இல் இந்திய ஜனாதிபதி டாக்டர் வி.வி.கிரியால் திறந்து வைக்கப்பட்டது. இக்கட்டிடம் கட்ட முழுமூச்சாகப் பாடுபட்டவர் நரம்பியல் அறுவை சிகிச்சைப் பேராசிரியர் டாக்டர் பி.ராமமூர்த்தி அவர்கள்.

**இதய நுரையீரல் துறை**

1966 எப்ரல் 13-ஆம் தேதி அன்றைய முதல்வர் திரு எம்.பக்தவத்சலத்தால் அடிக்கல் நாட்டப்பட்டு, கட்டிடத்திற்கான மூலைக்கல், குழந்தைகளுக்கான இதய மருத்துவத்துறையை நிறுவியவரும் இதய பிறவிக் குறைபாட்டிற்கான புதிய அறுவை சிகிச்சையைக் கண்டுபிடித்தவருமான ஜான் ஹாப்கின் பல்கலைக் கழகச் சிறப்பு நிலைப் பேராசிரியர் ஹெலன் பி.டசிக் எம்.டி.யால் வைக்கப்பட்டது. இந்நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கியவர் சென்னைப் பல்கலைக்கழகத் துணை வேந்தர் டாக்டர் ஏ.எல்.முதலியார். பின்னர் 1972 ஏப்ரல் 7 ஆம் தேதி அன்றைய தமிழக முதல்வர் மு.கருணாநிதியால் திறந்து வைக்கப்பட்டது. (IJS Vol.69, 2007. p. 167)

இம்மருத்துவமனையில் 1900இல் ரான்சன் எக்ஸ்ரேயைக் கண்டுபிடித்த 5 ஆண்டுகளுக்குப் பிறகு தென்கிழக்கு ஆசிய நாடுகளிலேயே முதன்முறையாக எக்ஸ்ரே நிறுவப்பட்டது. இது பேட்டரியில் இயங்கியது. எக்ஸ்ரே பகுதி கேப்டன் டி.டபிள்யு. பெர்னான்ட்டின் பெயரிடப்பட்டு ஒரு தனி இயக்கமாக 1934 மார்ச் 26இல் திறக்கப்பட்டது.,

ஆனால், இதற்கு முன்பே மருத்துவமனையில் தற்காலிகமாக இவ்வியக்கம் லார்ட் லேடி வெலிங்டனால் 1922 மார்ச் 17 அன்று திறக்கப்பட்டது.

தற்பொழுது தமிழ்நாட்டிலேயே முதன்முதலாக அரசுக் கல்லூரியில் எம்.ஆர்.ஐ கருவி இங்கு நிறுவப்பட்டுள்ளது.

இக்கல்லூரியில் 165 மாணவர்கள் தற்பொழுது இளநிலைப் படிப்பிற்கு மருத்துவக் கல்வி இயக்குநரால் அனுமதிக்கப் பட்டிருக்கின்றனர். இதில் 15 சதவீதம் அகில இந்திய மாணவர் பங்கீட்டுக்காக ஒதுக்கப்படுகிறது. மற்றவைகள் தமிழக அரசு விதிகளின்படி 69 சதவீத ஒதுக்கீட்டு முறையில் மாணவர்கள் அனுமதிக்கப்படுகின்றனர். இவ்விதியில் சில மாற்றங்களுடன் 'நீட்' தேர்வு மூலம் மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

**முக்கியமான நிகழ்வுகள்**

இம்மருத்துவக் கல்லூரியில் 1852 இல் முதல் தொகுதி மாணவர்கள் பட்டம் பெற்றனர். சென்னையின் முதல் மாணவியாக முத்துலட்சமி ரெட்டி 1912 இல் பட்டம் பெற்றார். உலகில் 4 பெண்மணிகள் முதன்முதலாக இக்கல்லூரியில் அனுமதிக்கப்பட்டனர். இதில் ஒருவர் மேரிசெர்லிப்.

பேராசிரியர் சாம் ஜி.பி.மோசஸ் நீரிழிவு நோய்க்கான பிரிவை இந்தியாவில் முதன்முறையாக 1953 - இல் இக்கல்லூரியில் ஆரம்பித்து, "நீரிழிவு நோயின் தந்தை" எனப் புகழ்பெற்றார். 1957 இல் மிகக் குறைந்த வயதில் பேராசிரியராகப் பதவியேற்றார். இதுபோல் டாக்டர் ஏ.எல்.முதலியாரின் மகனாக பேராசிரியர் ஏ.வேணுகோபால் இளநிலை, முதுநிலை பட்டப்படிப்புகளைச் சென்னை மருத்துவக் கல்லூரியிலேயே படித்து, சிறுநீரக அறுவைப் பிரிவைத் தொடங்கினார். இவர் அடிப்படை மருத்துவ விஞ்ஞான மேல்நிலை இயக்கத்திற்குக் கௌரவ இயக்குநராகப் பணிபுரிந்ததுடன், மருத்துவ மன்றச் செயல் கமிட்டியின் (MCI) உறுப்பினராக செயல்பட்டார். (1975 - 83) ஆசியாவிலேயே முதல் பெண் அறுவை நரம்பியல் மருத்துவரான டாக்டர் எஸ்.கனகா பேராசிரியராகப் பணிபுரிந்து மூளை அறுவை சிகிச்சையில் பல நவீன சிகிச்சை முறைகளைக் கண்டுபிடித்தார். இதில் மிக முக்கியமானது ஸ்டிரியோடாக்டிக் என்ற மூளையின் ஆழமான பகுதியை மின்தூண்டுதல் செய்து நோய்களுக்கு மருத்துவம் அளிப்பது ஆகும். (Indian J.Sur. 2007. p. 163)

இம்மருத்துவக் கல்லூரியின் மற்றொரு சிறப்பு இந்தியாவில் எய்ட்ஸ் நோய் டாக்டர் சுனிதா சாலமனால் முதன்முதலில் கண்டுபிடிக்கப்பட்டது. டாக்டர் கே.சதாசிவம்தான் முதன்முதலில் இதய நெஞ்சக அறுவை சிகிச்சைப் பிரிவை ஆரம்பித்தார். இதேபோல டாக்டர் பி.ராமமூர்த்தி நரம்பியல் இயக்ககத்தைத் தொடங்கி இந்தியாவில் முதல் தலைக் காயத்திற்கான பகுதியைத் தொடங்கினார். பேரா.என்.ரங்கபாஷ்யம் இரைப்பைக் குடல் அறுவை சிகிச்சைக்கான உயர்மட்ட பட்டமான எம்.சி.எச் (M.ch) பட்டப்படிப்பைத் தொடங்கினார். (The National Medicine Journal of India, p. 118-119)

●



# பிளேக், குளஉடைப்பு பற்றி சிந்து பாடிய கம்பம் கவிஞன்

அ.கா.பெருமாள்

எண்பதுகளின் இறுதியில் கொடைக்கானல் செம்பானூர் புனித கல்லூரி விடுதியில் நடந்த நாட்டார் வழக்காற்றியல் பயிற்சிப் பட்டறையில் கலந்துகொண்டபோது அங்கிருந்த கல்லூரி அருங்காட்சியக நூலகத்திற்குப் போனேன். தமிழினி பதிப்பகத்திற்காக வேதசாட்சி தேவசகாயம் பிள்ளையைப் பற்றிய செய்திகள் சேகரிக்க வேண்டிய அவசரத்தில் அப்போது இருந்தேன்.

**19 ஆம் நூற்றாண்டு புத்தகங்கள்**

அந்த நூலகத்தில் இருந்த வயதான நூலகரிடம் தேவசகாயம் பிள்ளை பற்றிய நூற்களைக் கேட்டேன். அவர் அள்ளிப்போட்ட கூட்டத்தில் அந்தோணிமுத்து பிள்ளையின் புத்தகங்களும் இருந்தன. அவற்றில் 19ஆம் நூற்றாண்டு புத்தகங்களும் உண்டு. பெரும்பாலும் எல்லாம் சிறுபிரசுரங்கள். குஜிலி பதிப்பு மாதிரி.

**அந்தோணிமுத்து**

அந்தோணி முத்துப்பிள்ளை தன் சமகாலத்தில் நடந்த விஷயங்களை (பிளேக் நோய் பரவல், வெள்ளப் பெருக்கு, சல்லிக்கட்டு) நாட்டார் மரபுச் சந்தங்களை அடியொற்றி பாடியிருக்கிறார். அவர் எழுதிய கீர்த்தனைகள், நாடகங்கள் பற்றியே அதிகம் முன்னிறுத்தப் படுவதால் அவரின் சிந்துப்பாடல்கள் அறியப்படவில்லை.

அந்தோணிமுத்து தேனி மாவட்டம் உத்தமபாளையம் வட்டம், கம்பம் பகுதியில் அனுமந்தன்பட்டி கிராமத்தில் 1863இல் பிறந்து 1929 இல் மறைந்தார். தந்தை சவரிமுத்துசாமிப்பிள்ளை, தாய் சின்னம்மா. கார்காத்த வேளாள மரபினர்.

**யாப்பு படித்தவர்**

அந்தோணி உள்ளூர் திண்ணைப் பள்ளிக்கூடத்தில் மூன்றாம் வகுப்பு வரைதான் படித்திருக்கிறார். தந்தையின் விவசாயத் தொழிலில் தீவிரமான சமயத்தில் தானாய் தமிழ்ப் படித்திருக்கிறார். இவரது மொத்தப் படைப்புகளைப் படிக்கும்போது இவர் யாப்பு முறையாய் படித்திருக்கிறார் என்று தெரிகிறது. கம்பத்தில் அக்காலத்தில் பிரபலமாயிருந்த தமிழ்ப் புலவர் மதுரகவி சீனிவாச அய்யங்காருடன் அந்தோணிமுத்துவிற்குத் தொடர்பு உண்டு. பழம் இலக்கியங்களையும் யாப்பையும் படிக்க அய்யங்கார் காரணமாயிருந்திருக்கிறார்.

**தமிழ்ப்புலமை**

அக்காலத்தில் கம்பம் பகுதியில் உள்ள கிராமங்களில் அழகர்சாமி நாயுடு, சேசாத்திரி நாயுடு, சுப்பையாக்கோன், தங்கம் பிள்ளை, சவரிமுத்துப் பிள்ளை எனத் தமிழ்ப்புலவர்கள் சிலர் இருந்தனர். இவர்கள் முறையாகத் தமிழ்ப் படித்தவர்கள், புலமை உடையவர்கள். அந்தோணிமுத்து இவர்களுடன் சமமாக அமர்ந்து விவாதிக்கவும் பாடல்கள் இயற்றவும் வல்லமை உடையவராக இருந்தார்.

**சங்கீதம் அறிந்தவர்**

இவருக்கு சங்கீத ஞானம் உண்டு. இவரது பாடல்கள் சிலவற்றில் ராகதாளங்கள் உண்டு. இவர் சங்கீதம் யாரிடம் படித்தார் என்பதெல்லாம் தெரியவில்லை. ஆனால், இசையுடன் பாடியிருக்கிறார்.

**நாட்டார் மரபு**

இவர் எழுதிய பாடல்களில் பெரும்பாலானவை நாட்டார் மரபு சார்ந்த சந்தம் உடையவை. இவர் கத்தோலிக்க மரபுவழி இலக்கியங்களை நுட்பமாய் அறிந்திருக்கிறார். இவர் எழுதிய இரட்சண்ய சிந்து தலைப்பில் உள்ள பாடல்கள் தேம்பாவணியின் சாரம் எனக் கூறலாம். இதில் சில பாடல்கள் அண்ணாமலை செட்டியாரின் காவடிச்சிந்து வடிவத்தை ஒட்டி எழுதப்பட்டவை

**தேம்பாவணி விளக்கம்**

அந்தோணிமுத்து தன் சொந்த ஊரான அனுமந்தன்பட்டியிலும் அதைச் சுற்றியிருந்த கிராமங்களிலும் தேம்பாவணி என்னும் காவியத்தைக் கொண்டு சென்றிருக்கிறார். பண்டித சவரிமுத்துப் பிள்ளை என்பவர் தேம்பாவணியின் மூலப்பாடலை ராகத்துடன் பாட அந்தோணி முத்து அதற்கு உரையும் விளக்கமும் சொல்லியிருக்கிறார். இச்செய்தி சுற்றுவட்டாரங்களில் பரவியதும் இவரை அவர்கள் விரும்பி அழைத்திருக்கின்றனர். இந்த நிகழ்ச்சிகளுக்குச் சன்மானமும் பெற்றிருக்கிறார்.

**பாஸ்கா பாடல்கள்**

கம்பம் பகுதியில் உள்ள ஊர்களில் புனித சவேரியார் விழா நடக்கும்போது ஊர்வலம் வரும் சப்பரத்தின் முன்னே பாடுவதற்கென்றே புனிதர்களைப் பற்றிய இசைப்பாடல்களை அந்தோணி இயற்றியிருக்கிறார். அப்போது உத்தமபாளையம் வட்டத்தில் உள்ள இராயப்பன்பட்டியில் பாஸ்கா நாடகம் - நடந்தது. பாஸ்கா (Pascha) என்பது Passian Play எனப்படும்.

இந்த நாடக வகை கி.பி. 1581இல் அறிமுகமானது. இது தமிழ்த் தெருக்கூத்தும் போர்ச்சுக்கீசிய நாடகமும் கலந்தது. இந்த நாடகத்தில் இயேசுவின் இறப்பு தத்ரூபமாகக் காட்டப்படும். பாஸ்கா நாடகப்பாடல்களை எழுதியதற்காக இரண்டு சவரன் சன்மானம் பெற்றிருக்கிறார் அந்தோணி.

**நிலம் பரிசு**

கம்பம் பள்ளத்தாக்கில் உள்ள கோகிலாபுரம் என்ற கிராமத்தில் பொன்னுசாமித் தேவர் என்ற பெரும் செல்வந்தர் இருந்தார். அவரது மகனின் திருமணத்தில் மணமக்களைப் பாராட்டி அறிவுறுத்தி நீண்ட வாழ்த்துப் பாடல்கள் பாடினார் அந்தோணி. தேவருக்கு மகிழ்ச்சி தாங்க முடியவில்லை. அந்தோணியாருக்கு இரண்டரை ஏக்கர் நிலம் தானமாகக் கொடுத்தாராம்.

**அணி இலக்கணம்**

*அந்தோணியார் யாப்பு, தண்டியலங்காரம், மாறனலங்காரம் போன்ற இலக்கண நூற்களைப் படித்திருக்கிறார். ஒரு பொருளைக் கொடுத்துப் பாடச் சொன்னால் அடுத்த நிமிடமே இசையுடன் பாட ஆரம்பித்து விடுவாராம். இதனால் ஆசுகவி, மதுரகவி என்றெல்லாம் புகழப்பட்டிருக்கிறார். இவர் சித்திரக்கவிகள் ரத பந்தனம், நாக பந்தனம் முதலிய வடிவங்களில் பாடல்கள் எழுதியிருக்கிறார். இவர் எழுதிய நூற்கள் திரு இரட்சண்ய சிந்து, சரம கவிதைகள், கீர்த்தனைகள், கவர்னர் வரவேற்பு சிந்து, பிளேக் சிந்து, பிளேக் நொண்டிச் சிந்து, கம்பம் தாக்கப்பன் குள உடைப்பு சிந்து, சல்லிக்கட்டு சிந்து, புதுக்கால் சிந்து, தேவசகாயம் பிள்ளை நாடகம், எஸ்தாக்கியார் நாடகம், மர்த்தீன் நாடகம் அல்லது ஆட்டு வணிகன் நாடகம் ஆகியன.*

**அச்சில் வந்தவை**

*இவை தவிர புனிதர்களின் சொரூபங்களின் முன்னே பாடுவதற்கு எழுதப்பட்ட இசைப்பாடல்களும் தேம்பாவணி விளக்கம் போன்றவை முழுதும் அடையாளம் காணப்படவில்லை, கிடைக்கவும் இல்லை.*

*இந்தப் படைப்புகளில் தேவசகாயம் பிள்ளை நாடகம் 1910 இல் வடக்கன்குளம் இளைஞர் அமைப்பின் வழி வெளியிடப் பட்டிருக்கிறது. எஸ்தாக்கியார் நாடகம் கோயம்புத்தூர் கத்தோலிக்க பிரபுக்கள் முயற்சியால் 1909 இல் வெளிவந்தது. பிற படைப்புகள் எல்லாம் 1920க்கு வெளிவந்திருக்கின்றன. இவரது தேர்ந்தெடுத்த பாடல்களை, இவரது பேரன் அருள்பணி ஞா.பாக்கியராஜ், சே.ச., அவர்கள் வெளியிட்டுள்ளார். இந்நூல் இப்போது கிடைப்பதில்லை.*

**சல்லிக்கட்டு சிந்து**

*அந்தோணி முத்து எழுதிய சல்லிக்கட்டு சிந்து 24 பாடல்களைக் கொண்டது. உத்தமபாளையத்தில் ஒரு தைப்பொங்கல் விழாவில் அந்த ஊர் பிரமுகர் கருத்த ராவுத்தர் (இவர் பேரில் ஒரு கல்லூரி உள்ளது) தன் சொந்தச் செலவில் சல்லிக்கட்டு நடத்தியிருக்கிறார். இது 1905 - 07 ஆண்டுகளுக்குள் நடந்திருக்கலாம். சல்லிக்கட்டில் காளைகளின் போக்கு மக்களின் உற்சாகம் எல்லாம் சுவையாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன. சல்லிக்கட்டில் கலந்து கொண்டவர்கள் எல்லோருக்கும் கருத்த ராவுத்தர் சன்மானம் கொடுத்திருக்கிறார்.*

**அரிதான மாடு பிடித்தோர்க்கும் வேட்டி**

அரை மொட்டைக் காளையைப்
பிடித்தோர்க்கும் வேட்டி
கருத்த ராவுத்தர் புகழைப் பாராட்டி
கணக்கின்றி வாங்கினார்கள் கையை நீட்டி

*என்கிறார் ஆசிரியர்.*

**பிளேக் சிந்துகள்**

*1920-24ஆம் ஆண்டுகளில் தேனியைச் சுற்றியுள்ள பல கிராமங்களில் பரவிய பிளேக் நோயால் பலர் இறந்திருக்கின்றனர். இது குறித்து பிளேக் சிந்து (46 பாடல்கள்) நொண்டிச் சிந்து (43 கண்ணிகள்), என இரண்டு சிறு பிரசுரங்களை வெளியிட்டிருக்கிறார் (1924).*

*இச்சிறு நூலில் கம்பம் பகுதியில் எந்தெந்த கிராமங்களில் பிளேக் நோய் பரவியது. உதவியவர்கள் யாவர்; இறந்தவர்களை எப்படிப் புதைத்தார்கள் என்பன பற்றிய செய்திகள் உள்ளன. மதுரை மேனுவலில் (தேனி அப்போது மதுரை மாவட்டத்தில் இருந்தது) இல்லாத செய்திகள் இந்நூலில் உள்ளன.*

*உத்தமபாளையத்தில் 4000 பேர், சின்னமனூரில் 2000 பேர், கோம்பை நகரில் 500 பேர், கோவிலாபுரத்தில் 50 பேர், மேலும் இராயப்பன்பட்டி, அனுமந்தன் பட்டி, பாளையம்பதி போன்ற ஊர்களில் ஆயிரக்கணக்கில் பிளேக்குக்குப் பலியாயினர். இந்தச் சமயத்தில் கருத்த ராவுத்தர் மக்களுக்கு தாமாக முன்வந்து உதவி செய்தார். தனியாக ஒரு கம்பவுண்டரை ஏற்பாடு செய்து தடுப்பூசி போடச்செய்தார். மருந்து வாங்கவும் வேறு செலவுகளுக்கும் பணம் கொடுத்தார். இதை அந்தோணி முத்து,*

**மருந்தின்றி ஏழைச்சனங்கள் அனுதினமும்**

மடிவதைக் கண்டு மனமிரங்கி
மிக்க தரும குணவான் - முகம்மது
மீராவெனும் கருத்த ராவுத்தரும்
........
பூமான் கருத்த ராவுத்தர் செய்கின்ற
புண்ணியமே நிலைத்திருக்கும்
கண்ணியமென்பர்
இவரல்லவோ மனித ஜென்மம்

*என்று பாடுகிறார். ராவுத்தருடன் சாமுவெல் என்பவரும் (Sab Magistrate) உதவியிருக்கிறார்.*

பிளேக் ஐரோப்பாவிலிருந்து பம்பாய் வழி கோயம்புத்தூருக்கு வந்து தேனீயில் பரவியது. தேனீயில் பிளேக் உச்சக்கட்டத்திலிருந்த போது (ஐப்பசி மாதம்) அடமழை பெய்தது. வீடுகள் உடைந்தன; வீட்டுச் சாமான்கள் மிதந்தன. பிணங்களும் மிதந்தன.

அரசு அதிகாரிகள் உதவி செய்தது மாதிரி செய்திகளைக் கிளப்பிவிட்டனர் போலிசார் கம்பத்தைச் சுற்றிய கிராமங்களில் எஞ்சியிருந்த சிலரிடம் வீட்டைக் காலி செய்துவிட்டுப் போங்கள் எனக் கட்டாயப்படுத்தினர்.

நரிகளும் கழுதைப் புலிகளும் பகலிலேயே கிராமங்களில் நடமாடின. எங்கும் பிணவாடை. திருடர்களுக்குக் கொண்டாட்டம். பகலிலேயே பாத்திர பண்டங்களைக் கவர்ந்து சென்றனர். காவல்துறை இதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை.

பிணங்களை எரிக்க காய்ந்த விறகு கிடைக்காமல் குழி தோண்டிப் புதைத்தனர். குழி வெட்ட ஆளில்லை. ஒரே குழியில் இரண்டு மூன்று பிணங்களைப் போட்டு மண்ணைத் தள்ளினர். பிளேக் சாதிமத வேறுபாட்டை உடைத்துவிட்டது. மதச் சடங்குகள் இல்லாமலே பிணங்கள் அடக்கப்பட்டன. இதை விமர்சித்து வம்புபேசும் ஆட்களும் அடங்கிப் போனார்கள்.

**குள உடைப்பு சிந்து**

கம்பத்தில் 1909 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 13ஆம் தேதி பெருமழை பெய்தது. தொடர்ந்து பெய்த மழையால் வெள்ளம் வீடுகளில் புகுந்தது. அடுத்த நாள் புதன்கிழமை இரவு கம்பம் நகருக்கு மேற்கே உள்ள தாத்தப்பன் குளம் உடைந்து வெள்ளம் பெருக்கெடுத்து ஊருக்குள் புகுந்தது. வெள்ளம் தாத்தப்பன் கோவில் கல்மண்டபத்தைச் சாய்த்தது. இதே நேரத்தில் நாய்க்கன் குளமும் உடைந்தது. அடுத்தநாள் காலை வரை வெள்ளம் வடியவில்லை. உயிர் சேதம், பொருள் சேதம், கால்நடைகள் சேதம் எனச் சொல்லி மாளாது.

தாத்தப்பன் குளம், நாய்க்கன் குளம் உடைப்பு சேதம் பற்றி 20 பாடல்களில் ஒரு சிந்து எழுதியிருக்கிறார் அந்தோணி முத்து. இதன் இணைப்பாக மனோரஞ்சித அலங்கார மெட்டில் 10 தெம்மாங்குப் பாட்டுகளும் உண்டு.

**புதுக்கால் சிந்து**

கம்பம் குளம் உடைந்த பின்னர் அணையிலிருந்து புதிய கால் வெட்ட பொதுமக்களிடமிருந்து கோரிக்கை வந்தது. புதுக்கால்களும் வெட்டப்பட்டன. 1910-11இல் நடந்த இந்நிகழ்ச்சி பற்றி அந்தோணிமுத்து புதுக்கால் சிந்து என்ற தலைப்பில் 40 பாடல்கள் வெளியிட்டிருக்கிறார். இதன் இணைப்பில் 3 கண்ணிகள் கொண்ட 9 பாடல்கள் உள்ளன.

புதுக்கால் வெட்டவேண்டும் என்ற ஆலோசனை கூறப்பட்டதிலிருந்து தொடர்ந்து முயற்சி எடுத்தவர்கள் பொதுமக்களே. அதிலும் தியாகராஜ முதலியார் மகன் சுப்பிரமணிய முதலியார் பெரும் பணம் செலவழித்திருக்கிறார். அதோடு சுருளியில் அணைகட்ட முயற்சித்தவரும் இவரே.

**கீர்த்தனைகள்**

அந்தோணி முத்து, விழாக்களிலும் ஊர்வலங்களிலும் பாடுவதற்கென்றே கீர்த்தனைப் பாடல்கள் எழுதியிருக்கிறார். இவை பெரும்பாலும் புனிதர்களைப் பற்றியவை. இப்பாடல்களின் மெட்டுகள் - அக்காலத்தில் (1900 - 1925) பிரபலமாயிருந்த அரசியல் தலைவர்களைப் பற்றிய பாடல்களைப் பின்பற்றியவை (காந்தி மகான் வந்தாரே, சுயராஜ்யம் தூரமில்லை). சில பாடல்கள் நாட்டார் மரபிலிருந்து எடுக்கப்பட்டவை. (தசரத ராஜகுமாரா, பாண்டி மீனாட்சியே, வேலாவள்ளி மணாளா)


**நாடகங்கள்**

இவர் எழுதிய மூன்று நாடகங்களுமே கம்பம் வட்டார கிராமங்களில் நடிக்கப்பட்டிருக்கின்றன. ஒரு நாடகம் 3 முதல் 4 நாட்கள் வரை நடந்திருக்கிறது. பாடலும் வசனமும் கலந்த இந்த நாடகத்தை நடித்தவர்கள் உள்ளூர்க்காரர்களே. இவரது தேவசகாயம் பிள்ளை நாடகப் பிரதி ஈழத்தில் கிடைத்த செய்தியை ஒருமுறை பத்மநாப அய்யர் சொன்னார். கன்னியாகுமரி மாவட்டம் தோவாளை வட்டம் காற்றாடி மலை விழாவில் இந்த நாடகம் நடிக்கப்பட்டிருக்கிறது. அந்தோணி முத்துவின் பாடல்கள் படிக்க சிரமம் என்பதால் இதைப் பயன்படுத்தவில்லை என்பதை 70களில் கேட்டிருக்கிறேன்.

அந்தோணி முத்து கத்தோலிக்கர்தான். அவருக்கு கருத்த ராவுத்தரையோ சுப்பிரமணிய முதலியாரையோ பாராட்டுவதில் தயக்கம் இல்லை. இந்து புராண இதிகாசங்களிலிருந்து சில தொன்மங்களை (ஆதிசேஷன், ஆலவாய் அடிகள்) பயன்படுத்துவதில் வெறுப்பில்லை.

# இந்தியாவின் விடுதலைக்குப் பின் மக்களின் மாபெரும் எதிர்பார்ப்புகள்

சி.ஆர்.ரவீந்திரன்





இந்தியாவின் விடுதலை அறிவிக்கப்பட்ட 1947 ஆகஸ்ட் 14 இரவில் நேரு விதியுடன் உடன்படிக்கை செய்து கொண்டோம் என்ற கருத்தை மக்களின் முன் வைத்தார். அன்று, இந்தியாவின் இலட்சியங்களும், நாடு செல்லவேண்டிய பாதையும் தேசிய இயக்கத்தால் செதுக்கப்பட்டிருந்தன.

தொடர்ந்து வரலாற்றில் இந்தியாவை முன்னெடுத்துச் செல்லுவதற்கான அடிப்படைத் திட்டங்கள் அன்று வடிவமைக்கப்பட்டிருந்தன. முதலாவதாக இந்திய மக்களிடையே நிலவிவந்த ஒற்றுமையைப் பாதுகாக்க வேண்டிய, வலுப்படுத்த வேண்டிய கட்டாயம் இருந்தது. அன்றைய சூழலில் மக்கள் அனைவரும் வளர்ச்சியடைவதற்குத் தேவையான வாய்ப்புக்களை உருவாக்க வேண்டியது அடிப்படைத் தேவையாக இருந்தது.

அதற்கு, ‘இந்தியா மதச் சார்பற்ற நாடாக இருக்க வேண்டும்’ என்று அன்றைய அரசியல் தலைவர்கள் விரும்பினார்கள் காரணம், இந்தியப் பிரிவினையின்போது நிகழ்ந்த கலவரங்களும், படுகொலைகளும் அவர்களிடையே அந்தக் கருத்தை உருவாக்கியிருந்தன.

“அரசியல் களத்திலிருந்த இந்தியப் புரட்சியை பொருளாதார மற்றும் சமூகத் துறைகளுக்கு விரிவுபடுத்த வேண்டும் என்று அவர்கள் விரும்பினார்கள். இந்தியாவில் விவசாயம் மற்றும் தொழில்துறை மிகவும் குறைவான உற்பத்தித் திறனைக் கொண்டிருந்தது. அதை உயர்த்தி மேலும் அதிகப்படுத்த வேண்டும். இந்தியப் பொருளாதாரத்தில் தற்சார்பு நிலையைக் கொண்டு வரவேண்டும். அதற்காகத் தனியாரின் முயற்சியை நம்பிக் கொண்டிருக்கக் கூடாது. அதற்குத் திட்டமிடுதலும், பெரிய அளவிலான பொதுத்துறையும் அவசியம். 1955க்குப் பிறகு, இந்தியப் பொருளாதாரக் கட்டமைப்பை மாற்றி, தாராளமயமான தேசியப் பொருளாதாரத்தை

அமைப்பதற்கு தீவிரமான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. சோசலிசம் அதற்குரிய ஒரு குறிக்கோளாக முன்வைக்கப்பட்டது.''

அதன் உடன்மறையான, எதிர்மறையான வளர்ச்சிகளையும், வீழ்ச்சிகளையும் கடந்த காலங்களில் நடைமுறையில் நேரடியாகக் கண்டறிந்தோம். இந்த அரசியல், சமுதாய, பொருளாதார மாற்றங்கள் எப்படியெல்லாம் நிகழ்ந்தன என்பதைச் சமூக அறிவியல் கண்ணோட்டத்துடன், தகுந்த ஆதாரங்களை முன்வைத்து வரலாற்று ஆசிரியர்களால் எழுதப்பட்ட வரலாறுதான் ''சுதந்திரத்திற்குப் பிறகு இந்தியா.''

வரலாற்று ஆசிரியர்களான பிபன் சந்திரா மிருதுளாம் முகர்ஜி மற்றும் ஆதித்ய முகர்ஜி ஆகியோர் ஒருங்கிணைந்து இந்த வரலாற்று ஆவணத்தை வடிவமைத்திருக்கிறார்கள்.

இந்த வரலாற்று நூலில் தாங்கள் வெளிப்படுத்தியுள்ள மதிப்பீடுகளைப் பற்றிய குறிப்புக்களை அவர்கள் தெளிவாகக் குறிப்பிடுகிறார்கள்:

கடந்த ''1999-2000 இலிருந்து 2007 வரை நடைபெற்ற முக்கியமான சம்பவங்களைப் பற்றி இந்தப் புத்தகத்தில் எழுதியிருக்கிறோம். 'புத்தாயிரத்தில் இந்தியப் பொருளாதாரம்' என்ற தலைப்பில் ஒரு அத்தியாயம் எழுதப்பட்டிருக்கிறது. 'வகுப்புவாதமும் அரசு அதிகாரத்தைப் பயன்படுத்துதலும்' என்னும் புதிய அத்தியாயத்தில் குஜராத்தில் நடைபெற்ற சம்பவங்களைப் பற்றி எழுதியிருக்கிறோம். வகுப்புவாத நோக்கில் பாடப் புத்தகங்கள் திருத்தி எழுதப்பட்டிருப்பதை விவரித்திருக்கிறோம். சுதந்திரத்துக்குப் பிறகு இந்தியாவில் நடைபெற்ற நிலச் சீர்திருத்தங்களைப் பற்றி ஆராய்ந்திருக்கிறோம். ராஜீவ் மரணத்திற்குப் பிறகு இந்திய அரசியலில் ஏற்பட்ட மாற்றங்களை 2007 வரை எழுதியிருக்கிறோம்.

''இந்தியா சுதந்திரம் அடைந்த பிறகு ஏற்பட்ட வளர்ச்சியின் தன்மை இந்த நூலில் ஆராயப்பட்டிருக்கின்றது. இந்தியா சுதந்திரம் அடைந்த 60-வது ஆண்டில் வாசகர்களுக்கு இந்தப் புத்தகத்தை அளிப்பதில் நாங்கள் பெருமையடைகிறோம்.''

முதலில் இந்த வரலாற்று நூல் ''இந்தியாவின் சுதந்திரப் போராட்டம் (1857-1947)'' என்ற பெயரில் வெளியானது. இதன் ஆங்கிலப் பதிப்பு ஒருஇலட்சத்துக்கும் அதிகமான பிரதிகள் விற்பனையாகின. அதற்குப் பிறகு, இதே நூல் 'சுதந்திரத்துக்குப் பிறகு இந்தியா (1947 - 2000) என்ற பெயரில் விரிவாக்கப்பட்டு வெளியானது. வரலாறு, சமூகவியல் அரசியல் விஞ்ஞானத் துறைகளைச் சேர்ந்த மாணவர்களும், பொதுமக்களும் புத்தகத்தை ஆர்வமுடன் பார்த்தார்கள். இந்த நூலைச் சில பல்கலைக்கழகங்கள் பாடநூலாக வைத்தன. இந்தியிலும், பிற இந்திய மொழிகளிலும் இது மொழி பெயர்க்கப்பட்டது. அதை விரிவுபடுத்தி இந்த வரலாற்று நுலை 2007-இல் வெளியிட்டார்கள். இந்திய விடுதலைக்குப் பிறகு, 70 ஆண்டுகள் கழித்து இந்த வரலாற்றை வாசிப்பவர்களால் இந்தியாவை ஆழமாகவும், தெளிவாகவும் புரிந்து கொள்ள முடியும். அன்றைக்கு 40 கோடி மக்களே வாழ்ந்து கொண்டிருந்தார்கள். இன்று இந்தியாவில் மக்கள் தொகை சுமார் 130 கோடி மக்கள் தொகை வளர்ச்சியின் பின்னணியில் இந்திய சமுதாய, பொருளாதார வளர்ச்சியையும் கணக்கில் எடுத்துக்கொண்டு வரலாற்று மாற்றங்களை இந்த வரலாற்றாசிரியர்கள் தமது கருத்துக்களாக முன்வைக்கிறார்கள்.

முதல் கட்டமாக நேருவின் காலகட்டத்தை முன் வைத்துக் கருத்துக்கள் தெளிவுபடுத்தப்படுகின்றன.

கடந்த 1955இல் குடியரசு தின அணிவகுப்பைப் பார்வையிட்ட பிறகு, நேரு முதலமைச்சர்களுக்குப் பின்வருமாறு எழுதினார். ''நமது குறிக்கோள்களை ஒவ்வொன்றாக நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம். எதிர்காலத்தைப் பற்றி நாட்டில் அதிகமான நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது.''

சிலமாதங்களுக்குப் பிறகு, அவர் மறுபடியும் இதே கருத்தை எழுதினார். ''கீழ்த்திசையில் கதிரவன் உதயமாகிவிட்டான் இந்தியாவின் நீண்ட வரலாற்றில் புதிய அத்தியாயம் எழுதப்படுகிறது. நானும், நாட்டில் ஏராளமானவர்களும் அப்படி எண்ணுகிறோம்.

அந்தக் காலகட்டத்தின் மாற்றங்களைக் குறித்து நேருவின் வாழ்க்கை வரலாற்றை எழுதிய எஸ்.கோபால் இவ்வாறு குறிப்பிடுகிறார்: ''தனிநபர் சுதந்திரம், சமூகநீதி பொதுமக்கள் பங்கேற்பு, ஐந்தாண்டுத் திட்டங்கள், தற்காப்பு, உலக அரங்கில் சுயமரியாதைக்குப் பங்கமில்லாத நிலை ஆகிய உயர்ந்த குறிக்கோள்களால் பிரதமருடைய வழிகாட்டுதலில் நிறைவேறிக் கொண்டிருந்தன.

இந்திய மக்களும், அறிவுப் பகுதியினரும் இன்னும் கூடுதலான முன்னேற்றத்தை எதிர்பார்த்தார்கள் என்பது உண்மை. எனினும் நேரு காலத்தில் மட்டுமின்றி 1973-74 வரைகூட அவர்கள் நம்பிக்கையோடு இருந்தார்கள் ஆனால்,

மக்களுடைய உற்சாகம், பெருமிதம் ஆகியவை மறையத் தொடங்கின. கவலை, வெறுப்பு மற்றும் அவநம்பிக்கை வளர்ந்தன.


'காலனிய மரபுரிமை' குறித்த இந்த வரலாற்று ஆசிரியர்கள் விரிவான முறையில் அன்றைய அரசியல் பொருளாதார நிலைமைகளைப் பற்றித் தெளிவாக விளக்குகிறார்கள். "காலனிய ஆட்சி இந்தியாவின் பொருளாதாரத்தைத் தீவிரமாக மாற்றியது. விவசாயம், தொழில்துறை, போக்குவரத்து, செய்தித் தொடர்பு, நிதி, நிர்வாகம், கல்வி, இரயில்வே ஆகிய துறைகளில் ஆக்கபூர்வமான மாற்றங்கள் ஏற்பட்டன. ஆனால், காலனிய அமைப்பின் சுற்று வட்டாரத்திற்குள், அதன் ஒரு பகுதியாகவே மாற்றங்கள் ஏற்பட்டன. பிரிட்டனுக்கு உட்பட்ட காலனிய அமைப்பு இந்தியாவில் வறுமையை வளர்த்தது. ஏ.குன்டர் என்பவர், 'குறை வளர்ச்சியின் வளர்ச்சி' என்று இதைப் பற்றி எழுதினார். "அந்த மாற்றங்கள் எல்லாமே அடிப்படையில் பிரிட்டனின் நலனைப் பாதுகாக்கும் நோக்கத்திலேயே நிகழ்ந்தன.

இந்தியா விடுதலை பெறும் தருணத்தில், விவசாயம், கல்வி, தொழில்துறை, மருத்துவம், மக்களின் வாழ்க்கைத் தரம் போன்றவைகளின் நிலைமைகளைத் தகுந்த புள்ளி விவரங்களுடன் இவர்கள் விளக்குகிறார்கள். "காலனியப் பொருளாதாரத்திற்குள் இந்தியாவின் தொழில் வளர்ச்சி நடைபெற்றதால் அதில் வேகம் இல்லை. காலனி அரசாங்கத்தின் கட்டுப்பாடுகள் மீறி இந்தியாவில் தொழில் வளர்ச்சி முன்னேறியது. இரண்டு உலகப் போர்களும் இந்திய முதலாளிகளின் தொழில்கள் வளர்ச்சி அடைவதற்கு உதவின.

"இந்தியாவில் விவசாயிகள் மற்றும் கைவினைஞர்கள் ஓட்டாண்டிகளாக இருந்தார்கள். சாதாரண மக்கள் வறுமை மற்றும் பட்டினியோடு வாழ்ந்தார்கள். 19-ஆம் நூற்றாண்டின் பிற்பாதியில் நாட்டின் பல பகுதிகளில் பஞ்சம் நிலவியது. 1943 - இல் வங்காளப் பஞ்சத்தில் 30 இலட்சம் மக்கள் மரணமடைந்தார்கள்.

தொடர்ந்து, இவர்கள் ஆங்கிலேயர்கள் பற்றிய சுருக்கமான ஆனால் தெளிவான கருத்துக்களை முன்வைக்கிறார்கள். அவற்றின் விளைவுகள் இன்றும் இந்தியாவில் தொடர்ந்து இருந்துவருகின்றன என்பதை இன்றைய நிலைமைகள் உறுதிப்படுத்துகின்றன.

"இந்தியாவை ஒன்று சேர்த்த ஆங்கிலேயர்கள் அதற்கு எதிரான சக்திகளையும் தூண்டினார்கள். "பிரிவினை செய்; பிறகு ஆட்சி சுலபம்"




சுதந்திரத்துக்குப் பிறகு இந்தியா
பிபன் சந்திரா, மிருதுளா முகர்ஜி
ஆதித்ய முகர்ஜி
தமிழாக்கம்: நா. தர்மராஜன்
வெளியீடு: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.
சென்னை. விலை: ரூ. 375/-

என்ற ஏகாதிபத்தியக் கொள்கையை அவர்கள் கடைப்பிடித்தார்கள். மதத்திற்கு எதிராக மதம், சாதிக்கு எதிராக சாதி, ஒரு மாகாணத்துக்கு எதிராக இன்னொரு மாகாணம் என்ற முறையில் இந்திய மக்களைப் பிளவுபடுத்தினார்கள். அவர்கள் இந்துக்களுக்கு எதிராக முஸ்லீம்களைத் திருப்பினார்கள். சமஸ்தான மன்னர்களையும், ஜமீன்தார்களையும் தேசிய இயக்கத்தை எதிர்க்குமாறு தூண்டினார்கள் 1947 - இல் அவர்கள் முயற்சி வெற்றியடைந்தது. இந்தியா இரண்டு நாடுகளாகப் பிரிவினை செய்யப்பட்டது."

காலனிய ஆட்சியைக் குறித்து, இரவீந்திரநாத் தாகூர் 1941இல் மரணமடைவதற்கு மூன்று மாதங்களுக்கு முன்பு பின்வருமாறு எழுதினார். "ஆங்கிலேயர்கள் இந்தியப் பேரரசைக் கைவிடுமாறு விதி என்றாவது கட்டாயப்படுத்தும். ஆனால், எப்படிப்பட்ட இந்தியாவை அவர்கள் விட்டுச் செல்வார்கள்? அவர்களுடைய நூற்றாண்டுக்கால ஆட்சி முடிகின்றபோது குப்பை கூளத்தை விட்டுச் செல்வார்கள்."

அவர் கூறியபடியே காலனிய ஆட்சியின் முடிவில் இந்தியா மிகமிக மோசமான நிலைமையில் இருந்தது. அதைக் காப்பாற்றி வளர்த்தெடுத்து முன்னேற்றமடையச் செய்ய வேண்டியது அன்றைய அடிப்படைத் தேவையாக இருந்தது.

அந்த வகையில், எப்படி இந்தியா, தனது அரசியல், தொழில், பொருளாதார, சமுதாய நிலைமைகளில் இன்று வரை தொடர்ந்து வளர்ந்து வருகிறது என்பதைத் தகுந்த புள்ளி விவரங்களுடன், "சுதந்திரத்துக்குப் பின் இந்தியா" என்ற வரலாற்று நூலின் வழியாக அறிந்து கொள்ளமுடிகிறது.

விடுதலை பெற்ற இந்தியாவின் மாற்றங்களையும், வளர்ச்சிகளையும் விடுதலைக்காகப் போராடிய தேசிய இயக்கத்தின் தொடர்ச்சியாக இவர்கள் இனம் அடையாளப்படுத்துகிறார்கள். "தேசிய இயக்கத்தின் குறிக்கோள்களும், மதிப்புக்களும் மத்திய வர்க்கம் மற்றும் அறிவு ஜீவிகளுடன் நின்று விடவில்லை. ஆயிரக்கணக்கான காங்கிரஸ் தொண்டர்கள் அவற்றை நகரங்களிலும், கிராமங்களிலும் சாதாரண மக்களிடம் பரப்பினார்கள். அந்த இலட்சியங்கள் இந்திய சமுதாயத்தையும், அரசியலையும் ஒருங்கிணைப்பதில் முக்கியப் பங்கு வகித்தன. நேரு அதைப் புரட்சியின் தொடர்ச்சி என்றார்.

அந்தப் புரட்சியின் உள்ளார்ந்த தன்மைகளையும் நடைமுறைச் செயல்களையும் தேசிய இயக்கத்தின் குணாம்ச அடிப்படையை முன்வைத்து புதிய இந்தியாவின் வளர்ச்சியைத் தகுந்த ஆவணங்களின் அடிப்படையில் இவர்கள் தெளிவுபடுத்துகிறார்கள். அந்த வகையில் இந்தியாவின் மதச்சார்பின்மை, புதிய இந்தியாவின் உருவாக்கம் அதன் வெளிநாட்டுக் கொள்கைகள், அரசியல் நெறி முறைகள் பற்றிய தெளிவான கண்ணோட்டத்தை இவர்கள் முன்வைக்கிறார்கள். "காங்கிரஸ் இயக்கம் எண்ணிக்கையில் வளர்ச்சியடைந்ததுடன் கொள்கையிலும் காலத்துக்கேற்ற முறையில் வளர்ச்சியடைந்தது. உலகச் சிந்தனையை செரித்துக்கொண்டது" என்ற கருத்தையும் இவர்கள் தெளிவுபடுத்துகிறார்கள்.

புதியதாக விடுதலை பெற்ற இந்திய அரசியல் சட்டத்தின் உருவாக்கம் அதன் வளர்ச்சி ஆகியவை குறித்த நடவடிக்கைகள், அதில் பங்கேற்ற அறிஞர்கள், தியாகிகள், அரசியல் வல்லுநர்கள் பற்றிய விவரங்களை இந்த நூல் உள்ளடக்கியிருக்கிறது.

அரசியல் நிர்ணயசபை, அடிப்படையான உரிமைகள் மற்றும் சட்டங்கள் பற்றிய தோற்றம், வரைவு, திருத்தம் போன்றவற்றின் விவரங்களும் இதில் அடங்கியுள்ளன. வயது வந்தோருக்கு வழங்கிய வாக்குரிமை பற்றிய தெளிவான வரையறைகள் குறிப்பிடப்பட்டுள்ளன. அரசின் மதச் சார்பில்லாத நடைமுறைகள் பற்றிய தகவல்களும் இந்த நூலில் தெளிவாக உணர்த்தப்படுகின்றன.

இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் குறித்து ஆஸ்டின் குறிப்பிட்ட ஒரு கருத்தை முன்வைத்து இவர்கள் அதைத் தெளிவுபடுத்துகிறார்கள். "அரசியல் நிர்ணய சபை உறுப்பினர்கள் ஐக்கிய அமெரிக்கா, கனடா, சுவிட்சர்லாந்து, ஆஸ்திரேலியா ஆகிய கூட்டாட்சி நாடுகளின் அனுபவங்களைப் பரிசீலித்து அதன்பிறகு இந்தியச் சூழ்நிலைமைக்குப் பொருந்தக்கூடிய அம்சங்களை மட்டும் எடுத்துக் கொண்டார்கள். இந்தியாவுக்குப் பொருத்தமான புதிய ரகத்தைச் சேர்ந்த கூட்டாட்சி தோன்றியது" இது தொடர்பான விவரங்களை இவர்கள் ஆய்வுக் கண்ணோட்ட அடிப்படையில் தெளிவுபடுத்துகிறார்கள். மாகாணங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் அரசாங்கத்தின் அமைப்பும், நடைமுறையும் இதில் விளக்கப்படுகின்றன. நீதித்துறை, நிர்வாகத்துறை போன்றவற்றின் சிறப்புக்களும் விளக்கப்படுகின்றன.

கடைசியாக இவர்கள் இது குறித்த ஒரு கருத்தை முன்வைக்கிறார்கள்: "அரசியலமைப்புச் சட்டத்தின் சிறப்பு, அதனைச் செயல்படுத்துகின்ற மக்களிடம்தான் இருக்கிறது. அவர்கள் நல்லவர்களாக இருந்தால் சட்டம் வெற்றிகரமாக இருக்கும். அவர்கள் தீயவர்களாக இருந்தால் சட்டம் தோல்வியடையும் தர என்று இராஜேந்திரபிரசாத் கூறியதை நினைவு கூற வேண்டும்.

இந்தியா விடுதலையடைந்த பின் எதிர்கொண்ட பிரச்சனைகளையும், சவால்களையும், இழப்புக்களையும் இவர்கள் குறிப்பிட்டு, தொடக்ககால நெருக்கடிகளையும், விளைவுகளையும் விவரிக்கிறார்கள். சுதேச சமஸ்தானங்களை இந்தியாவுடன் இணைத்தல், மதக் கலவரங்களை ஒடுக்குதல், பாகிஸ்தானிலிருந்து ஓடிவந்த 60 இலட்சம் அகதிகளுக்கு உணவு, குடிசை, வேலை வாய்ப்புக் கொடுத்தல், இந்தியாவில் வசித்த முஸ்லிம்களுக்குப் பாதுகாப்புக் கொடுத்தல், கம்யூனிஸ்டுகளின் புரட்சியை அடக்குதல் ஆகிய பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டிய நிலைமைகள் இருந்ததை நேருவின் உரை வாயிலாகக் குறிப்பிடுகிறார்கள். இந்தியப் பிரிவின் இந்தியாவின் உயர் அதிகாரிகளையும், இராணுவத்தையும் பாதித்திருந்ததையும் இவர்கள் குறிப்பிடுகிறார்கள்.

தொடர்ந்து இவர்கள் அன்றைய நிலைமையில் இருந்த இந்தியாவை அடையாளப் படுத்துகிறார்கள். "இந்தியாவின் பன்முகத்தன்மை ஓர் அதிசயம். இந்து, முஸ்லிம், கிறித்துவர், சீக்கியர், பார்சி, பௌத்தர், யூதர் இந்தியாவில் வசிக்கிறார்கள் இன்னும் தமக்குரிய சிறுதெய்வ நம்பிக்கையோடு இனக்குழு மக்கள் வசிக்கிறார்கள். 1950இல் அரசியலமைப்புச் சட்டம் 14 மொழிகளை அங்கீகரித்தது. நாட்டில் இன்னும் நூற்றுக்கணக்கான கிளைமொழிகள் இலட்சக் கணக்கான மக்களால் பேசப்படுகின்றன. 1961. சென்சஸ் கணக்குப்படி இந்தியா முழுவதும் 1549 மொழிகள் பேசப்பட்டன. "வேற்றுமையில் ஒற்றுமையைத் தேடி. அந்தக் கூறுகளை வளர்த்தார்கள். இந்தியாவின் ஒற்றுமை என்பது 'ஆன்மாவின் ஒற்றுமை' என்று இரவீந்திரநாத் தாகூர் குறிப்பிட்டார்.

கம்யூனிஸ்டுகளையும், வகுப்புவாதிகளையும் நேரு தனித்தனியாகவே பிரித்துப் பார்த்தார் என்பதை இவர்கள் குறிப்பிடுகிறார்கள். 1964 இல் பத்திரிகையாளர் கராஞ்சியா அவர்கள் பேட்டி கண்டபோது நேரு பின்வருமாறு கூறினார்.

"இந்தியாவில் வலதுசாரிக் கட்சிகள் மற்றும் இடதுசாரிக் கட்சிகள் இருக்கின்றன. சமூக மற்றும் பொருளாதாரப் பிரச்சனைகளைப் பற்றி ஆழமாக சிந்தித்து தனக்கென்று ஒரு சித்தாந்தத்தை உருவாக்கிக் கொண்ட கட்சியை நான் ஆதரிப்பேன். கம்யூனிஸ்டுகளைப் பற்றி நீங்கள் குறிப்பிட்டீர்கள். கம்யூனிஸ்டுகளிடம் குறைகள் இருந்தாலும் பிரச்சனைகளுக்குப் பொருளாதார ரீதியில் தீர்வுகளைப் பற்றி அவர்கள் சித்திக்கிறார்கள் அவர்களிடமுள்ள வறட்டுத் தன்மையை, வன்முறையை நாம் நிராகரிக்கிறோம். அவர்கள் பார்லிமென்டரி ஜனநாயகத்தில் நம்பிக்கை வைத்தால், சோசலிசத்தைப் பற்றி அவர்களுடைய பார்வைக்கு எங்களுடைய பார்வைக்கும் அதிகமான வேறுபாடு கிடையாது. ஜனசங் மற்றும் சுதந்திரா கட்சி பாசிசத் தன்மையைக் கொண்டிருக்கின்றன. சமூக, பொருளாதார அடிப்படை இல்லாதவை. அவை நாட்டுக்கு, ஜனநாயகம் மற்றும் சோசலிசத்தைப் பற்றிய நம்முடைய மதிப்புக்களுக்கு ஆபத்தானவை."

தற்கால அரசியல் நிலைமைகளோடு, அன்றைய நேருவின் மதிப்பீட்டை ஒப்பிட்டுப்பார்க்க இந்தக் கண்ணோட்டம் வழிவகை செய்கிறது. இன்றைய அரசியல் நிலைமைகளையும் உணரமுடிகிறது.

புதிய இந்தியாவில், மொழிப்பிரச்சனைகள் குறிப்பாக ஆட்சிமொழிப் பிரச்சனை அதன் வளர்ச்சிக்குத் தடையாக இருந்தன. இந்தியாவில் மொழிவாரி மாநிலங்கள் அமைக்கப்பட்டன. சிறுபான்மையினரின் மொழிகள் பாதுகாக்கப்பட்டு வளர்ச்சி பெற்றன. உருதுமொழி, இந்தியாவின் தேசியமொழிகளில் ஒன்றாக அங்கீகரிக்கப்பட்டது.

பழங்குடியினரை முன்னேற்றுவதற்குரிய வகையில் இந்திய அரசாங்கக் கொள்கைகள் வகுக்கப்பட்டன. நாகாலாந்து, மிஜோரம், ஜார்கண்ட் போன்ற பகுதிகளின் வளர்ச்சிக்குத் தேவையான நடைமுறைகள் மேற்கொள்ளப்பட்டன. தொடர்ந்து இந்தியாவின் சாதிகள் பற்றிய பட்டியல்கள் இந்த வரலாற்று ஆவணத்தில் முன்வைக்கப்பட்டுள்ளன. நேருவின் வெளிநாட்டுக் கொள்கைகள் இந்தியாவிலும் உலகளாவிய வெளிநாடுகளிலும் என்ன வகையான மாற்றங்களையும், வளர்ச்சிகளையும் நிகழ்த்தின என்பதை விரிவாக இவர்கள் விளக்குகிறார்கள்.

'வரலாற்றில் நேருவின் இடம்' 'அரசியல் கட்சிகள்' 'எதிர்கட்சிகள்' போன்ற தலைப்புக்களின் வழியாக கடந்தகால அரசியல் வளர்ச்சியை இவர்கள் வரிசைப்படுத்துகிறார்கள்.

லால்பகதூர் சாஸ்திரி மற்றும் இந்திராகாந்தி ஆகியோரின் அரசியல் ஈடுபாட்டையும் இவர்கள் விளக்குகிறார்கள். இந்திராகாந்தியின் ஆட்சி தொடர்பாக உடன்மறையான, எதிர்மறையான விளைவுகளை இவர்கள் இனம் காட்டுகிறார்கள். 'ஜெயப்பிரகாஷின் இயக்கமும், அவசர நிலைப் பிரகடனமும்' என்ற தலைப்பின் கீழ் இரண்டு வகையான தன்மைகளையும் இவர்கள் இனம் காண்கிறார்கள். மேலும், ஜனதா கட்சி பற்றியும், சந்திரசேகர் முதல் வாஜ்பாய்வரை நிலவிய சூழல்களின் மாற்றங்களை இவர்கள் விளக்குகிறார்கள்.

தனித்தனியாக மாகாணங்களின் அரசியல் நிலைமைகளையும் இவர்கள் விரிவாகக் குறிப்பிடுகிறார்கள். இந்தியப் பொருளாதாரம் ஒவ்வொரு காலகட்டத்திலும் எந்தவகையான மாற்றங்களுக்கு உள்ளாகி வளர்ந்து வருகின்றன என்பதையும் விரிவாக இவர்கள் ஆய்வு செய்கிறார்கள். அதைத் தொடர்ந்து நிலச்சீர்திருத்தங்களையும் அதன் விளைவுகளையும் தகுந்த புள்ளி விவரங்களோடு முன்வைக்கிறார்கள்.

இந்தப் பின்னணிகளுடன் இன்றைய அரசியலைப் புரிந்துகொள்வது எதிர்கால இந்தியாவின் வளர்ச்சிக்கு உகந்த முறையில் பார்வையைத் தரக்கூடிய வகையில் தெளிவான தமிழில் இந்த வரலாறு வடிவமைக்கப்பட்டுள்ளது.

●



# தஞ்சாவூர் பெருவுடையார் கோயிலின் தளிச்சேரிப் பெண்டுகள்

முனைவர் கி.இரா.சங்கரன்

தளிச்சேரிப் பெண்கள் பற்றிப் பேசும் தஞ்சைப் பெருவுடையார் கோயிலின் கல்வெட்டில் மொத்தம் 400 பெண்டுகளின் பெயர்கள் குறிக்கப்பட்டுள்ளன. இவர்கள் ஐந்து தெருக்களில் வசித்து வந்துள்ளனர். ஒவ்வொரு தெருவும் சிறகு என்று குறிக்கப்பட்டுள்ளது. தெருவின் முதல் வீடு தலைவீடு என்றும், அடுத்தடுத்த வீடுகள் இரண்டாம் வீடு, மூன்றாம் வீடு என்றும் தொடர்ச்சியாகக் குறிக்கப்பட்டுள்ளன. முதல் தெருவில் 92 பெண்களும், இரண்டாம் தெருவில் 92 பெண்களும், மூன்றாம் தெருவில் 95 பெண்களும், நான்காம் தெருவில் 92 பெண்களும், ஐந்தாம் தெருவில் 26 பெண்களும் வசித்துள்ளனர்[1]. அப்பெண்களின் பெயர்களை ஆய்வதன் மூலம் அவர்களின் - சமூக நிலையினை அறிவது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

சோழர் கல்வெட்டுக்களில் உள்ள ஆண்களின் பெயர்களின் அடிப்படையில் சோழர் கால சமூக, பொருளாதார நிலை சிறப்பாக ஆய்வு செய்யப்பட்டுள்ளது[2]. பொதுவாக ஆண் பெயர்கள் ஐந்து கூறுகளைக் கொண்டனவாக அறியப்பட்டுள்ளன. சோழர் கல்வெட்டுக்களில் உள்ள பெண்களின் பெயர்களின் அடிப்படையிலும் ஆய்வு செய்யப் பட்டுள்ளது.[3] இங்கு தளிச்சேரிப் பெண்டுகளின் பெயர்கள் மட்டும் கணக்கில் கொள்ளப்படுகின்றன. இப்பெண்கள் ஒவ்வொருவரும் நக்கன்[4] என்ற பொதுப்பெயரில் (Generic noun) சுட்டப்பட்டுள்ளன. இவர்களின் பெயர்கள் பொதுவாக இரு கூறுகளைக் கொண்டுள்ளன. நக்கன் என்பதை பொதுப்பெயராகவும் (Generic - noun) ராஜாஜி, திருவையாறு போன்றவற்றைத் தன் பெயராகவும் (Given name) கொண்டுள்ளனர். சில பெயர்கள் மூன்று கூறுகளைக் கொண்டுள்ளன. எ.கா. அரிகுலகேசரிஸ்வரத்து நக்கன் வடவாயில்; காவிரிப்பூம்பட்டினத்து நக்கன் ஊதாரி. இவ்விரு பெயர்களின் முதற்கூறுகளின் அடிப்படையில் அந்தந்தப் பெண்களின் சொந்த ஊரினையும் எந்தெந்தக் கோயிலில் இருந்து வந்தனர் / கொண்டு வரப்பட்டனர் என்பதையும் அறியலாம், மூன்றாம் கூறு தன்பெயராக அமைந்துள்ளது.

இவர்கள் பெரும்பாலும் காவிரி பாயும் பகுதியிலுள்ள ஊர்களில் இருந்தும் அவ்வட்டாரத்திலுள்ள கோயில்களில் இருந்தும் தஞ்சைத் தளிச்சேரிக்கு வந்து வசித்துள்ளனர். அப்பெண்கள் சோழர் நிர்வாகத்தால் பிற தளிச்சேரிகளில் இருந்து அழைத்துவரப்பட்டனர் என்பதைச் "சோழ மண்டலத்துத் தளிச்சேரிகளில் நின்றுங் கொண்டு வந்து ஏற்றின தளிச்சேரிப் பெண்டுகள்" என்ற தொடர் விளக்குகிறது. 58 வெவ்வேறு ஊர்களிலிருந்து இப்பெண்டுகள் வந்துள்ளதாகத் தெரிகிறது. வெவேறு ஊர்களிலிருந்து வந்தவர்கள் என்பதைப் பெயரின் முதல் கூறு உணர்த்துகிறது. இங்கு மீண்டும் வலியுறுத்திச் சொல்லவேண்டிய கருத்து யாதெனில், இவ்வூர்கள் பெரும்பாலும் காவிரி பாயும் பகுதியில் மட்டும் அமைந்தன என்பதாகும். முதல் கூறு தரும் இன்னொரு செய்தி யாதெனில், ஏற்கனவே பல ஊர்களில் தளிச்சேரியும், தளிச்சேரிப் பெண்டுகளும் நடைமுறை வாழ்க்கையின் பகுதியாக இருந்தமையாகும். பாண்டி மண்டலம், தொண்டை மண்டலம், கொங்கு மண்டலப் பகுதிகளில் உள்ள ஊர்கள் இக்கல்வெட்டில் குறிக்கப்படவில்லை என்பதால் அவ்வட்டாரங்களில் இருந்து இவ்வகைப் பெண்கள் அழைத்து வரப்படவில்லை என்று தெரிகிறது. அவ்வட்டாரங்களில் இவ்வகைப் பெண்கள் இருந்திருக்க மாட்டார்கள் எனும் கூற்றினை மேலாய்வுதான் முடிவு செய்ய வேண்டும்.

**பெயர்கள்**

தளிச்சேரிப் பெண்டுகள் அரசகுடும்பத்துப் பெண்களின் பெயர்களைத் தாங்கி நிற்பது அப்பெண்களிடையே இருந்து வந்த அரசகுடும்பத்தின் செல்வாக்காகக் கருதலாம் அல்லது அரசகுடும்பத்துப் பெண்களின் மேல் தளிச்சேரிப் பெண்கள் கொண்டிருந்த மரியாதையின் வெளிப்பாடாக இருக்கலாம். செம்பியன்மாதேவி, திரிபுவனமாதேவி, வானவன்மாதேவி என்ற தளிச்சேரிப் பெண்டுகளின் பெயர்கள் மேற்சொன்ன கருத்திற்கு நம்மை இட்டுச் செல்கின்றன. தென்னவன் மாதேவி, மீனவன்மாதேவி என்ற பெயர்களிலும் தளிச்சேரிப் பெண்டுகள் இருந்துள்ளனர். தென்னவன், மீனவன் என்ற முன்னடைகள் பாண்டியரைக் குறிப்பனவென்று யாவரும் அறிந்த ஒன்றே.[5] இவ்விரு பெயர்களும் தஞ்சாவூர்த் தளிச்சேரிப் பெண்டுகளிடையே நிலவிவந்த பாண்டியரின் legacy எனக் கொள்ளலாம் அல்லது அவர்கள் பாண்டி நாட்டிலிருந்து வரவழைக்கப்பட்டிருக்கலாம். குந்தவை என்ற பெயரில் ஒரு பெண்டு குறிக்கப்பட்டுள்ளார். வீரசோழி, சுந்தரசோழி, ராஜாஜி என்ற பெயர்களிலும் பெண்டுகள் இருந்துள்ளனர். இப்பெயர்கள் வீரசோழன், சுந்தரசோழன், ராஜராஜன் என்பவற்றின் பெண்பாற்பெயர்களே. சோழம், சோழமாதேவி, சோழர்குல சுந்தரி, சோழசூளாமணி, சோழதேவி, ராஜகேசரி என்ற தளிச்சேரிப் பெண்டுகளின் பெயர்கள் சோழர் பெருமையினை வெளிப்படுத்துவதாகக் கொள்ளலாம். உத்தமசுந்தரி, உத்தமதானி எனும் பெயர்கள் உத்தமசோழனை நினைவூட்டுகின்றன. மேற்சொன்ன பெயர்களின் அடிப்படையில், அரசகுடும்பத்து நபர்கள் தங்கள் தங்கள் பெயர்களில் தளிச்சேரிப் பெண்டுகளைக் கோயில்களில் அமர்த்தியிருக்கலாம் எனச் சொல்வதற்குச் சான்றுகள் தேவை. கன்னரதேவி என்ற பெயரில் ஒரு பெண்டு இருந்திருக்கிறாள்.

சதுரி, கூத்தாடி என்ற இரு பெயர்கள் வெவ்வேறு நடனவகைகளில் சிறப்புப் பயிற்சி பெற்றவர்களை குறிக்கப் பயன்பட்டவனவாக இருக்கலாம். "சதுர்" வகை நடனத்தைப் புரிபவர் சதுரி என்றும் கூத்தினை நிகழ்த்துபவர் "கூத்தாடி" என்றும் குறிக்கப்பட்டிருக்கலாம்.

பெண்டுகளில் சிலர் "மழலைச் சிலம்பு" எனச் சுட்டப்பட்டுள்ளனர். சிறுவயதிலேயே சிலம்பணிந்து நடனம் பயிலும் சிறுமிகளைக் குறிக்க இப்பெயரினைப் பயன்படுத்தி இருப்பர் போலும். தஞ்சாவூர் தளிச்சேரியில் இப்பெயரில் ஒருவர் இருந்துள்ளார். அம்பர் எனும் ஊரில் உள்ள அவனிநாராயணவிண்ணகர் என்ற விஷ்ணுகோயிலில் இருந்து தஞ்சாவூர் தளிச்சேரிக்கு வந்திருந்த ஒருவரும் இதே பெயரில் குறிக்கப்பட்டுள்ளார். கஞ்சாநகரம் என்ற இடத்தில் இருந்து மேற்சொன்ன பெயரில் தஞ்சை தளிச்சேரிக்கு வந்து ஒருவர் இருந்துள்ளார். அவனிகேசரிஸ்வரம் எனும் கோயிலில் இருந்து மேற்சொன்ன பெயரிலேயே ஒரு பெண்டு தஞ்சைத் தளிச்சேரிக்கு வந்து வசித்திருக்கிறார்.

தளிச்சேரிப் பெண்டுகள் பெரும்பாலும் தஞ்சாவூர், திருவாரூர், திருவையாறு நகரங்களில் இருந்து வந்திருப்பர்போலும், இம்மூன்று நகரங்களும் தளிச்சேரிப் பெண்களின் பெயரோடு சேர்த்து அடிக்கடி குறிக்கப்பட்டுள்ளன. முதல் இரண்டு நகரங்களில் பெரிய தளிச்சேரிகள் இருந்துள்ளன. திருவாரூர் பெரிய தளிச்சேரியினின்றும் தஞ்சாவூர்த் தளிச்சேரிக்கு வந்திருந்த ஒரு பெண்டு திருவாரூர் பெரிய தளிச்சேரி நக்கன் மாதேவி எனக் குறிக்கப்பட்டுள்ளார். அந்நகரின் பெரிய தளிச்சேரியில் பிற ஊர்களில் இருந்து வந்த

பெண்களும் இருந்துள்ளனர். எ.கா. இவ்வூர் (திருவாரூர்) பெரிய தளிச்சேரி நக்கன் கண்டியூர். இவ்வாறு பல பெண்டுகள் அவரவர் சொந்த ஊரின் பெயரால் குறிக்கப்பட்டுள்ளனர். திருவாரூர்த் தளிச்சேரிப் பெண்டுகள் பற்றிய குறிப்புகளும் இக்கல்வெட்டில் உள்ளன. திருவாரூரிலுள்ள வெவ்வேறு கோயிலுக்குமான தளிச்சேரிப் பெண்டுகள் இருந்துள்ளனர். எ.கா. இவ்வூர் (திருவாரூர்) பரமீஸ்வரத்து நக்கன் ஆரூர்; இவ்வூர் (திருவாரூர்) உசீஸ்வரத்து நக்கன் ஆச்சம்.

தஞ்சாவூர் தளிச்சேரிக்கு வெவ்வேறு ஊர்களில் இருந்து பெண்டுகள் வரவழைக்கப்பட்டனர் என்று முன்பே பார்த்தோம். அவர்களில் சிலர் ஊர்ப் பெயர்களால் அழைக்கப்பட்டுள்ளனர்; தம் தம் பெயர்களால் அழைக்கப்படவில்லை என்பதையும் பார்த்தோம். அதாவது நக்கன் என்ற பொதுப் பெயரோடு (Generic noun) பின்னடையாக ஊர்ப் பெயர்கள் தரப்பட்டுள்ளன. எ.கா. நக்கன், மறைக்காடு, தில்லை, ஆரூர், திருவையாறு, வெண்காடு என்ற ஊர்ப் பெயர்கள் திரும்பத் திரும்பப் பெண்டுகளைக் குறிக்கப் பயன்படுத்தப் பட்டுள்ளன. இவையனைத்தும் பாடல் பெற்ற தலங்களாகும். தம் சொந்த ஊரினின்றும் பிறிதோர் ஊருக்குச் சென்று அங்கிருந்து தஞ்சைத் தளிச்சேரிக்கு வந்திருந்த பெண்களும் உண்டு. இவ்வாறாகச் சிலர் தாம் பிறந்த இடத்தின் (ஊர்) பெயரால் குறிக்கப்பட்டுப் பிறிதோர் ஊரில் பணி நிமித்தமாக அமர்த்தப்பட்டு அங்கிருந்து தஞ்சைத் தளிச்சேரிக்கு வந்து சேர்ந்ததனை தலைநகரில் வசிக்கும் பெரும்பேறாகக் கருதியிருப்பர். காட்டாக, ஒரு பெண்ணின் பெயர் ராஜகேசரிநல்லூர் நக்கன் திருவையாறு. அதாவது, அவரது இயற்பெயர் திருவையாறு. அதாவது, பிறப்பிடம் / பிறந்த ஊர். அவர் ராஜகேசரிநல்லூருக்கான தளிச்சேரி பெண்டு என்பது அவருடைய பெயரின் முன்னிரு கூறான ராஜகேசரிநல்லூர் நக்கன் என்பதால் விளங்கும். ஊரின் பெயராலேயே அதாவது, மண்ணின் பெயராலேயே அவர்கள் அழைக்கப்பட்டிருப்பது மண்ணைப் போன்றே இப்பெண்களும் தன்னுணர்வு அற்றவர்களாகக் கருதப்பட்டனர் என்பதால் ஆகும்.

வெவ்வேறு ஊர்களில் உள்ள 125 கோயில்களில் ஏற்கனவே இருந்துவந்த தளிச்சேரிப் பெண்டுகள் தஞ்சைத் தளிச்சேரிக்குக் கொண்டுவரப் பட்டுள்ளனர். கிள்ளிக்குடி என்னும் ஊரில் இரு பெண்டுகள் இருந்துள்ளனர்: சிறியவர், கிள்ளிக்குடி நக்கன் சிறிய சீருடையாள் என்றும் மூத்தவர் இவ்வூர் பெரிய நக்கன் சீருடையாள் என்றும் அதாவது, கிள்ளிக்குடிக்கான பெரிய நக்கன் சீருடையாள் என்றும் அழைக்கப் பட்டுள்ளனர். இங்குச் சீருடையாள் என்பது இருவர்க்கும் பொதுப் பெயராய் இருந்துள்ளது என்பது கவனிக்கத்தக்கது. அதாவது, அவர்கள் ஒவ்வொருவரிடமும் தனித்தன்மைகள் எதிர்பார்க்கப்படவில்லை; இருவரிடமும் பொதுவான தன்மைகளே எதிர்பார்க்கப்பட்டுள்ளன. அதேபோல் தளிச்சேரியின் தென்சிறகின் ஒன்பதாம் வீட்டிலிருந்த பெண்டு தேசிச்சி என்றும், பத்தாம் வீட்டிலிருந்தவர் பெரிய தேசிச்சி என்றும் சுட்டப்பட்டுள்ளனர். இதேபோல் கடம்பூரில் உள்ள திருவிளங்கோயிலில் இருந்து வந்த இரு பெண்டுகளில் ஒருவர் சிறிய நக்கன் நக்கம் என்றும், மற்றொருவர் பெரிய நக்கன் நக்கம் என்றும் குறிக்கப்பட்டுள்ளனர். மேற்சொன்ன அறுவரில் ஒவ்வொரு ஜோடியும் அக்காள் - தங்கை சகோதர உறவு முறை கொண்டவராய் இருத்தல் வேண்டும்.

மறைக்காடு, திருவையாறு, திருவாலங்காடு, ஆரூர், வெண்காடு, (கண்டியூர்) என்ற பெயர்களில் சுட்டப்பட்டுள்ள பெண்டுகள் பாரம்பரியமாகப் பாடல்பெற்ற சைவத் தலங்களோடு இருந்திருப்பர் போலும். திருவேங்கடம் என்ற பெயரில் ஒரு பெண்டு இருந்திருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது. தில்லை அழகி, தில்லைக் கூத்தி, தில்லைக்கரசு என்ற பெயர்கள் பெண்டுகளுக்கும் நடனத்திற்கும் உள்ள தொடர்பினை அழுத்திக் கூறுகின்றன. தில்லைக்கரசு என்ற பெயரில் இருவரும், தில்லைக் கூத்தி என்ற பெயரில் இருவரும் இருந்துள்ளனர்.

ஒரு குறிப்பிட்ட ஊரிலிருந்து பெண்கள் பலர் கொத்தாகத் தஞ்சாவூர் தளிச்சேரிக்கு வந்துள்ளனர். திருவையாற்றிலிருந்து ஏழு பேரும், பழையாற்றிலிருந்து ஐந்து பேரும் வந்துள்ளனர். இவ்வெண்ணிக்கை ஊருக்கு ஊர் வேறுபட்டுள்ளது. வறண்ட பகுதியான புதுக்கோட்டை வட்டாரத்தில் மறவர் பூர்வகுடி ஊர்களில் ஒன்றான விரையாச்சிலை என்ற ஊரின் பெயரில் ஒரு பெண்டு இருந்திருக்கிறார்.[6]

ஒரு பெண்டின் பெயர் மதுரவாசகி. இவருக்குப் படிக்கத் தெரியும் போலும், ஒரு பெண்ணின் பெயர் கரணவிச்சாதிரி. இவர் நடன வகையின் கரணத்தில் சிறந்து விளங்கியிருப்பார். அரவம் என்ற பெயரில் மூன்று பெண்டுகள் இருந்துள்ளனர். சற்பதேவி என்ற பெயரிலும் ஒருவர் இருந்துள்ளார். ஒரு பெண்டு சிறிய அரவம் எனச் சுட்டப்பட்டுள்ளார். இவர் சிறுமியாய் இருந்திருப்பார். அறிவாட்டி என்ற பெயரில் ஒரு பெண்டு இருந்திருக்கிறார். இவருக்கு எழுதப் படிக்கத் தெரிந்திருக்கலாம்.

ஆடவல்லான் என்று ஒருவர் இருந்திருக்கிறார். தாய்வழிச் சமூகத்தின் இறைவியான காடுகாள் என்ற பெயரிலும் ஒரு பெண்டு இருந்திருக்கிறார். கற்றளி, திருமூலட்டானம் என்ற பெயர்களும் அப்பெண்களுக்குச் சூட்டப்பட்டுள்ளன.

நயனவல்லி, மதனவல்லி, சித்திரவல்லி, குஞ் சரவல்லி என்ற பெயர்கள் இரசனைப்பூர்வமாக உள்ளன. எடுத்தபாதம், சீருடைகழல் போன்ற பெயர்கள் நடனத்தோடு இணைத்துப் பார்க்க வேண்டுவன. பெரும்பாலான பெயர்கள் இருவருக்கு இடப்பட்டுள்ளன. அரங்கம், அம்பலம், பொன்னம்பலம் என்ற பெயர்களிலும் பெண்டுகள் இருந்துள்ளனர். இவர்கள் பொதுவிடமான அம்பலத்தில் கூத்தாடியிருப்பர்; அம்பலம் என்பது கோயிலையும் குறிக்கும். தில்லை கோயில் பொன்னம்பலம் என்று குறிக்கப்படுவதைக் கவனிக்க வேண்டும்.

**வைப்புமுறை**

தெற்குத் தளிச்சேரியின் தென்சிறகில் அதாவது, தெற்குத் தெருவில் வசித்த 92 பெண்டுகளும் தனித்தனி வீடுகளில் இருந்தாலும் அவர்கள் 32 குழுக்களாகப் பிரிந்து ஒவ்வொரு குழுவும் ஒவ்வொரு அலகாக (unit) வசித்துள்ளனர். எனத் தெரிகிறது. காட்டாக, முதல் தெருவில் முதல் ஏழு பெண்டுகள் கொத்தாகத் திருவையாற்றில் இருந்த ஒலோகமாதேஸ்வரம் எனும் கோயிலிலிருந்து வந்தோராவர். எட்டு முதல் பதினாறு வரையில் உள்ளோர் நாகப்பட்டினத்து திருக்காரோணம் எனுமிடத்தில் இருந்து வந்துள்ளனர். ஒரே இடத்தில் இருந்து வந்தோர் ஒரே அலகாக வசித்ததில் ஆச்சர்யமில்லை. இவ்வலகுகள் ஒரு தனி ஆய்வுக்குப் போதிய சான்று தருகின்றன.

இக்கல்வெட்டுத் தளிச்சேரிப் பெண்டுகள் ஒவ்வொருவருக்கும் அரசு வழங்கிய நிவந்தமான 100 கலம் நெல் பற்றியும் பேசுகிறது. ஒவ்வொரு பெண்ணுக்கும் ஒரு பங்காக ஆண்டொன்றுக்கு 100 கலம் நெல் குறிக்கப்பட்டுள்ள அதே வேளையில் கோயிலோடு இணைக்கப்பட்ட பிற பணியாளர்களான ஆண் இசைவாணர்கள். நடனப் பயிற்சியாளர்கள் போன்றோருக்கு இரண்டு பங்கு நிவந்தம் அளிக்கப்பட்டுள்ளது. நட்டுவக்காரர்கள் அதாவது, கொன்னக்கோல் ஜதி சொல்பவர் மூவர்க்கு முறையே இரண்டு பங்கு நிவந்தம் தரப்பட்டுள்ளது. அவர்கள் நட்டுவம் என்றழைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் நித்தமாராயன், நிருத்தமாராயன் என்றழைக்கப்பட்டுள்ளனர். நாடகக் கலைஞர்கள் நாடகமய்யன் என்றழைக்கப்பட்டுள்ளனர். நாடகமய்யன் ஒருவனுக்கு ஒன்றரைப் பங்குதான். அதாவது, 150 கலம் நெல் மட்டுமே தரப்பட்டுள்ளது. சாக்கை வகை நடனம் புரியும் ஒருவருக்கு ஒன்றரைப் பங்கு மட்டும் தரப்பட்டுள்ளது. இராஜஸ்ரியனான நித்தவினோதவாத்தியமாரயன் எனும் இசைவாணர்க்கு பங்கு இரண்டு வழங்கப்பட்டுள்ளது. உடுக்கை வாசிக்கும் ஒருவருக்கு ஒன்றரைப் பங்கும், சுப்பிரமணியன் கூத்தனான செம்பியன் வீணை ஆதித்தனுக்கும் அவன் கீழ் உள்ள வீணை விற்பனர்கட்கும் மொத்தமாக மூன்றரைப் பங்கு தரப்பட்டுள்ளன. ஆரியம் பாடுவார் மூவர்க்கு அதாவது, சமஸ்கிருத மொழியில் இசைப்போர்க்கு நாலரைப் பங்கும் தமிழ் பாட ஒருவருக்கு ஒன்றரைப் பங்கும் தரப்பட்டுள்ளன. பக்க வாத்தியர்க்கோ முக்கால் பங்குதான் தரப்பட்டுள்ளன. அதாவது 75 கலம் நெல் மட்டுமே.

தஞ்சைப் பெருவுடையார் கோயிலில் தளிச்சேரிப் பெண்டுகள் தவிர, நடன நாடக ஆசிரியர்கள், தையற்காரர்கள், காவற்காரர்கள் எனப் பலர் இருந்துள்ளனர். இவர்கள் ஒவ்வொருவருக்கும் அளிக்கப்பட்ட நிவந்தத்தின் அளவுகள் பற்றித் தனி ஆய்வு மேற்கொள்ள முடியும். தளிச்சேரிப் பெண்டு ஒவ்வொருவருக்கும் ஒரு பங்கு தரப்பட்டுள்ள அதே வேளையில் பக்கவாத்தியக்காரர்களுக்கும் முக்கால் பங்கு அளிக்கப்பட்டதும், இசைவாணர்களுக்கும், நாடக, நடன ஆசிரியர்களுக்கு இரண்டு பங்கு அளிக்கப்பட்டதும் அவர்களிடையே நிலவிவந்த படிநிலையைக் காட்டுகின்றன.

**குறிப்புகள்**

1. S.I.I.Voil,. II : 3, 4 No.66.

2. Noboru Karashima (et at), A Concordance of personal Names in the Chola inscriptions, Vols, Survodaya Ilakkiyappannai. Madurai, *1978*. இவ்வாய்வில் சோழராட்சிக்குத் துணைநின்ற அலுவலர்கள், வட்டாரத் தலைவர்கள், ஊர்த்தலைவர்கள் போன்றோரின் பெயர்கள் (Given names) பட்டப் பெயர்கள் (Suffixes) சிறப்புறு பட்டப்பெயர்கள் (honorific suffixes) அடிப்படையில் சோழர் சமூகத்தின் போக்குகள் வெளிக்கொணரப்பட்டன. இவ்வாய்வின் நீட்சியாக Noboru Karashima தன் நூலான South India History and Society: Studies from Inscriptions A.D. 800 to 1800 வடி *1800* - இல் ஆள்பெயராய்வு நிலப்பரிவர்த்தனைப் பற்றி அறிந்துகொள்ள துணை புரிந்திருப்பதை விளங்க வைத்திருப்பார். காலவாரியாகவும், வட்டார

வாரியாகவும் செய்யப்பட்ட இவ்வாய்வில் வரலாற்று இயங்குதளத்தின் மேல் தட்டிலிருந்தோர் நிலப்பரிவர்த்தனை செய்திருப்பதை அறிய முடியும்.

3. Kl. Era. Sankaran. Era, Kalaicelvi, “some Aspects of the Social Positions of Women During the Chola Period” in Tamil Nadu Archaeology Perspective (ed) K. Damodaran, Dept.of Archeaology, Govt.of Tamil Nadu, Chennai, 1999 இக்கட்டுரை இரா. கலைச்செல்வியின் எம்.பில்., பட்ட ஆய்வின் சாரமாகும். ஆய்வேட்டின் கருத்துக்களைப் பிழிந்து ஆங்கிலத்தில் வடித்தது நான்; கட்டுரையாளி என்ற உரிமை கலைச்செல்விக்கே உண்டு. தவறுதலாக என் பெயரும் குறிப்பிடப்பட்டது வருந்தத்தக்கதே.

4. இப்பெயர் சோழர் ஆட்சியின் இரண்டாம் காலக்கட்டத்தில் குறைவாக கல்வெட்டுக்களில் பதியப்பட்டதை சைவத்தின் இறங்குமுகமாகக் கருதலாமா? என்று இப்பெயர் பற்றிய தம் ஆய்வில் Noboru Karashima குறிப்பிடுகிறார். நக்கன் என்ற பெயர்ச்சொல் சமஸ்கிருதச் சொல்லிலிருந்து வந்திருக்கலாம் என்கிறார் (Noboru Karashima. South Indian History and Society: Studies from the Iscriptions A.D. 800 to 1800, 1994. p.61).. இவ்வாய்வில், நக்கன் ஆண்களுக்கான பெயராயுள்ளது. நம் ஆய்விலோ இச்சொல் பெண்களுக்கான பெயராக உள்ளது. நக்நா என்ற சொல்லியிருந்தே வந்திருக்க வேண்டும் என்றும் Naked person அதாவது நிர்வாணி என்றும் தமிர் லெக்சிகனில் (2122) பொருள் உள்ளது. அம்மணமாயுள்ளவன் திகம்பரனாகையினாலே நக்கன் என்று பெயராய் என திருவாய்மொழியிலே குறிக்கப்படுவதால் நக்கன் என்ற சொல் சமணத் துறவியைக் குறிக்கும் சொல்லாகக் கருத இடமுண்டு. கட்டுரைக்குப் பயன்படுத்திய கல்வெட்டில் இச்சொல் தளிச்சேரிப் பெண்டுகளைக் குறிக்கவே பயன்படுத்தப்பட்டுள்ளது. அவர்களில் பலர் நடன மாதர்களாய் இருந்தார்கள் என்பதும் அறிந்ததே. நக்கனத்தோடு நடஞ் செய்வான் (Tamil Lexican, 2122) என்றத் தொடர் அம்மணமாய் நடனஞ்செய்தவரைக் குறிக்கிறது என்று ஏற்றுக்கொண்டால் தஞ்சைப் பெருவுடையார் கோவில் தளிச்சேரிப் பெண்டுகள் ஆடையின்றி கோயிலில் நடனமாடியுள்ளனர் எனக் கருத இடமுண்டு. இக்கூற்று உண்மை என்பதைப்போல் அக்கோயிலில் உள்ள நடன மாதரின் பலநிற ஓவியங்கள் ஆடையின்றி உள்ளன (ஓர் இடைவார் தவிர) என்பதையும் நாம் அவதானிக்க வேண்டும். பார்க்க. K.A. Nilakanta Sastri, The Colas, (Reprinted) University of Madras, Chennai, 1984 and A Histoty of South India: From Prehistoric Times to the fall of Vijayanagara (Eleventh Edition) OUP, Chennai, 1992; R.Champakalakshmi, “New Light on the Cola Frescoes of Tanjore” in Journal of Indian History - Golden Jubilee Volume. 1973. pp. 350-359. The Paintings “are found In the dark inner ambulatory Vimana of the temple.” This inner ambulatory is divided into 15 chamber. In the 7th chamber, the dancing girl (apsaras) is in the nude pose. But in chamber no.9, the attendants are shown in coat.

5. அகம், புறம் ஐங்குறுநூறு, கலித்தொகைப் பாடல்களிலும், சிலப்பதிகாரம், பட்டினப்பாலையிலும் தென்னவன் எனும் பெயர்ச்சொல் பாண்டியரைக் குறிப்பதாகச் சொல்லப்படுகிறது (N. Subrahamanian, Pre-Pallavan Index, (Second Edition) University of Madras, 1990, p.456). தென்னவன் என்பதும் மீனவன் என்பதும் பாண்டியரின் பட்டப் பெயர் என்று ஏற்கனவே உறுதிப்படுத்தப்பட்டுள்ளது (மொ.அ.துரை அரங்கசாமி, சங்ககாலச் சிறப்புப் பெயர்கள் (இரண்டாம் பதிப்பு) பாரி நிலையம், சென்னை, 1980. பக். 221. 222).

6. படைத்துறைப் பண்பு கொண்ட மறவர்குல ஊர்களில் ஒன்றான விரையாச்சிலை இடைக்கால வரலாற்றின் நிலைப்படைக் கொண்ட படைப்பற்று ஊராக இருந்துள்ளது. புதுக்கோட்டைத் தொண்டைமான் கள்ளர்களின் எழுச்சிக்கும் ஆட்சிக்கும் துணைநின்ற இவ்வூர் மறவர்களின் அரசியல் நிலை இருபதாம் நூற்றாண்டு வரையிலும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்துள்ளது. பார்க்க. Nicholas B.Dirks, The Hollow Crown: Ethnohistory of an Indian Kingdom, Cambridge University Press in association with Orient Longman, Hyderabad, 1987.



# தமிழ் நாவல்கள்

பொன்னீலன்



### பாகம் - I

காவியம் பேரரசர்கள் காலத்து இலக்கிய வடிவம். 17-18-ஆம் நூற்றாண்டுகளில் சிற்றரசர்களின் காலத்தில், அதாவது ஜமீந்தார்களின் காலத்தில், சிற்றிலக்கியங்கள் உருவாகின்றன.

ஜமீந்தார்கள் எங்கேயோ இருக்கும் பேரரசர்களின் அடியாட்கள். பேரரசர்களின் சொல்கேட்டு நடப்பவர்கள். இவர்கள் காலத்தில் சுய சிந்தனைக்கு இடமில்லை. சிருங்கார ரசம் மிக்கப் படைப்புகளே அவர்களின் சபைகளில் அரங்கேற்றப்பட்டன. இவை சிற்றிலக்கியங்கள் எனப்பட்டன. உலா, கலம்பகம் எனப் பலவகைகளில் இவை பாடப்பட்டன.

19-ஆம் நூற்றாண்டில் இந்தியாவில் ஆங்கில ஆட்சி உறுதிப்பட்டது. ஆங்கில ஆட்சி மூலம் ஆங்கிலக் கல்வி நுழைந்தது. புதிய ஆங்கிலம் படித்த நடுத்தர வர்க்கம் உருவானது. அச்சகங்கள் திறக்கப்பட்டன. புதிய புதிய நூல்கள் ஏராளம் அச்சிடப்பட்டன.

ஆங்கிலம் படித்த நடுத்தர வர்க்கத்தினருக்குச் சிற்றிலக்கியங்கள் சலிப்பூட்டின. வெளி நாட்டிலிருந்து, குறிப்பாக அன்று இங்கிலாந்திலிருந்து இறக்குமதியான ஆங்கில இலக்கியங்கள் இந்தியாவில் வாசிக்கக் கிடைத்தன. இந்த இறக்குமதி இலக்கியங்களை வாசித்த தமிழக நடுத்தர வர்க்க அறிவுஜீவிகள் இங்கும் இம்மாதிரி இலக்கியங்களை உருவாக்க விரும்பினர். இவர்கள் அனைவருமே உயர் சாதியினர். இவர்களில் முதன்மையானவராக அன்று இருந்தவர் மாயூரம் வேதநாயகம் பிள்ளை. இவர் முன்சீப்பாகப் பணியாற்றும் வாய்ப்புப் பெற்றவர்.

இந்த வேதநாயகம் பிள்ளை (1826-1889) ‘பிரதாப முதலியார் சரித்திரம்’ என்ற நாவலை 1878இல் எழுதினார். இது தமிழ்ப் பெண்களின் உயர்வைப் பேசும் கற்பனையான நாவல்.

அடுத்து ராஜம் அய்யர் 1895இல் ‘கமலாம்பாள்’ சரித்திரம் எழுதினார்.

மாதவய்யா ‘பத்மாவதி சரித்திரம்’ என்னும் நாவலை 1898இல் எழுதினார்.

இவர்கள் எழுதியவை கதாநாயகிகளின் வாழ்வைச் சரித்திர வடிவத்தில் பேசின. இன்று இந்த வடிவம் கைவிடப்பட்டது.

மாயூரம் வேதநாயகம் பிள்ளை 1879இல் முதல் நாவல் எழுதுவதற்கு முன்பே, 1775 இல் சிவகங்கை

மன்னர் வடுகநாத துரைக்கு முத்துக் குட்டி அய்யா சொன்ன 'வசன சம்பிரதாயம்' என்னும் கதை பனை ஓலையில் எழுதப்பட்டது. தமிழில் அறியப்பட்ட முதல் உரைநடை நூல் இதுவே. இது 1895இல் அச்சிடப்பட்டது.

இந்த முதல் நாவலுக்கு முந்தியே நெல்லை சேஷ அய்யங்கார் 'ஆதியூர் அவதானி' என்னும் செய்யுள் வடிவ நாவலை எழுதினார். ஒரு பிராமணர் தன் மகளுக்குச் சாதி மறுப்புத் திருமணம் செய்த கதை இது. இதை எழுதியதற்காக சேஷ அய்யங்கார் பல தொல்லைகளுக்குள்ளானார். அவர் மகளின் திருமணப் பந்தல் எரியூட்டப்பட்டது. அவர் தன் ஊரை விட்டு நெல்லைக்கே குடிபெயரும்படி ஆயிற்று.

இந்தக் காலத்தில் வீரமா முனிவர் பரமார்த்த குரு கதை எழுதினார். பல கதைகள் பிற மொழிகளிலிருந்து தமிழில் மொழிபெயர்க்கவும் பட்டன. இவை எல்லாம் நாவல்கள் அல்ல, வெறுங் கதைகளே. ஏனெனில் இவை சமகாலச் சமூக வெளிச்சமற்றவை.

இக்காலத்தில் ஒரு மலையாள முன்சீப் 'இந்துலேகா' என்னும் முதல் நாவலை மலையாளத்தில் எழுதினார். மலையாளப் பெண்களின் உயர்வைப் பேசும் நாவல் இது.

**நாவலின் வகைகள்**

பிரதாப முதலியார் சரித்திரம் புனைவியல் வகையைச் சார்ந்தது. புனைவியல் என்றால் என்ன? எல்லா நாவல்களும் புனைவுகளே. ஆயினும் புனைவியல் என்பது ஒரு தனிவகை.

நற்பண்புகளையும் தீய பண்புகளையும் தேவைக்கேற்பப் பாத்திரங்களாகப் படைத்து, ஒன்றோடு ஒன்று மோதவிட்டு உருவாக்கப்படும் கற்பனைப் படைப்பு புனைவியல்.

புனைவியல் நாவல்களிலும் எதார்த்தக் கூறுகள் இருக்கும்.

(எ.கா) கல்கியின் 'அலை ஓசை.'

நீல பத்மநாபனின் 'தலைமுறைகள்' ஒரு எதார்த்த நாவல். அதில் புனைவியல் கூறுகள் கலந்துள்ளன.

கலப்பில்லாமல் நகை செய்ய இயலாது. இலக்கியத்திலும் இதுதான் உண்மை.

**காவியத்துக்கும் நாவலுக்கும் வேறுபாடு**

**காவியம்**

1. பழமையைப் பேசுவது
2. இறந்தொழிந்த பழங்காலம்
3. வாழ்வை மீறிய பாத்திரங்கள்
4. இலட்சிய மொழி சில வேளைகளில் தலைப்பிரட்டைமொழி
5. விழுமியங்களைப் பேசும்\

**நாவல்**

1. புதுமையைப் பேசுவது
2. அண்மைக்காலம்
3. வாழ்வில் நாம் சந்திக்கும் பாத்திரங்கள்
4. மக்கள் மொழி.
5. வாழ்க்கைப் பிரச்சினைகளைப் பேசும்

'பிரதாப முதலியார் சரித்திரம்' நாவல் கூறுகளும் காவியக் கூறுகளும் கொண்டது.

1898இல் நாகர்கோயில் அருமை நாயகம் "மீதி இருள்" என ஒரு நூல் எழுதினார். இது கிறிஸ்தவப் பிரச்சாரத் தன்மை கொண்டது. எனவே நாவலாக ஏற்றுக் கொள்ளப்படவில்லை. நாவல் என்பது சமகாலச் சமூகத்தை விமர்சனம் செய்யும் உள்ளகம் கொண்டது.

## பாகம் - II

19-20ஆம் நூற்றாண்டுகளில் ஆங்கிலக் கல்வியாலும், சீர்திருத்தக் கிறிஸ்தவத்தின் முயற்சிகளாலும், சமூக அடுக்குகளில் குலைவுகள் ஏற்பட்டன. அடித்தளத்தில் நசுங்கிக் கொண்டிருந்த உழைக்கும் மக்கள் படிப்படியாக விடுதலையடையத் தொடங்கினர். இதனால் நிலப்பிரபுத்துவக் கோபுரக் கட்டுமானத்தின் அடித்தளத்தில் உடைவுகள் ஏற்பட்டன. அடித்தளத்தில் நெடுங்காலம் நசுங்கிக் கொண்டிருந்த உழைக்கும் மக்கள் படிப்படியாக விடுதலையடையத் தொடங்கினர்.

இதனால் கோபுரத்தில் மேலிருந்தோர் வீழ்ச்சியடையத் தொடங்கினர். இது நிரந்தர வீழ்ச்சி. வீழ்ச்சியடைந்தவர்கள் வேறு வழி தெரியாமல், ஆன்மவிசாரத்தில் மூழ்கினர். இந்தப் போக்கு நவீனத்துவப் போக்கு எனப்படுகிறது.

கமலாம்பாள் சரித்திரம் இந்த வீழ்ச்சிப் போக்கைப் பேசுகிறது. இதன் தொடர்ச்சியாகப் பொய்த் தேவு, ஜே.ஜே. சில குறிப்புகள் முதலியன படைக்கப்பட்டன.

இந்த இடிபாடுகளின் இடையே சிக்கியும், வாழும் முயற்சியும், நம்பிக்கையும் கொண்ட

துளிர்கள் குருத்தெடுத்து வளரத் தொடங்கின. இதைப் பத்மாவதி சரித்திரம் என்னும் படைப்பில் மாதவய்யா எழுதிக் காட்டினார். இது எதார்த்தப்போக்கு எனப்படுகிறது.

யதார்த்தம் என்பது என்ன? நேற்று இன்றாக, இன்று நாளையாகப் பரிணமிக்கச் சமூகத்தினுள் இயங்கும் உள் ஆற்றலே எதார்த்தம். இந்த எதார்த்த ஆற்றல் எங்கும் நிறைந்திருக்கிறது. இதன் வளர்ச்சியை, இயக்கத்தை, மோதலை, முரன்களை வரைந்து காட்டும் இலக்கியமே எதார்த்த இலக்கியம் எனப்படுகிறது.

மேற்குலகம் நவீனத்துவத்தை ஏன் கொண்டாடுகிறது? அந்த மேற்கு உலகம் ஒரு காலத்தில் உலகம் முழுவதையும் கொள்ளையடித்தது. ஆதிக்கம் செய்தது. அதன் அடிமை நாடுகள் இன்று விடுதலை பெற்றுச் சுயமாக வளர்கின்றன. எனவே பிறரைச் சுரண்டும் வாய்ப்புகளை இழந்து சோர்ந்து கிடக்கும் அது வீழ்ச்சியின் இலட்சியத்தைக் கொண்டாடுவது இயல்பே.

மாதவய்யா ஆழமான எதார்த்த வாதி. அவர் தொடங்கி வைத்த போக்கு இன்று வலுவாக வேர்விட்டுத் தமிழகத்தில் வளர்ந்து படர்கிறது.

அடுத்த கட்டமாகத் தமிழகத்தில் மர்ம நாவல்கள் குவியல் குவியலாக மொழி பெயர்க்கப்பட்டன. ஆரணி குப்புசாமி முதலியார், வை.மு. கோதைநாயகி அம்மாள், வடுவூர் துரைசாமி அய்யங்கார் முதலியோர் மர்மக் கதைகளை ஆங்கிலத்திலிருந்து தமிழில் மொழி பெயர்த்தனர். மர்ம நாவல்கள் தமிழில் குவிந்தன. தொடர்ந்து தமிழ்வாணன், சுஜாதா முதலியோர் மர்ம நாவல்களைச் சுயமாக எழுதினர்.

இப்படியாக மூன்று போக்குகளும் தமிழில் வளர்கின்றன.

இவை போகத் தன் வரலாற்று நாவல்கள் ஒரு போக்காக வளர்ந்துகொண்டிருக்கின்றன. அழகிய நாயகி அம்மாள் எழுதிய "கவலை", நல்ல எடுத்துக்காட்டு. ஆர்.எஸ்.ஜேக்கப் எழுதிய "வாத்தியார்" இன்னும் ஒரு எடுத்துக்காட்டு.

சூழலியல் நாவல்கள்: எந்திர உற்பத்திப் பெருக்கத்தால் இன்று திருப்பூர் போன்ற நகரங்களில் சூழல் கடுமையாக மாசுபடுகிறது. நொய்யல் நதியே சாக்கடையாகிவிட்டது. இதை சுப்ரபாரதிமணியன் சாயத்திரையில் எழுதினார்.

சுவாமிநாதன் கலப்பை என்னும் நாவலை எழுதி இயற்கை விவசாயத்துக்குத் திரும்புக என்றும் கோஷத்தை வலுவாக முன்வைக்கிறார்.

டி.செல்வராஜ் 'தோல்' நாவலில் தோல் பதனிடுவதால் நிலமும் நிலத்தடி நீரும் மாசுபடுவதை எழுதினார்.

**படைப்புகளும் சாதிகளும்**

இன்று சமூகத்தின் பழைய கோபுரக் கட்டமைப்பு உடைந்து அடித்தளச் சாதிகள் படிப்படியாக மேலே வருகின்றன. 1879இல் வேதநாயகம் பிள்ளை முதல் நாவல் எழுதினார். 110 ஆண்டுகள் கழித்து சிவகாமி IAS என்னும் தலித்து ஆனந்தாயி எழுதினார். மேலும் 14 ஆண்டுகள் கழித்து ஜோ.டி.குருஸ் ஆழிசூழ் உலகு எழுதினார்.

என்னை எழுது எழுது என இன்னும் எத்தனைச் சமூகங்கள் படைப்பாளிகளை எதிர்பார்த்துத் தவம் கிடக்கின்றனவோ?

**பாகம் - III**

சமூகம் பூப்பதன் அடையாளமே அதில் இலட்சியம் உருவாவதுதான்.

ஒரு சமூகம் பூத்துவிட்டது என்பதன் அடையாளமே அதில் இலட்சியம் படைக்கப்பட்டுவிட்டது என்பதுதான். இன்னும் நசுங்கிக் கிடக்கிற, புதைந்து கிடக்கிற எல்லாச் சமூகங்களும் பூக்க வேண்டும். அதன் பூவை அதன் படைப்பாளியே உருவாக்க வேண்டும்.

**தமிழ் வரலாற்றில் சில நாவல்கள்**

1930-40-களில் காந்தியப் பேரலை தமிழ்நாட்டில் வீசியது. முருகன் ஓர் உழவன் கே.எஸ்.வெங்கடரமணி எழுதிய நாவல்.

இதயநாதம் சிதம்பர சுப்ரமணியம் எழுதிய நாவல்.

1942- நாகம்மாள்: சண்முக சுந்தரம் எழுதினார். ஒரு விதவைப் போராளியைக் கதாநாயகியாக்கிய நாவல்.

1948-50 திராவிட இயக்க இலக்கியம் உருவானது. மூடத்தன எதிர்ப்பு, வர்ணாசிரம எதிர்ப்பு, இவை திராவிட இலக்கியங்களின் முனைப்புகள்.

டி .கே.சீனிவாசன் ஆடும் மாடும் என்னும் அருமையான நாவல் எழுதினார்.

பொதுவாகத் திராவிட இயக்கம் இலக்கியங்களில் பாலியல் மிகை, அடுக்கு மொழி ஆகியன இருக்கும். இவை இலக்கிய படைப்புகளுக்குக் கவர்ச்சியூட்டின.

சாண்டில்யனிடமும் இப்போக்கு உண்டு.

மு.வ. நாவல்களில் அறவுரை மிகுந்திருக்கும்.

கல்கி வரலாற்றுப் புனைவுகள் எழுதினார்.

நிஜ வரலாற்று நாவல் பிரபஞ்சன் எழுதினார். (வானம் வசப்படும்)

சு.வெங்கடேசன் காவல்கோட்டம் எழுதினார்.

1950 யதார்த்த வாதம் ஒரு புதிய கட்டத்தை எட்டியது. அன்ற நெல்லையில் நடந்த நெசவாளர்களின் போராட்டத்தை மையமாகக் கொண்டு ரகுநாதன் பஞ்சம்பசியும் எழுதினார்.

1964இல் ஹெப்சிபா ஜேசுதாசன் பனை ஏறி நாடார்க்ளுக்கும் நிலமைக்கார நாடார்களுக்கும் இடையே உள்ள முரணை வைத்துப் புத்தம் வீடு எழுதினார்.

1966இல் சு.சமுத்திரம் ஒரு கோட்டுக்கு வெளியே என்னும் நாவல் எழுதினார்.

தலித்துப் பெண்கள் நாடர் பெண்களின் ஏற்றுமையை இது பேசியது.

டி.செல்வராஜ் மலரும் சருகும் எழுதினார். நெல்லை மாவட்ட விவசாய கூலிகளின் போராட்டம் பற்றிய நாவல் அது.

கு.சி.பா. தாகம் என்னும் நல்ல நாவல் எழுதினார். மண் வாசனை மிக்க எதார்த்த நாவல்.

பொன்னீலன் - கரிசல் மண்ணையும் மக்களையும் நவலாக எழுதினார்.

வாத்தியார் நாவல் ஆர்.எஸ்.ஜேக்கப் எழுதினார்.

1992இல் சிவகாமி அய்.எ.எஸ் ஆனந்தாயி என்னும் அருமையான தலித் நாவல் எழுதினார்.

2012இல் மலர்வதி தூப்புக்காரி எழுதினார்.

**சில முக்கியமான நாவல்கள்**

| | |
|---|---|
| நீல பத்மநாபன் | - பள்ளி கொண்டபுரம் |
| அ.மாதவன் | - கிருஷ்ணப்பருந்து |
| சா.கந்தசாமி | - சாயாவனம் |
| வண்ணநிலவன் | - கடற்புறத்தில் |
| எம்.வி.வெங்கட்ராம் | - கேள்வித் தீ |
| கண்மணி குணசேகரன் | - கோரை |
| தங்கர்பச்சான் | - ஒன்பது ரூபாய்நோட்டு |
| நாஞ்சில் நாடன் | - தலைகீழ் விகிதங்கள் |

1950இல் பெண் எழுத்தாளர்கள் களத்துக்கு வந்தார்கள். லட்சுமி - உயர் வகுப்புக் குடும்பங்களில் ஆண் ஆதிக்கத்துக்கு எதிரான பிரச்சினைகளை எழுதினார் இவர் உயர் சமூகங்களில் பெண் குரல் இதன் மூலம் வலிமை பெற்றது.

சூடாமணி, அனுத்தமா, அனுராதா ரமணன் இவர்களும் பெண்கள் பிரச்சினைகளை எழுதினர். 1956-ல் தி.ஜானகி ராமன் அம்மா வந்தாள் என்னும் கலையழகு மிக்க நாவல் எழுதினார். அழகிய நாயகி அம்மாள் கவலை என்னும் தன் வரலாற்று நாவலை எழுதினார்.

பாமா கருக்கு, வன்மம் ஆகியன எழுதினார் - இவை தலித் நாவல்கள்.

ராஜம்கிருஷ்ணன் குறிஞ்சித் தேனில் எழுதத் தொடங்கினார். தொடர்ந்து வாழ்க்கையின் எதார்த்தத்தைத் தேடித் தேடி நாவல்கள் எழுதினார். கரிப்பு மணிகள், கூட்டுக் குஞ்சுகள் முதலிய எதார்த்த நாவல்கள் இவர் எழுதியவை.

**சிறுபான்மையினர் நாவல்கள்**

தோப்பில் முகமது மீரான் ஒரு கடலோர கிராமத்தின் கதை எழுதினார்.

மீரான் மைதீன் ஓதி எறியப்படாத முட்டைகள் எழுதினார்.

**சூழலியல் நாவல்கள்**

இன்று எந்திரங்களின் வளர்ச்சியால் சூழல் கெடுவதை சுப்ரபாரதிமணியன் எழுதினார். விவசாயத்தில் நஞ்சுவிதை மருந்தாகப் பயன்படுத்தப்படுவதற்கு எதிராகச் சாமிநாதன் கலப்பை நாவல் எழுதினார்.

காலந்தோறும் சமூகத்தில் புதுப்புதுப் பிரச்சினைகள் தோன்றுகின்றன. பிரச்சினைகள் படைப்புகளாக மலர்கின்றன.

வருங்கால வடிவம் எது? காலமே பதில் சொல்லும். ஆயினும் வருவதை நேசிப்போம் வாசிப்போம், விமர்சிப்போம் வளர்விப்போம்.

*(6.6.2019 அன்று கேரளப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையில் இரண்டு அமர்வுகளில் ஆற்றிய உரையின் கட்டுரை வடிவம்.)*

●



# இந்தியப் பொருள்முதல்வாதத் தத்துவம்

## ராமகிருஷ்ண பட்டாச்சார்யா உடன் ரிச்சர்ட் மார்ஷல் நேர்காணல்.

தமிழில் : மகேஷ் இராமநாதன்

இந்திய தத்துவச் சிந்தனைகளில் ஆய்வு செய்துவரும் தத்துவவாதிகளிடம் நேர்காணல்கள் செய்வது என்கிற வரிசையில் 3:am என்ற இதழ் ராமகிருஷ்ண பட்டாச்சார்யாவை (பாவ்லோவ் நிறுவனம், கொல்கத்தா, மேற்கு வங்காளம்) கடந்த ஆகஸ்ட் 2018ல் நேர்காணல் செய்துள்ளது.

ராமகிருஷ்ண பட்டாச்சார்யா 28 புத்தகங்கள் மற்றும் 175க்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகளின் ஆசிரியர். அவர் (இந்திய மற்றும் ஐரோப்பிய) இலக்கியம், (வங்காள மற்றும் சமஸ்கிருத) பனுவல் விமர்சனம், கருத்துகளின் வரலாறு, இந்திய அறிவியல் வரலாறு, நவீன இந்திய வரலாறு, தத்துவம் (குறிப்பாக சார்வாக/ உலகாயத தரிசனம், பொருள்முதல்வாதம் மற்றும் பகுத்தறிவு) ஆகியவை பற்றி ஆய்வு இதழ்களிலும், பிற இதழ்களிலும் கட்டுரைகளும் மதிப்புரைகளும் எழுதியுள்ளார். இங்கே இந்தியாவில் பொருள்முதல்வாதம் எப்போது தொடங்கியது, சார்வாகத்திற்கு முந்தைய இந்தியப் பொருள்முதல்வாதிகளின் கருத்துகள், ஜபாலி, இந்தியாவில் தர்க்கத்தின் வளர்ச்சி, மாயாவாதம், அஜிதகேசகம்பளி, பிரஹஸ்பதி, சார்வாக சூத்திரத்திற்கும் பௌத்தர்களுக்குமான உறவு, உண்மையில் மக்களை எதை ஏற்றுக் கொள்ள சார்வாகர்கள் சொன்னார்கள், சுபாவத்திற்கும் சீன தாவோ கொள்கைக்கும் இடையிலான தொடர்பு, இக்காலத்தில் சார்வாக/உலகாயத பாரம்பரியம் தேய்ந்தழியவும் பௌத்தம் பிரபலமடையவும் காரணம் என்ன முதலானவை குறித்து விவாதிக்கிறார்.

**3:AM: எது உங்களைத் தத்துவவாதியாக உருவாக்கியது?**


நான் என்னை தத்துவவாதி என அழைப்பதை விரும்பவில்லை. நான், குறிப்பாக இந்தியாவிலும் கிரேக்கத்திலும் உருவான பொருள்முதல்வாத தத்துவத்தின், வாழ்நாள் முழுதுமான தத்துவ மாணவனே. இதுவரை கிடைத்திருக்கக்கூடிய பெரும்பாலான சார்வாகம், உலகாயதம் பற்றிய பரபக்க மூலாதாரங்களைப் படித்தும் கூட, அவை எனக்கு திருப்தி தரவில்லை. 1980களில் நான் நேரடி மூலாதாரங்களைத் தேடத் தொடங்கினேன், தெளிவான புரிதலை வந்தடைய மேலும் அதிகமான வேலை செய்ய வேண்டியுள்ளது என்பதைப் புரிந்து கொண்டேன். நான் முதலில் சார்வாகம்/உலகாயதம் பற்றி என் தாய்மொழியான வங்காளத்தில் கட்டுரைகள் எழுதி வெளியிட்டேன், பிறகு என்னுடைய சில உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நன்பர்களின் ஊக்கத்தால், சர்வதேச இதழ்களில் கட்டுரைகளை வெளியிட்டேன். இப்படியாக நான் இயற்கையான ஆர்வத்தினாலோ அல்லது பயிற்சியினாலோ தத்துவவாதியாகாமலே, நான் இந்திய பொருள்முதல்வாதத்தில் முக்கியமானவனாக மாறினேன். மேலும் என்னுடைய உலகப்பார்வையான, மார்க்சிய-லெனினியமும், பொருள்முதல்வாத தத்துவ ஆய்வுகளின் பக்கம் என்னுடைய கவனத்தைத் திருப்பியது. இதுவே இப்பொழுதிற்கு நான் சொல்லக்கூடியது. உங்களைப் போன்ற சிலர் மிகுந்த தாராள மனதோடு என்னைத் தத்துவவாதி என்று அழைப்பீர்களேயானால், அப்படிச் செய்வது உங்களுடைய தயாளகுணம்.

**நீங்கள் இந்தியத் தத்துவ மரபில் உள்ள பொருள்முதல்வாதம் குறித்து புலமை மிக்கவர். இந்தியாவில் பொருள்முதல்வாத மரபு எப்பொழுது தொடங்கியது? சிலர் குறிப்பிடுவதுபோல அது மன்னர்களால் உருவாக்கப்பட்டதா?**

என்னுடைய Studies on the Carvaka/Lokayata (Florence 2009, London and New Delhi 2011) நூலில் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளதைப் போல பொருள் முதல்வாதத்தின் (தொல் பொருள்முதல்வாதம் (proto-materialism) எனக் குறிப்பிடுவதே சரியானது) தோற்றம் என்பது அரசரீதியானது என்பதை விட வெகுசனரீதியானதே. தீக நிகாயத்தில் பயாசி இளவரசராகவோ ஆளுநராகவோ குறிப்பிடப்படுகிறார். அஜிதகேசகம்பளி கடும் துறவறத்தை மேற்கொண்டவர். அறுபத்தியிரண்டு வேத மறுப்பு கொள்கைகளின் முக்கியமான ஆறு கொள்கையாளர்கள் அரசவம்சத்தை சேர்ந்தவர்கள் இல்லை என்பதைப் பௌத்த மூலங்கள் தெளிவுபடுத்துகின்றன. அவர்கள் இடம் விட்டு இடம் பெயர்ந்து தங்கள் சீடர்கள் பின்தொடர பயணித்துக் கொண்டே இருந்தவர்கள். தீக நிகாயத்தில் வரும் "சாமஞ்ஞபல சுத்தம்" (சிரமணநெறியின் பயன் குறித்த பொழிவு) தொல் பொருள்முதல்வாதத்தின் வெகுசன தோற்றுவாய் குறித்து குறிப்பிடுகிறது. முந்தைய அறிஞர்கள் இந்த அம்சங்களையெல்லாம் கணக்கிலெடுக்காமல் பயாசியை மட்டுமே குறிப்பிடுகிறார்கள். மரணத்திற்கு பிந்தைய வாழ்க்கை / மறுபிறப்பு மறுதலிப்பில் பயாசிக்கும் அஜிதகேசகம்பளிக்கும் இடையே ஒப்புமைகள் உள்ளன எனக் குறிப்பிடலாம், ஆனால் பயாசி தொட்டுக்கூட பார்க்காத பல அம்சங்களை அஜிதரின் கூற்று மிக விரிவாகப் பேசுகிறது.

**இந்தியாவில் சார்வாகத்திற்கு முன் பொருள்முதல்வாதிகள் என எவரேனும் இருந்துள்ளனரா ?**

இதற்குப் பதில் ஆம் என்பதே. இது குறித்து என்னுடைய கட்டுரையான 'இந்தியாவில் பொருள்முதல்வாதத்தின் வளர்ச்சி: சார்வாகர்களுக்கு முன்பும் சார்வாகர்களும்' ('Development of Materialism in India: the Pre-Cārvākas and the Cārvākas', Esercizi Filosofici 8, 2013, pp. 1-12. (2013) இது குறித்துதான் ஆராய்கிறது. தென் இந்தியாவில் பொது யுகத்தின் தொடக்கத்தில், குறைந்தது பூதவாதம், உலகாயதம் ஆகிய இரண்டு பொருள்முதல்வாதப் பள்ளிகள் இருந்துள்ளன என்பதை நிரூபிக்கப் போதுமான ஆதாரங்களைக் குறிப்பிட்டுள்ளேன். சமீபத்தில்



நான் பழைய தமிழ் காப்பியமான நீலகேசி குறித்து அறிந்தேன், அது பூதவாதத்தை மட்டுமே தனியாகப் பேசுகிறது. இப்படியாகத் தென் இந்தியாவில் சார்வாகர்கள் வருவதற்கு முன்பே பௌத்தர்களும் ஜைனர்களும் (கி.பி. எட்டாம் நூற்றாண்டு அல்லது அதை ஒட்டி) பொருள்முதல்வாதத்தைத் தங்களின் கூட்டாளிகளாக அல்லாமல் எதிரிகளாகக் கருதி வந்திருக்கிறார்கள்.

**நீங்கள் ஜபாலியை தொல் பொருள்முதல்வாதி எனவும், அவர் புத்தரைவிட வயதில் மூத்த, ஆனால் புத்தருடைய சமகாலத்தவரான அஜிதகேசகம்பளியைப் பின்பற்றியவர் எனவும் அழைக்கிறீர்கள். ஏன் அவர்கள் மறுஉலகம் உண்டு என்பதை மறுத்தார்கள், இறந்த மூதாதையருக்கு செய்யப்படும் சடங்குகள் பயனற்றவை என ஏன் எதிர்த்தார்கள்? அவர்கள் வேண்டுமென்றேதான் மரபான பழக்கங்களை எதிர்த்தார்களா? அப்படியானால் அவர்களுடைய நோக்கம்தான் என்ன?**

சொர்க்கம், நரகம் என்பவற்றை கண்ணால் கண்ட சாட்சிகள் இல்லை என்பதால் தொல் பொருள்முதல்வாதிகளான ஜபாலி முதலானவர்கள் மறுஉலகத்தை மறுத்தனர். இந்த தொல் பொருள்முதல்வாதிகள் அறிதலுக்கான ஒரே கருவியாக, கண்ணால் காண்பதை மட்டுமே நம்புபவர்கள், அதில் அவர்கள் உறுதியாக ஊன்றி நின்றார்கள், அதனால்தான் அவர்கள் மறு உலகத்தையும், இறந்த மூதாதையர்களுக்கு செய்யும் சடங்குகளின் பயனையும் மறுத்தார்கள். தம் இருப்பை மட்டுமே ஏற்றுக்கொண்ட அவர்களிடம், நிலைபேறு சார்ந்த, அறம் சார்ந்த கூற்றுகளை மறுத்தொதுக்குவதற்கு ஒழுங்கமைவான அறிவுத் தோற்றக் கொள்ளை இல்லை. ஆகவே அவர்கள் முறையான [தத்துவார்த்த] பொருள்முதல்வாதிகள் அல்ல, தொல் பொருள்முதல்வாதிகள். ஆயினும் பண்பட்ட எதார்த்தவாதிகளான அவர்கள் பார்ப்பனியம் ஊட்டி வளர்த்த மரபான நம்பிக்கைகளுடன் முரண்பட்டார்கள். இந்த அர்த்தமற்ற சடங்குகளைக் கடைபிடிக்கச் சொன்ன தர்மசாத்திரக்காரர்களும், அச்சடங்குகளைத் திணித்த மதகுருமார்களும் அவர்களின் முக்கிய இலக்கானதில் ஆச்சர்யப்பட ஒன்றுமில்லை.

**தர்க்க வளர்ச்சியில் முக்கியமானதாக விளங்குகிற, புத்தர் காலத்தைச் சேர்ந்த முந்தைய தொல்பொருள்வாதியான அரசர்/ஆளுநர் பயாசியின் வாதம் குறித்து எழுதியுள்ளீர்கள். இது எவ்வாறு தர்க்கத்தின் வளர்ச்சிக்கு உதவியது? அவ்வாதம் தொல் பொருள்முதல்வாதியுடையது என்றால், எவ்வாறு மறு உலகத்தின் இருப்பை அவ்வாதம் உறுதிசெய்கிறது?**

இல்லை. இந்தியாவில் தர்க்கத்தின் வளர்ச்சிக்கு நேரடியாகப் பயாசி பங்களிப்பு செய்தவரில்லை. அழியாத ஆத்மா முதலானவற்றின் இருப்பு குறித்த அவருடைய மறுப்புக்கு ஆதாரம் உபமானம் அல்லது அனுமானம் என்பதைத் தவிர வேறு எதையும் குறிப்பிட முடியாது. அரசர்/ஆளுநர் பயாசி பற்றிய சுத்தம், நோக்கி அவர் அறிதலின் இரண்டாவது உபகரணமான அனுமானத்தை முன்னேறியிருந்தார் எனத் தெரிவிக்கிறது. இவ்வாறு தர்க்கத்தின் வளர்ச்சிக்கு தொல் பொருள்முதல்வாதிகள் மறைமுகமாக காரணமாவார்கள். கட உபநிடதத்தில் வரும் எமனும், மறு உலகத்தின் இருப்பிற்கு சப்த பிரமானத்தைத் தவிர வேறு எந்த ஆதாரத்தையும் தரவில்லை. (பாதாள உலகத்தின் ஆட்சியாளனாக அவன்தான் நரகத்தைப் பற்றி பேச அதிகப் பொருத்தமானவன்) அவனே ஆப்தன், அறிவுடையவன் ஆகிறான். இவ்வாறே உபமானம் அல்லது அனுமானம், சப்த பிரமாணம் ஆகிய அறிதலுக்கான இரு உபகரணங்கள் பொருள்முதல்வாதத்தை மறுப்பதற்காகவே முன்வைக்கவும் பயன்படுத்தவும் படுகின்றன.

பயாசியோ அல்லது எந்தவொரு தொல் பொருள்முதல்வாதிகளோ மறு உலகத்தின் இருப்பை எப்போதும் ஆதரிக்கவில்லை; மாறாக அதனை மிகக் கடுமையாக மறுத்திருக்கிறார்கள். பொருள்முதல்வாதிகளாக இல்லாதவர்களே மறு உலகத்தின் இருப்பைக் காட்ட உபமானம், சப்த பிரமாணம் ஆகியவற்றைப் பயன்படுத்தினார்கள்.

**பொருள்முதல்வாதத்திற்கும் சூனியவாதத்திற்கும் ஏதேனும் தொடர்புண்டா, இருமைவாத அமைப்பில்தான் எண்ணத்தை மதிப்பில்லாமலாக்கும் ஒரே சாத்தியம் உள்ளது, ஆகவே இது அன்றைக்கு இருந்த இருமைவாத அமைப்பு மீதான தாக்குதலா?**

இந்தியப் பொருள்முதல்வாதத்திற்கு சூனியவாதம் முதலானவற்றுடன் எந்த உறவும் கிடையாது. அவர்கள் முழுமையான எதார்த்தவாதிகள். மாறாக, சூனியவாதம் உணர்வற்ற இறந்த உடல் இருக்க முடிவதைப் போல, உடலற்ற ஆத்மா இருக்க முடியும் என நம்பியது. பொருள்முதல்வாதம் உணர்வையும் பொருளையும் தனித்தனி வகைமைகளாக, ஒன்றில்லாமல் ஒன்று இருக்க முடியும் என்று பேசிய இருமைவாத அமைப்பின் மீது தாக்குதல் தொடுக்கவே செய்தது.

**அஜிதகேசகம்பளி யார்? மேலும் ஒரு கேள்வி: அவர் சூனியவாதியா அல்லது பொருள்முதல்வாதியா?**

நீங்கள் அறிந்திருப்பதைப் போல,



அஜிதகேசகம்பளி புத்தரைவிட வயதில் மூத்தவரும் அவருடைய சமகாலத்தவரும் ஆவார். அவர், தீக நிகாயத்தில் வரும் அறுபத்தியிரண்டு வேத மறுப்புக் கொள்கைகளில் குறிப்பிடப்படும் முக்கியமான கொள்கையாளர்களில் ஒருவர். அவர் எல்லா காலங்களிலும் கம்பளி ஆடையையே உடுத்தினார். இது அவர் ஒரு கடுமையான துறவு விரதங்களையும், சுய விலக்கத்தையும் மேற்கொள்பவர் என்பதைக் குறிக்கிறது. இப்படியிருந்தும், ஜைன மூலங்களில் இவரும் இவருடைய சீடர்களும் சுகபோகிகள் என்று சாடப்படுகிறார்கள்.

**பிரஹஸ்பதி யார்? இவர் இந்தியப் பொருள்முதல்வாதத்தை தோற்றுவித்தவரா? அவரிடமிருந்துதான் சார்வாகத் தத்துவம் தோற்றம் பெற்றதா? அவரது சிந்தனையின் தாக்குதல் இலக்குகள் பௌத்தமும் ஜைனமுமா?**

நான் பிரஹஸ்பதியும் பிரஹஸ்பதியர்களும் (Brahaspati and the Brahaspatyas, Annali di Ca' Foscari. Serie orientale, Vol.54 - Giugno (June) 2018, pp.147-176) என்ற பெரிய கட்டுரையில் இது குறித்து குறிப்பிட்டுள்ளேன். பிரஹஸ்பதி ஒரு புராண பாத்திரம், உண்மையில் அதற்கும் பொருள்முதல்வாதம் அல்லது பிற எந்தத் தத்துவ அமைப்பிற்கும் எந்தவித சம்பந்தமுமில்லை. சில புராணங்களில் அவர் தேவர்களின் குருவாக, அந்தத் தகுதியுடன், வேத வழியிலிருந்து அசுரர்களைத் திசைதிருப்பித் தவறாக வழிநடத்தும் பொறுப்புடையவராகக் குறிப்பிடப்படுகிறார். ஆனால் இது எல்லா புராணங்களுக்கும் பொதுவானது அல்ல. சில புராணங்களில், பிரஹஸ்பதிக்குப் பதிலாக மாயமோகா வேதவழியிலிருந்து விலக்கும் பணியைச் செய்கிறார். எது எப்படியாயினும், பிரஹஸ்பதி பல இடங்களில் சுரகுரு (தேவர்களின் குரு) என்றும், அரைகுறை தெய்வ அம்சம் ஏதுமில்லாத லோகாயத ஆசிரியர் என்றும் குறிப்பிடப்படுகின்றார்.

பழைய தமிழ் காப்பியமான மணிமேகலையில் சமயவாத ஆசிரியர்களான கானாதர், கபிலர், ஜைமினி முதலானவர்களில் ஒருவராக, தெளிவாக ஒரு சாதாரண மனிதனாக பிரஹஸ்பதி குறிப்பிடப்படுகிறார். இதே உண்மை பத்மபுராணம் உத்தரகாண்டத்திலும் குறிப்பிடப்படுகிறது. கிருஷ்ணமிஷ்ரரின் "பிரபோத சந்திரோதயம்" உருவக நாடகத்தில் அவர் தேவர்களின் குரு என்பதற்குப் பதிலாக மாயமோகத்தை வணங்குபவராகக் குறிப்பிடப்படுகிறார். பிரஹஸ்பதி பொருள்முதல்வாத அமைப்பைத் தோற்றுவித்தவராகக் குறிப்பிடப்பட்டாலும், அதற்கு எந்த அடிப்படையும் இருப்பதாகத் தெரியவில்லை. இந்தப் பிரஹஸ்பதி தேவர்களின் குருவல்ல, ஒரு சாதாரண மனிதன். புராண மரபில் (குறிப்பாக விஷ்ணுபுராணம், 3.18ல்) பிரஹஸ்பதி, வேதவழியிலிருந்து விலக்கப் பௌத்தத்தையும் சமணத்தையும் போதிக்கிறாரே தவிர, உலகாயத்தைப் போதிக்கவில்லை. ஆனால் H.H. Wilson, Muir தொடங்கி பெரும்பாலானவர்கள் அந்தப் பகுதியை உலாகயதத்தைப் போதித்தார் எனவே எடுத்தாளுகின்றனர். நான் இந்த மோசமான தவறு குறித்து என்னுடைய "சர்வ தரிசன சங்கிரகத்தில் பிரஹஸ்பதி சூத்திரங்கள் அத்தியாயம் 1: ஒரு விமர்சன மதிப்பீடு (Verses Attributed to Bhaspati in the Sarvadarśanasagraha Chap. I: A Critical Appraisal', Journal of Indian Philosophy, 41:6, December 2013, pp.615-30) என்ற கட்டுரையில் முன்பே குறிப்பிட்டுள்ளேன்.

**சார்வாகப் போதனை எப்படிப்பட்டது ? அது மறு உலகம் உள்ளிட்ட எல்லா வகை மீ-இயற்கைச் சிந்தனைகளையும் மறுக்கும் முழுமையான பொருள்முதல்வாதத் தத்துவமா? அல்லது அது உலகாயதத் தத்துவ மரபு போன்றதா?**

ஆமாம். சார்வாகப் போதனைகள் முழுமையான பொருள்முதல்வாதத் தத்துவம். இது எட்டாம் நூற்றாண்டு வாக்கில் எந்தவிதமான வெளித் தாக்கங்களும் இன்றி சுதந்திரமாக, இந்தியாவில் தோன்றிய தத்துவம் ஆகும். வாத்சாயனரின் காமசூத்திரத்திலும் பாணபட்டரின் காதம்பரியிலும் குறிப்பிடப்படும் உலகாயதம், இந்தியாவின் வடக்கிலும் தெற்கிலும் பல நூற்றாண்டுகளுக்கு முன்பு நிலவிய தொல் பொருள்முதல்வாதத் தரிசனம் ஆகும். ஆனால் எட்டாம் நூற்றாண்டிற்குக் கொஞ்சகாலம் முன்பாக நாத்திகம், பிரஹஸ்பதியம் ஆகியவற்றுடன் சேர்த்து சார்வாகமும்,

உலகாயதமும் ஒரே பொருள் குறித்த பெயர்களாகவே அறியப்பட்டன. இது சாந்தரசிக்தரின் தொகுப்பான தத்துவசங்கிரகத்திற்கு எழுதப்பட்ட கமலசிலாவின் உரை மூலமும் உறுதிப்படுகிறது. ஜைன அறிஞரான ஹேமச்சந்திரரின் சமஸ்கிருத நிகண்டிலும் இந்த நான்கு பெயர்களும் குறிப்பிடப்படுகின்றன.

**பௌத்த தரிசனத்திற்கு சார்வாகசூத்திரம் எவ்வளவு நெருக்கமானது? குறிப்பாக பிரத்யக்ஷம், அனுமானம் ஆகியவற்றில் எந்த அளவிற்கு நெருக்கமானது? அவர்களது வாதம் பற்றிய வரைந்துகாட்டும்போது, ஆர்ப்பாட்டமில்லாமல் ஒத்த புள்ளிகள், மாறுபடும் புள்ளிகள் என எவற்றைக் காணமுடிகிறது?**

சார்வாகர்களும் (பழைய பொருள்முதல்வாதிகள் அல்ல), பௌத்தர்களும் அறிதலின் இரண்டு அம்சங்களான பிரத்யக்ஷம், அனுமானம் ஆகியவற்றை ஏற்றுக்கொள்கிறார்கள் (அனுமானம் பற்றிய நேர்வில், [சார்வாகர்கள்] பிரத்யக்ஷத்திற்கு உட்பட்ட அல்லது பிரத்யக்ஷத்தில் ஊன்றிய அனுமானத்தை மட்டுமே ஏற்றுக்கொள்கிறார்கள்). சார்வாகர்களுக்கு முந்திய பழைய பொருள்முதல்வாதிகள் இரண்டு விசயங்களில் வேறுபடுகிறார்கள். அவர்கள் பிரத்யக்ஷத்தை மட்டுமே அறிதலுக்கான ஒரே கருவியாக ஏற்றுக்கொள்கிறார்கள். பிரத்யக்ஷத்தை அடிப்படையாகக் கொண்ட அனுமானத்தைக்கூட ஏற்றுக்கொள்வதில்லை. இரண்டாவதாக, சார்வாகர்களுக்கு முந்தையவர்கள் அனைவரையும் போல நிலம், நீர், காற்று, நெருப்பு, ஆகாயம் எனும் ஐம்பூதங்களைப் பற்றி பேசுகிறார்கள். ஆனால் மறுபுறத்தில், புலனுணர்வால் அறியமுடியாது என்பதால் ஆகாயத்தை விலக்கி, சார்வாகர்கள் நான்கு பூதங்கள் பற்றி மட்டுமே பேசுகிறார்கள். எவ்வாறாயினும் பௌத்தர்கள் ஐம்பூதக் கொள்கையுடையவர்கள். இதில்தான் பௌத்தர்களுக்கும் சார்வாகர்களுக்குமான முக்கிய வித்தியாசம் உள்ளது. இருப்பினும் அறிதல்முறைகள் தொடர்பாக பௌத்தத்திற்கும் சார்வாகத்திற்கும் இடையிலான பார்வைகள் தொடர்பாக ஒப்புமைகளை அதிகம் வலியுறுத்தமுடியாது. குறைந்தபட்சம் கி.பி. இரண்டாம் நூற்றாண்டிலிருந்து, இவை இரண்டிற்கும் இடையில் எந்த நட்பும் இல்லை. இரண்டிற்கும் ஒத்துக் கொள்ளாது. சாந்தரக்ஷிதரின் தத்துவசங்கிரகம் யோகசார பௌத்தமும் சார்வாகமும் ஒன்றை ஒன்று எதிர்த்து வெளிப்படுத்தும் மறுப்புகளை பதிவு செய்துள்ளது. பௌத்தர்களைப் போலவேதான் சமணமும். வேதத்தின் பிழைபடா இயல்பு குறித்த பிரச்சனை தொடர்பான விசயங்களில் சார்வாகர்களும் பௌத்தர்களும் ஒன்றுபடலாம்.

**சார்வாகசூத்திரத்தின் சில பகுதிகளே எஞ்சியுள்ளன, அவற்றிற்கும்கூட உரைகளையே நம்பி இருக்க வேண்டியுள்ளது. உத்பாதரின் உரை முதலான உரைகள், பொருள்முதல்வாத ஒருமைவாதமாக அல்லாமல் இருமைவாதமாக சார்வாகசூத்திரத்தைப் பொருள் கொள்கின்றன. இந்த மெய்மையை எவ்வாறு எடுத்துக்கொள்வது? உரைகள் அளிக்கும் குளறுபடியான விளக்கங்களைத் தாண்டி, சார்வாகசூத்திரம் உண்மையில் என்ன அர்த்தப்படுகிறது எனப் புரிந்துகொள்வது சாத்தியமா?**


நமக்கு இதுவரை கிடைத்துள்ள உரைகளிலேயே உத்பாதபட்டர் மட்டுமே இத்தகைய 'திருத்தல்வாத' நிலைப்பாட்டை எடுத்துள்ளார். புரந்தரரால் ஒழுங்கமைத்துக் கொடுக்கப்பட்டதாக நம்பப்படும் சார்வாகசூத்திரத்தை அடியொற்றி பெரும்பாலான உரைகளும் அதை உறுதியான ஒருமைவாதமாகவே குறிப்பிடுகின்றன. ஆகவே, குறிப்பாகப் பருப்பொருள், உணர்வு குறித்த விசயத்தில் மட்டுமாவது, நாம் இந்தச் சூத்திரங்களுக்கு விநோதமான மறுவிளக்கம் தரும் உத்பாதரைக் கவனமாக தவிர்த்துவிடலாம். 'நிலம், நீர், நெருப்பு மற்றும் ஆகாயம் ஆகியவையே அடிப்படை, மற்றவை எதுவும் இல்லை' (I.2) என்ற சூத்திரத்திற்கு எதிராக உத்பாதர் இருமைவாதத்தை நோக்கி முன்னேறுகிறார். இந்த சூத்திரத்திலேயே உள்ள பல வார்த்தைகளுக்கு அடிக்கடி தவறான விளக்கங்களைத் தருகிறார் என்கிற உண்மையின் அடிப்படையில், உத்பாதரின் விநோதமான கருத்து நம்மை திசைதிருப்ப அனுமதிக்கக் கூடாது. நான் என்னுடைய கட்டுரைகளில் இவை குறித்து விவாதித்துள்ளேன். *'சார்வாகசூத்திரத்தின் உரையாசிரியர்கள்: ஒரு விமர்சன ஆய்வு'* (Commentators on the Cārvākasūtra: A Critical Survey, Journal of Indian Philosophy (August 2010a), 38: 4). *'உண்மையில் சார்வாகர்கள் எதைக் குறிப்பிட்டார்கள்: சார்வாகசூத்திர உரையாசிரியர்கள் குறித்து மேலும் அதிகமாக,* (What the Carvakas Originally Meant: More on the Commentators of the Cārvākasūtra, Journal of Indian Philosophy (December 2010b), 38:6, *'உலகாயதப் பொருள்முதல்வாதம்: மூலங்களின் பகுப்பு'* (Lokāyata Materialism: Classification of Source Material) சுபுதிசரன் கோஸ்வாமி தொகுத்த நூலான LokāyataPhilosophy: A Fresh Appraisal. Kolkata: The Asiatic Society, *2010*. வந்துள்ள கட்டுரை. சார்வாகம்/உலகாயதம் உண்மையில் ஒருமைவாதமே, இருமைவாதம் அல்ல.

**பழமைவாதிகளிடமிருந்து வேறுபட்ட வாழ்க்கையை வாழுமாறு மக்களை, சார்வாக/உலகாயத மரபு கூறினவா? உதாரணத்திற்கு சுயஇருப்பை தற்செயலுடன்**

**தொடர்புபடுத்தினால், வாழ்க்கை செயலற்ற ஒன்றாகிவிடும், மற்றவர்கள் கூறுகிறபடி, மாறாக இருப்பைக் காரணகாரியத்துடன் தொடர்புபடுத்தினால் வாழ்க்கை மிகுந்த செயல்பூர்வமானதாகிவிடும். இதன்மூலம், பழமைவாதத் தத்துவ தரிசனங்களால் போதிக்கப்படுகிற ஆத்மா, வாழ்வு, வினை ஆகியவை தொடர்பான பார்வையில் மாபெரும் வேறுபாடு இருந்ததா? காரணகாரியம் அறிவியலுடன் தொடர்புடையதா அல்லது காரணகாரியம் மற்றும் தற்செயல் இரண்டுமே உண்மையில் அறிவியலுடன் தொடர்புடையதா?**

*நிஜத்தில் சார்வாகர்கள் மக்கள் எதனை ஏற்றுக்கொள்ள சொன்னார்கள் என்பதை அறிந்து கொள்ள வழியில்லை. உண்மையில் அவர்கள் தங்கள் சொந்த சமூகங்களில் ஒதுங்கியிருந்தார்கள். தங்கள் பார்வைகளை மக்களிடமிருந்து மறைத்துக் கொண்டு வாழ்ந்தார்கள். அவர்களுடைய அனைத்து எழுத்துக்களும் அவர்களுடைய எதிரிகள் அழித்தார்களோ இல்லையோ, பனிரண்டாம் நூற்றாண்டோடு அழிந்துவிட்டன, உத்பாதபட்டருக்கு (கிபி ஒன்பதாம் நூற்றாண்டு) பிறகு எந்த சார்வாகரின் பெயரும் நமக்கு அறிய கிடைக்கவில்லை. ஆனால் அவர்களுக்கு எதிரான அரசியல் எழுத்துக்களிலிருந்து, அவர்கள் எதார்த்த உலகில் இல்லையென்றாலும், அவர்கள் எத்தனை வலிமையான எதிரிகளாக இருந்தார்கள் என்பதை ஒருவர் யூகித்து அறியலாம். கிருஷ்ணமிஷ்ரரின் ''பிரபோத சந்திரோதயம்'' நாடகத்திலிருந்தும், ஸ்ரீஹர்சாவின் நளன் வாழ்வு (நைடதசரிதம்)-லிருந்தும் சார்வாகர்கள் சாதி அமைப்பிலும், ஏற்றுக் கொள்ளப்பட்ட நான்கு கட்டங்களான (ஆசிரமங்கள்) வாழ்விலும் நம்பிக்கை இல்லாதவர்கள் என அறியமுடிகிறது. இவை இரண்டினாலும் அவர்களை அன்றைக்கு அதிகாரத்தில் இருந்தவர்களால் சகித்துக் கொள்ள முடிந்திருக்காது. பொருள்முதல்வாதத்தின் ஆதரவாளர்களாக, அவர்கள் பெரிய எண்ணிக்கையில் இருந்ததற்கான ஆதாரங்கள் இல்லை.*

*எப்படியாயினும், இது தொடர்பாக ரிச்சர்ட் கார்பே குறிப்பிட்டவை நினைவுகூரத்தக்கவை,, 'இத்தனைக்கும் பிறகு இன்றைக்குப் போலவே அந்தச் சித்தாந்தங்களுக்கு, நிறைய ரகசிய சீடர்கள் இருந்திருப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை.'* (The Philosophy of Ancient India. Chicago: The Open Court Publishing Company, 1899 (second ed.), p.25). *இவை அனைத்தும் அவர்கள் விதிவாதிகள் இல்லை என்பதையும், கூர்நோக்கையும், ஆய்வின் அவசியத்தையும் வலியுறுத்தக்கூடியவர்கள்*



*என்பதையும் உறுதிப்படுத்துகின்றன, அவர்கள் கண்டிப்பாக அறிவியலுக்கும் அறிவியல் அணுகுமுறை உருவாக்கத்திற்கும் பங்களிப்புச் செய்தவர்களாகவே இருப்பார்கள். காரணகாரியத்தின் மீதான உறுதியான கடப்பாடு, வெறும் காரணகாரியம் மட்டுமில்லாமல் இயற்கை விளைவுகள் குறித்த வலியுறுத்தல், 'இயற்கைக்கு மீறிய ஆற்றல்' குறித்த அனைத்தையும் மறுத்தல் ஆகியவை இந்திய பொருள்முதல்வாதத்தைக் குறிப்பிடுகின்றன. மருத்துவ அறிவியல் எழுத்துக்களின் பின்னுள்ள தத்துவம் கண்டிப்பாக, சார்வாகர்களுக்கு முந்தையது போன்ற பொருள்முதல்வாதமே.*

**ஒற்றைக்கடவுள் கொள்கைப் பண்பாட்டிலிருந்து 'இயற்கையின் விதிகள்** [laws of nature]**'தோன்றியிருக்க வேண்டும் என்ற அடிப்படையிலிருந்து சுபவாதத்தை** 'law of nature' **என மொழிபெயர்ப்பதை ஆட்சேபித்து, அதனை தாவோ என்னும் சீனக் கருத்தாக்கத்தோடு தொடர்புபடுத்தி சீனவியலாளரான ஜோசப் நீதம் நோக்கியது சரியா?**

*என்ன காரணமாக இருந்தாலும், சுபவாதத்திற்கும் தாவோவிற்கும் ஒப்புமைகள் உள்ளன என்பதில் தவறில்லை. எவ்வாறாயினும், ஒற்றைக்கடவுள் கொள்கைக்கும் பல்கடவுள் கொள்கைக்கும் அப்பால் சுபவாதம் தோற்றத்திற்கு வேறு பல காரணங்களும் இருக்கலாம். இருந்தாலும், தேவிபிரசாத் சட்டோபாத்யாயா சுபாவத்தை 'இயற்கையின் விதிகள்' என மொழிபெயர்த்ததை தவறு என நீதம் மறுத்ததைச் சரியென்றே கருதுகிறேன். இந்த விசயத்தை நான் என் கட்டுரையான 'சுபாவம் என்றால் என்ன: சட்டோபாத்யாயாவும் நீதமும்'* (What is Meant by Svabhava: Chattopadhyaya and Needham, Psyche and Society, Vo.10 No.2, December 2012, pp.18-20)*ல் விவாதித்திருக்கிறேன்.*

**இயற்கைக்கு மீறிய சக்திகள் பற்றிப் பேசாத மதத்தை தேடும் பொருள்முதல்வாதிகளுக்குப் பௌத்தம்**

**கவனத்திற்குரியதாக இருக்கிறது. ஆனால் சார்வாக/ உலகாயத மரபு அபூர்வமாகத்தான் குறிப்பிடப்படுகிறது. ஆயினும் பௌத்தம் இருமைவாதமாகவே கருதப்படுகிறது. சமகாலத்தவர்கள் மத்தியில் சார்வாக/ உலகாயத மரபு கண்களில் படாமல் மறைந்து போகவும் பௌத்தம் பிரபலமாகவும் என்ன காரணம் எனச் சுருக்கமாகச் சொல்லமுடியுமா?**

*கடவுள் அல்லது கடவுள்கள் இல்லை என்று சொன்னாலும், வேதத்தைப் போன்ற கடவுளால் வழிகாட்டப்பட்ட புனித நூல்கள் இல்லாவிட்டாலும், சாதி அமைப்பு இல்லாவிட்டாலும் இதுவரை மறு உலகத்தையோ மறுபிறப்பையோ பௌத்தம் மறுக்கவில்லை. இதற்கு மாறாக சார்வாக/ உலகாயதம் மத எதிர்ப்பிலும் மறுஉலகம், மறுபிறப்பு ஆகியவற்றை மறுப்பதிலும் சமரசத்திற்கு இடமற்றதாக இருக்கிறது. ஒருவர் சமரசத்திற்கு இடம் தராத பொருள்முதல்வாதியாக இல்லாதவரை அல்லது ஆகாதவரை, சார்வாக/உலகாயதம் அவருக்கு ஈர்க்க கூடிய ஒன்றாக இருக்காது.*

*இரண்டாவதாக, பௌத்தம் ஒவ்வொரு பிறப்பிலும் பெரும் துன்பங்களைக் கொண்டு வரும் பிறப்பு மறுபிறப்பு என்னும் சுழற்சியிலிருந்து விடுதலைபெறுவது, நிர்வாணம் அடைவது குறித்த நம்பிக்கைகளைத் தருகிறது. மாறாக மறுபுறத்தில், பொருள்முதல்வாதம் இறந்தவுடன் உணர்வும் இறந்துவிடுகிறது என்கிற அப்பட்டமான உண்மையைத் தவிர வேறு எந்த நம்பிக்கைகளையும் தருவதில்லை. அதனால் விடுதலை அல்லது மறுபிறப்பு குறித்த எந்தப் பிரச்சினையும் அதில் இல்லை. நித்தியமாக சொர்க்கத்தில் வாழலாம் என்கிற எந்த நம்பிக்கையும் அதில் இல்லை. பௌத்தம் இவ்விசயத்தில் இந்து மரபிற்கும் சார்வாக/உலகாயதத்திற்கும் நடுவில் பயணிக்கிறது.*

*ராகுல சாங்கிருதித்யாயன், தேவிபிரசாத் சட்டோபாத்யாயா போன்ற அறிஞர்கள் தொடர்ச்சியின் தொடர்ச்சியின்மை, வினை - விளைவு இணைவு ஆகிய கோட்பாடுகளைத் தோற்றுவித்ததில் பௌத்தத்தின் பங்கு, படீகா சமுபாதா (சமஸ்கிருதத்தில் ப்ரதிய சமுத்பாதா) காரணகாரிய கோட்பாட்டை முன்னறிவித்தது குறித்தும் வலியுறுத்தியுள்ளார்கள். நான் என்னுடைய கட்டுரையான, 'எங்கெல்ஸ், இயக்கவியல் மற்றும் பௌத்தம்'* (Engels, Dialectics and Buddhism, Frontier Weekly, Autumn No., Vol. 46, Nos. 13-16, October 6- November 2, 2013, pp. 35-38) *என்பதில் குறிப்பிட்டுள்ளபடி, நான்கு சிறந்த உண்மைகள் கருத்து, இயக்கவியலின் அடிப்படைகள் பலவற்றை உள்ளடக்கியுள்ளது. ஒருவர் பௌத்தராகவோ அல்லது பொருள்முதல்வாதியாகவோ இல்லாமலேயே, தத்துவத்திற்கு புத்தரின் பங்களிப்புகளை (அவர் தத்துவார்த்த விவாதங்களில் ஈடுபடும் விருப்பமுள்ளவராக இல்லாத பொழுதும்) பாராட்டமுடியும்.*

**உங்களுடைய நூல்கள் தவிர உங்களின் தத்துவ உலகம் குறித்து மேலும் அறிந்துகொள்ள வேறு ஐந்து நூல்களை நீங்கள் 3:AM வாசகர்களுக்காக பரிந்துரைக்க முடியுமா?**

*அனைத்து முடிவுகளுடனும் எனக்கு உடன்பாடு இல்லாவிட்டாலும், பின்வருவனவற்றை ஒருவர் கவனிப்பது லாபமுடையதாக இருக்கலாம் 1)தேவிபிரசாத் சட்டோபாத்யாயாவின் உலகாயதம் 2) தேவிபிரசாத் சட்டோபாத்யாயாவின் பண்டைய இந்தியாவில் பொருள்முதல்வாதத்தின் உள்ளாற்றல், 3) பிரதீப் கோகலேவின் உலகாயத/சார்வாகம், 4)டி.ஆர். சாஸ்திரியின் சார்வாகத் தத்துவத்தில் பொருள்முதல்வாதம், சிற்றின்பக் கொள்கை, இன்ப நாட்டக் கொள்கை* (Materialism, Sensualism and Hedonism in Cārvāka Philosophy). *எலி பிரான்கோவும் கரின் பீரிசன்டென்சும் ரூட்லெட்ஜ் தத்துவக் களஞ்சியத்திற்காகத் தொகுத்ததிலிருந்து 'இந்திய பொருள்முதல்வாதப் பள்ளிகள்...' மற்றும் 'உலகாயதம்' மற்றும் பிரில்லின் இந்துமத களஞ்சியம் ஆகியவை. இறுதியாக இதுவரை நூலாகத் தொகுக்கப்படாத கிருஷ்ணா டெல் டோசோவின் சமீபத்திய மூன்று கட்டுரைகள்:*

a) *'ஸ்கலிதபிரமதானயுக்திஹதுசித்தி' யில் சார்வாக/உலகாயத செய்யுள்கள்* ('The Stanzas on the Cārvāka/Lokāyata in the Skhalitapramathanayuktihetusiddhi', Journal of Indian Philosophy 38 (2010): 543-552).

b) *அறிதல் என்பது சுயத்தின் பகுதியா அல்லது உடலினுடையதா? நியாய மற்றும் வைசேசிகத்தின் நிலைப்பாடுகளுக்கு எதிரான உத்பாதபட்டரின் சில தருக்கச் சிந்திப்புகள்* (Is Cognition an Attribute of the Self or It Rather Belongs to the Body? Some Dialectical Considerations on Udbhatabhatta's Position against Nyāya and Vaiśesika), http://www.scirp.org/Journal/PaperInformation.aspx?PaperID=8726] Open Journal of Philosophy 1.2 (2011a): 48-56.

c) *'ஓநாய்களின் காலடித்தடங்கள்: இந்தியப் பொருள்முதல்வாத கண்ணோட்டம்: ராமகிருஷ்ண பட்டாச்சார்யாவுடன் மேற்கோள்களுடன் உரையாடல்'* (The Wolf's Footprints: Indian Materialism in Perspective: An Annotated Conversation with Ramkrishna Bhattacharya), Annali Istituto Orientale Napoli 71 (2011b): 183-204.

*ஜோகன்னஸ் ப்ரோன்கோஸ்டின் 'யார் சார்வாகர்கள்?'* Rev. Guillermode Ockham, 14(1), June 2016.

●

மக்களுக்காக சிந்திப்போம்

# மக்கள் சிந்தனைப் பேரவை

வழங்கும்

# ஈரோடு புத்தகத் திருவிழா - 2019

## ஆகஸ்ட் 2 முதல் 13 வரை

பண்பாட்டுப் புரட்சியில் 15 ஆம் ஆண்டு

இலங்கைத் தமிழறிஞர்

## பேராசிரியர் கலாநிதி கா.சிவத்தம்பி நினைவு

# உலகத்தமிழர் படைப்பரங்கம்

## நூல்களைத் திரட்ட உதவிடுவீர் !

அன்புடையீர், வணக்கம்.

இந்தியா நீங்கலாக உலகெங்குமுள்ள தமிழ் எழுத்தாளர்களின் படைப்புகளைத் தாய்த்தமிழகத்தில் உள்ளோருக்கு அறிமுகம் செய்யும் நோக்கிலும், அயலகத் தமிழர்களின் படைப்பாற்றல் மற்றும் பண்பாட்டு – கலாச்சார உணர்வுகளை இங்குள்ளோரும் புரிந்து அவர்களை நேசிக்கச் செய்யும் அடிப்படையிலும், தமிழ்கூறும் நல்லுலகில் உள்ள அனைத்துத் தமிழர்களுக்குமான ஓர் உறவுப்பாலமாக – மக்கள் சிந்தனைப் பேரவை தொடர்ந்து ஒவ்வோராண்டும் ஈரோடு புத்தகத் திருவிழாவில் ‘உலகத் தமிழர் படைப்பரங்கம்’ என்ற பெயரில் ஒரு சிறப்பு அரங்கத்தை சிரத்தையெடுத்து ஏற்பாடு செய்து வருகிறது.

ஆயிரக்கணக்கான தலைப்புகளைக் கொண்டு பல்லாயிரக்கணக்கான அயலகத் தமிழ்நூல்கள் இந்தச் சிறப்பு அரங்கத்தில் ஆண்டுதோறும் இடம் பெறுகின்றன. வேறு பலநாடுகளில் தமிழ்மொழியின் வளர்ச்சிக்காகவும், தமிழர்களின் மேன்மைக்காகவும் உழைத்த பெருமக்களின் திருவுருவப்படங்கள் அவர்களைப் பற்றியான குறிப்புகளுடன் இவ்வரங்கத்தில் மக்களின் பார்வைக்கு வைக்கப்படுகின்றன. வெளிநாட்டுத் தமிழறிஞர்களை வரவழைத்து பல சிறப்பு நிகழ்வுகளும் ஏற்பாடு செய்யப்படுகின்றன. புத்தகத் திருவிழாவில் பொதுமக்களால் மிகவும் கவனத்திற்குரிய அரங்காக ஒவ்வோராண்டும் இது திகழ்கின்றது.

இந்த ஆண்டு ‘இலங்கைத் தமிழறிஞர் பேராசிரியர் கலாநிதி கா.சிவத்தம்பி நினைவு உலகத்தமிழர் படைப்பரங்கம்’ என்ற பெயரில் இச்சிறப்பரங்கம் அமைக்கப்படவுள்ளது.

மாநிலந்தழுவிய அளவில் தேசியத்தரத்துடன் நடைபெறும் ஈரோடு புத்தகத் திருவிழாவில் இடம் பெறும் இந்தச் சிறப்பு அரங்கிற்கு நூல்களைத் திரட்டும் முயற்சியில் புத்தகப் பதிப்பாளர்கள், புத்தக ஆர்வலர்கள், வாசகர்கள் என அனைவரும் மனமுவந்து பங்கேற்று உதவுமாறு மக்கள் சிந்தனைப் பேரவை ஓர் அன்பான வேண்டுகோளை முன் வைக்கிறது.

- வெளிநாட்டில் வாழ்கிற தமிழர்களின் படைப்புகளை இவ்வரங்கத்தில் விற்பனைக்காக வைக்க அந்தந்த நாட்டிலுள்ள படைப்பாளிகள், செயல்பட்டு வருகிற தமிழ் அமைப்புகள் உதவிடலாம்.

- இறந்துபோன படைப்பாளிகளாக இருப்பினும் அவர்களது படைப்புகள் சிறந்தவையாக இருக்குமெனில் அவர்களது குடும்பத்தினரோ, தமிழ் அமைப்புகளோ, அவர்களது நண்பர்களோ அப்படைப்புகளைப் பேரவையிடம் சேர்க்கலாம்.

- வெளிநாட்டில் செயல்பட்டு வரும் பதிப்பகங்களும் இவ்வாறு தாங்கள் பதிப்பித்த வெளிநாடு வாழ் தமிழர்களின் சிறந்த படைப்புகளை அனுப்பலாம்.

- வெளிநாட்டில் வாழ்கிற தமிழர்களின் படைப்புகள் தாய் மண்ணில் உள்ள அவர்களது இல்லங்களிலோ அல்லது உறவினர்களிடமோ இருக்குமெனில் அவர்களிடம் இவ்விபரம் தெரிவித்து பேரவையைத் தொடர்பு கொள்ள வைக்கலாம்.

- வாழும் நாடு குறித்த விபரங்களடங்கிய ஆய்வு நூல்கள், அந்தந்த நாடுகளில் தமிழ்மொழி வளர்ச்சிக்காகவும் தமிழர்களின் உயர்வுக்காகவும் பாடுபட்டவர்களின் வாழ்க்கை வரலாற்று நூல்கள், அந்தந்த நாட்டின் இயல்பிற்கும் சூழ்நிலைக்கும் ஏற்ப உருவான படைப்புகளான கவிதை, கட்டுரை, சிறுகதை ஆகியவற்றின் தொகுப்புகள், நாவல்கள், காப்பியங்கள், இலக்கிய ஆய்வு நூல்கள், பயண அனுபவங்கள், அறிவியல் நூல்கள், திறனாய்வு நூல்கள், வெளியிடப்பட்ட சிறப்பு மலர்கள், அங்கு செயல்பட்டு வருகிற தமிழ் அமைப்புகளின் வெளியீடுகள் போன்ற இங்குள்ளோருக்குப் பயன்படும் நூல்கள் பெரிதும் வரவேற்கப்படுகின்றன.

- வெளிநாட்டில் வாழ்கிற தமிழர்களின் படைப்புகளை தமிழகத்திலுள்ள பதிப்பகங்கள் வெளியிட்டிருப்பின் அவை பற்றிய விபரங்களைப் பேரவைக்கு உடனடியாகத் தெரிவித்தால் அப்பதிப்பகங்களைப் பேரவையே அணுகி புத்தகங்களைப் பெறலாம். அல்லவெனில் அப்பதிப்பகத்தார் மூலமாகப் பேரவையின் தலைமையை படைப்பாளிகளே அணுகலாம்.

- ஒவ்வொரு படைப்பிலும் குறைந்தபட்சம் 10 பிரதிகள் அனுப்பினால் திருவிழா முடிந்தபிறகு விற்பனைத் தொகையில் கழிவுபோக மீதமுள்ள தொகையையும், விற்பனையாகாத நூல் பிரதிகளையும் உடனடியாக திருப்பிக் கொடுத்து விடுவோம் என்று உறுதி கூறுகிறோம்.

- தொலைபேசியில் – மின்னஞ்சலில் இவ்விபரங்களை உடனடியாகத் தெரிவிக்கலாம்.

**காலம் மிகக் குறைவாக இருப்பதால் உடனடியாகக் களமிறங்கி உதவி செய்வதன் மூலம் இத்திட்டத்தை மிகச் சிறப்பாக நிறைவேற்றிட உரியவர்கள் அனைவரும் மனமுவந்து ஒத்துழைப்பு நல்கிட பேரவையின் சார்பில் அன்புடன் வேண்டுகிறோம்.**

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

**T. STALIN GUNASEKARAN,**

President, Makkal Sinthanai Peravai


A-47, Sampath Nagar, Erode - 638 011.Landline : 0424 - 2269186

Website : www.makkalsinthanaiperavai.org
www.erodebookfestival.org
www.tstalingunasekaran.com

e-mail : info@makkalsinthanaiperavai.org
stalingunasekaran.t@gmail.com

facebook.com/makkalsinthanaiperavaierode
youtube.com/makkalsinthanaiperavaierode


# நியூ செஞ்சுரியின் புதிய வெளியீடுகள்





₹ 560/-





₹ 230/-




₹ 250/-





₹60/-




₹100/-




₹ 210/-





₹200/-




₹360/-





₹170/-




₹130/-




₹45/-





₹70/-

கட்டுரை

# கொஞ்சம் அனுபவம் கொஞ்சம் ஆராய்ச்சி

இரா.காமராசு



ஃபீனா டாட் காம் (faena.com) என்னும் இணையத்தளம் ஓர் இல்ல நூலகம் என்றால் குறைந்தது 80 நூல்கள் இருக்க வேண்டும் என்கிறது.

என் பத்தாவது வயதிலேயே - என் தந்தையாரின் நூல்கள் அல்லாமல் - எனக்கேயுரியவையாக 80க்குக் குறையாத நூல்கள் இருந்தன; பெரும்பாலும் சோவியத் சிறுவர் நூல்கள். தமிழில், நல்ல தாளில், பெரிய எழுத்துக்களில், வண்ணமயமாக 5 - 15 காசு விலையில் அவை கிடைத்தன. வாண்டு மாமாவின் தமிழ், லீ ஃபாக்கின் 'முகமூடி' தமிழ் மொழிபெயர்ப்புப் படக் கதைகள் (Comics) சிலவும் இருந்தன. இவை படிப்பார்வத்திற்குப் பாதை சமைத்தன.

அடுத்த கட்டமாகத் தமிழ்வாணனின், படமில்லாத சங்கர்லால் துப்பறியும் கதைகளும், புனைவில்லாத (non fiction) எழுத்துகளான கல்கண்டு இதழ்த் துணுக்குகளும் வாசிப்புச் சுவையின் வாயில் திறந்தன.

இதழ்களில், குறிப்பாக ஆனந்த விகடனில் வந்த சிறுகதைகள், தொடர்கதைகள் ஆகியவற்றுள் தேர்ந்தெடுத்துத் தனியே பிரித்தெடுத்து, தொகுத்து, என் தந்தையாரே தைத்து அட்டைபோட்டு வைத்திருந்த நூல்கள், அவர் வாங்கி வைத்திருந்த மு.வ.முதலியோரின் சில புனைகதை நூல்கள், வங்க, மராத்திய, உருசியப் புனைகதைகளின் மொழிபெயர்ப்புகள், குத்தூசி குருசாமியின் 'பலசரக்கு மூட்டை' போன்ற கட்டுரை நூல்கள் எனப் பலவும் வகைவகையான வாசிப்பில் பயணம் செய்ய வைத்தன.

இந்தப் பயணத்தின் முதல் திருப்பம் ஜெயகாந்தன். அவருடைய புனைகதைகளிலும் புனைவிலா எழுத்துக்களிலும் இழையோடும் தருக்க நடைநயத்திற்கு ஆட்பட்டேன். அடுத்தடுத்த திருப்பங்களை விரிப்பின் அகலும்.

எனது கவிதை வாசிப்பு ஒப்பீட்டளவில் பலவீனமானது. தமிழ் இளங்கலை பயின்ற காலத்தில் அ.வீரையா வாண்டையார் நினைவு ஸ்ரீபுஷ்பம் கல்லூரிப் பேராசிரியர்கள் அ.தட்சிணாமூர்த்தி, ந.மெய்ப்பொருள் முதலியோர் ஆய்வு நூல்கள் பலவற்றை அறிமுகப்படுத்தினர். ச.வையாபுரிப்பிள்ளை, க.கைலாசபதி ஆகிய இருவர்தம் ஆய்வு முறையும் ஆய்வு நடையும் என்னைக் கவர்ந்தன.

நாங்கள் படித்த நூல்களைப் பற்றி எங்களிடம் மாணவர் - ஆசிரியர் என்னும் நிலை கடந்து உரையாடும் பேரா.மெய்ப்பொருள் அவர்கள் நூல்களை வாங்கிப் படிக்கும் ஆர்வத்தைத் தூண்டினார்; நூல்கள் வாங்குவது பொருளாதார நிலையைப் பொருத்தல்ல என உணர்த்தினார்.

அடிக்கடி சென்னை சென்று வரும் பேரா. பா.மாசிலாமணி அவர்கள் கிடைக்கும் புதிய நூல்கள் பற்றிச் சொல்வார். அவர் மூலம் புத்தகங்கள் பலவற்றை வாங்கினோம். என்னுடைய வேகம் சற்றுக் கூடுதலானது. என் தந்தையார் மர அலமாரி செய்து கொடுத்தார்; என் வேகங்கண்டு தயங்கினார்.

பேரா.சண்முகவேல் அவர்கள் ஒரு முறை, "மதி! நீ கண்டதையும் படிக்கிறே. உனக்குன்னு ஒரு துறையைத் தேர்ந்தெடுத்து ஆழமாப் படி. அப்போதான் பேரெடுக்க முடியும்" என்றார்.

அவர் சொன்னது உண்மைதான். ஆனால், நான் வாசிப்புச் சுவை கருதியே படித்தேன்; என்னை ஈர்த்த நூல்களைப் படித்தேன். பாடநூல் படிப்பையும், ஆய்வுப் பட்டத்திற்கான படிப்பையும் வாசிப்பின் வகைக்குள் அடக்கவேண்டியதில்லை என்பது என் கருத்து. ஆனால், என் ஆய்வுக்கான தேடலின்போது நான் கண்டடைந்த வியத்தகு பெரியவர் அமரர் கோட்டையூர் ரோஜா முத்தையா செட்டியார் அவர்களை இந்தக் காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத்தில் நிற்கும் போது நினைவு கூராமல் இருக்க இயலாது.

புத்தகக் காதலர்களை அவர் இனங்காணும் திறனையும் அப்படிக் கண்டுவிட்டால் அவர்கள் பால் கொள்ளும் அன்புரிமையையும் அனுபவித்தோரே உணர்வர். நான் அனுபவித்தோருள் ஒருவன். நிற்க.

நான் பல இடங்களில் சொல்வதுண்டு. 'திருவாசகத்திற்கு உருகார் ஒரு வாசகத்திற்கும் உருகார்' என்கிறார்களே, அப்படி எல்லோரும் உருகுகிறார்களா?

**இராமலிங்க அடிகளார் பாடுகிறார்:**

**வான் கலந்த மாணிக்கவாசக நின்வாசகத்தை**
**நான் கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ்சாற்றினிலே**
**தேன்கலந்து பால்கலந்து செழுங்கனிதீஞ்சுவை கலந்து**
**ஊன் கலந்து உயிர் கலந்து உவட்டாமல் இனிப்பதுவே**

இதில் அடிக்கோடிட்டுப் படிக்க வேண்டியது "நான் கலந்து பாடுங்கால்" என்பது. ஒரு நூல் தானாக ஈர்க்காது. நாமும் கொஞ்சம் ஈடு கொடுக்க வேண்டும். வள்ளலாரின் திருவாசக வாசிப்பு உலகியல் கடந்தது. உலகியல் சார்ந்த வாசிப்பு அனுபவமே அற்புதமானது; நமக்குப் போதுமானது. அந்த வாசிப்பிலேயே உவட்டாமல் இனிக்கும் அனுபவம் பெறலாம். சரி. கொஞ்சம் ஆராய்ச்சி!

கண்டு களிக்கும் ஓவியம், சிற்பம் முதலியவை உலகளாவியவை; தொன்று தொட்டுத் தொடர்பவை. பாவைக் கூத்து, நாட்டியம், நாடகம் முதலியனவும் தொன்று தொட்டு வருவன. நிழற்பாவைக் கூத்தின் தொழில்நுட்ப வளர்ச்சிக் காலச் சாத்தியமாகச் சலனப் படம் வந்தது.

ஒலி, ஒளி, வண்ணம், தொலைவு, அண்மை, கோணங்கள், வேக ஏற்ற இறக்கம் எனச் சலனப் படம், பாய்ச்சல் வேகத்தில் திரைப்படம் என்னும் தனிக்கலையாக, கேளிக்கையாக வந்து சேர்ந்தது. ஆனால், திரைப்படத்தைப் போய்ப் பார்க்க வேண்டும். தொலைக்காட்சி வீட்டிற்குள் வந்துவிட்டது. திறன் பேசி செல்லுமிடமெல்லாம் உடன் வரும் கையடக்கக் குட்டித் திரையாகிவிட்டது.

சென்ற வாரம் தேஜஸ் தொடர்வண்டியில் பயணம். அதிலுள்ள குறுந்திரை இயங்கவில்லை. எனக்குப் பக்கத்தில் அமர்ந்திருந்த மூத்த வழக்கறிஞர் திறன் பேசியை எடுத்துச் செவியொலி கருவியைப் பொருத்திக் கொண்டு கையடக்கத் திரையில் இலயித்து விட்டார். காப்பி வந்தபோதுதான் என் பக்கம் திரும்பினார். பொன்னியின் செல்வன் கதை கேட்கிறாராம். எனக்கும் பரிந்துரைந்தார். காலத்தின் கோலம்.

புத்தகம் காலாவதியாவது இயற்கைதானே, ஓலைச்சுவடி போய் அச்சுப் புத்தகம் வரவில்லை? இனிப் புத்தகம் தேவையில்லைதானே! அறிவுத் துறை நூல்கள், ஆவணங்களுக்கு வேண்டுமானால் ஓரளவு அச்சு நூல் தேவை என்று சொல்லலாமா?

**வாசிப்பு** (Reading)

**வெளியீடு** (Publishing)

**காப்புரிமை** (Copy right)

இவற்றை ஊக்குவிப்பது யுனெஸ்கோவின் நோக்கம்.

பதிப்புரிமை பற்றிய ஒரு நூலை மட்டும் இங்கு அறிமுகப்படுத்த ஆசைப்படுகிறேன். அது, ஆ.இரா.வேங்கடாசலபதி எழுதிய 'பாரதி: கவிஞனும் காப்புரிமையும் - பாரதி படைப்புகள் நாட்டுடைமையான வரலாறு'. இதை அவர் ஆங்கிலத்திலும் எழுதியுள்ளார்.

என் மகன் தமிழ் படிக்கத் தெரிந்தவன்தான். இதன் ஆங்கில வடிவத்தில் பின்னணித் தகவல்கள் சில கூடுதலாக இருப்பதால் ஆங்கிலத்தில் படிக்க வசதியாயிருக்கிறது என்று வாங்கி விட்டான். இக்காலத்தில் தமிழ் படிக்கிறவர்களின் எண்ணிக்கையும் குன்றி வருகிறது. எனக்குத்

தமிழும் அவனுக்கு ஆங்கிலமுமாக வேறு சில நூல்களையும் வாங்க நேர்ந்துவிட்டது; நேரும்.

"அறம் பொருளின்பம் வீடடைதல் நூற்பயனே" என்பார்கள். ஒரு மொழி நூல்களின் பெருக்கம் கடந்து, இரு மொழி நூல்களால் எங்கள் வீடு அடைகிறது.

சலபதியின் நூல் ஆய்வு நூல். அதனைச் சுருங்கச் சொல்லிக் கருத்தை விளக்கிவிடலாம். ஆனால், படித்தால்தான் மொழி வளமும் நடை நயமும் தருக்க ரீதியான ஓட்டமும் தரும் சுவையை நுகர முடியும். அவர் வரலாற்றுப் பேரறிஞர். நான் தமிழாசிரியன். அவரது தமிழ் நடை என் பொறாமையைத் தூண்டும்.

உலகப் புத்தக நாள் 2019 இன் அடிக் கருத்து -Theme - Share a story

story வெறும் கதை மட்டுமல்ல; அறிவுத் துறை நூல்கள் உட்படச் சுவையாகப் படிக்கத்தக்க அனைத்தும்தான்.

யுனெஸ்கோ ஏன் 'காலாவதி'யாகிப் போன வாசிப்பை ஊக்குவிக்க முயல்கிறது?

என் நூலகச் சுயபுராணத்தைத் தொடர்கிறேன்.

புத்தகப் பித்தனாகிய என் இல்ல நூலகத்தில் இப்போது 12 ஆயிரத்துக்குக் குறையாத நூல்கள் சேர்ந்து விட்டன. தேவையான, ஆர்வமுள்ள நூல்களை இயன்றவரை வாங்கி விடுவேன். எனவேதான் பல்கலைக்கழகப் பொதுநூலகம் செல்லும் தேவை பெரிதாக ஏற்படவில்லை.

இன்னொன்று, வாங்கும் நூல்களையெல்லாம் உடனடியாக வரி விடாமல் படிக்க முடியாது; தேவையுமில்லை. முன்னுரை முதலியவற்றால் அறிமுகப்படுத்திக் கொண்டு தேவைக்கேற்பப் படிக்கலாம் என்பது என் கருத்து; அனுபவம்.

இப்போது இட நெருக்கடி, பராமரிப்பதில் உள்ள சிரமம் முதலியவற்றால் வாங்கும் எண்ணிக்கை குறைந்திருக்கிறது; படிப்பும்தான். முற்றாக நின்று போகவில்லை. எனது விரலி ((Pendrive) ஒரு நடமாடும் நூலகம். ஏறத்தாழ 1000 நூல்கள் உள்ளன. செல்பேசித் திரையிலேயே ஓரளவு பார்த்துவிடலாம்.

கிண்டில் போன்ற மின்னணுக் கருவிகள் வரவேற்கத்தக்கவைதாம். அச்சு நூல் போல் அதில் படிக்க முடியவில்லை என்றாலும் புதிய தலைமுறையினர் அதை இயல்பாகக் கையாள்கிறார்கள். இவை வாசிப்புக்கு உதவும் நவீன வடிவங்கள்.

வாசிப்பின் முதல் நிலையாகிய, எழுத்து - வரிவடிவம் (Script) - மனித குலம் ஆயிரக்கணக்கான ஆண்டுகள் கருத்தாலும் கரத்தாலும் உழைத்து இழைத்த அரும்பொருள். தமிழ்ச் சமூகம் எழுத்தைக் கொண்டாடிய தொல் சமூகங்களில் ஒன்று .

ஏறத்தாழப் பொ.கா.மு. (பொதுக் காலத்திற்கு முன், BCE)) 5 - ஆம் நூற்றாண்டிலிருந்தே தமிழ்ப் பிராமி எனப்படும் தமிழி எழுத்துப் பொறிப்புகளைக் காணமுடிகிறது. பண்ணவாந சுத்த என்னும் சமண நூல், பொ.கா.மு. முதல் நூற்றாண்டிலேயே தமிளி எனத் தமிழி வரிவடிவத்தைச் சுட்டியது.

தமிழகத்தின் வணிகம் சாராத, அரசு சாராத பகுதிகளில் மட்பாண்ட எழுத்துக் கீறல்கள் கிடைப்பதையும் அவை சுட்ட பின் கீறப்பட்டவை என்பதையும் கொண்டு தமிழக எழுத்தறிவுப் பரவலை உய்த்துணர்ந்தார் தொல் எழுத்தியலறிஞர் ஐராவதம் மகாதேவன்.

சமற்கிருத, பிராகிருத மொழிகளில் இல்லாத தமிழுக்கேயுரிய வரி வடிவங்கள் தமிழியில் உள்ளன. அசோகர் பிராமியில் கூட்டெழுத்து உண்டு. அதே காலத் தமிழிக் கல்வெட்டுகளில் கூட்டெழுத்து இல்லை. இது தமிழ் இயல்பு.

வேட்கோவர் - வேளார் - எனப்பட்ட குயவர் மரபினரின் மேன்மையான அந்தஸ்தையும் எழுத்தறிவையும் பற்றிப் பானைப் பாதை (Pot route) பற்றிய தம் ஆய்வில் பாலகிருஷ்ணன் ஐ.ஏ.எஸ். விளக்கியுள்ளார்.

வெளியிடப்பெற்ற தென்னகக் கல்வெட்டுகளில் மொழிவாரி எண்ணிக்கை:

**தமிழ்** 28,600

**கன்னடம்** 11,000

**தெலுங்கு** 5,000

தமிழ் இலக்கிய வரலாறு ஏறத்தாழப் பொ. கா.மு. 2-ஆம் நூற்றாண்டில் தொடங்குகிறது. சங்க இலக்கியத்திலுள்ள பெயர்கள் பல அக்காலக் கல்வெட்டுப் பெயர்களோடு ஒத்துப் போவதும் பழந்தமிழ் இலக்கியக் காலக் கணிப்புக்கு இணங்குகின்றன.

தொல்காப்பியம் இலக்கணத்தை நூல் என்கிறது. தொல்காப்பியத்தின் முதல் இயலுக்கு நூல் மரபு

(நூன்மரபு) என்று தலைப்பிடப்பட்டுள்ளது. நூன் மரபில் தமிழ் எழுத்து எண்ணிக்கை, பெயர்கள், வைப்பு முறை, வரிவடிவம் முதலியன கூறப்பட்டுள்ளன.

Grammar என்பதற்குரிய சொற்பிறப்பு வேரைப் (etymology) பார்த்தபோது, gramma / grammat (Greek - letter of the alphabet, thing written gramma / grammat (Greek - letter of the alphabet, thing written

grammatike tekhne (Greek) - art of letters - எனக் கிரேக்கத்தில் எழுத்து என்னும் பொருள் குறித்த சொல் காட்டப்பட்டுள்ளதைக் கண்டேன்.

தமிழிலும் நூல் என்பது எழுத்தைக் குறித்து, பின்பு இலக்கணத்தைக் குறித்து, இப்போது எல்லாப் புத்தகங்களையும் குறிக்கிறது என்று உய்த்துணர்கிறேன். எனவேதான் எழுத்து மரபைக் கூறும் இயலுக்கு நூன்மரபு எனத் தலைப்பிடப்பட்டுள்ளது. அறிஞர் வேங்கடராசுலு ரெட்டியார் இதனை முன்பே ஊகித்து எழுதியுள்ளார். ஒப்பியல் அதனைப் பேரளவு உறுதி செய்கிறது. எல்லாமே எழுத்தில்தான் தொடங்குகின்றன.

**"எழுத்தறிவித்தவன் இறைவன்"**

**"எழுத்தறியத் தீரும் இழி தகைமை"**

**"ஆரணங்க காணென்பர்"**

என்று தொடங்கிச் சிற்றம்பலக் கோவையைப் பாராட்டும் பாட்டின் "எழுத்தென்ப இன் புலவோர்" என்னும் தொடர்களில் வரும் 'எழுத்து' என்பதற்கு இலக்கணம் எனப்பொருள் கொள்வது மரபு. வரிவடிவத்தைக் குறிப்பதாகவும் இலக்கியத்தைக் குறிப்பதாகவும் கொள்ளலாம். இவை ஒன்றொடொன்று தொடர்புடையவை.

சி.சு.செல்லப்பா தம் இதழுக்கு 'எழுத்து' என்று பெயரிட்டதே நவீனத்தன்மையின் அடையாளம் என்பார்கள்; றுசவைவீபே என்பதன் தமிழ் வடிவம் என்பார்கள். இருக்கலாம். எழுத்து என்பது இலக்கண (இப்போது இலக்கியக் கொள்கை / கோட்பாடு என்கிறோம்), இலக்கியங்களைக் குறிப்பது தமிழ் மரபுமாகும். எழுத்துக்குப் பொருளில்லை. சொல்லுக்கும் கூட பொருள் இல்லை என்றுதான் சொல்லவேண்டும்.

"எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே" என்கிறது தொல்காப்பியம். "பொருள் உடையனவே" என்று சொல்லவில்லை. சொல்பொருளைக் கொண்டிருப்பதில்லை; பொருளைக் குறிக்கும். (தெய்வச் சிலையார் உரை காண்க)

**சுவை**

**நயம்**

**ஆழம்**

**நுட்பம்**

**ஊன் கலப்பது**

**உயிர் கலப்பது**

உவட்டாமல் இனிப்பது - இவையெல்லாம் ஒருபுறம் இருக்கட்டும்.

பொருள் குறியாத எழுத்துகள்

தமக்கெனப்பொருள்கொண்டிராத சொற்கள் இவற்றினூடாகப் பருப்பொருள் களையும் நுண்பொருள்களையும் உணர முடிகறிதே! பொருளின்மையிலிருந்து பொருள்!

புத்தக வாசிப்பை ஒரு கலை -

Art of reading - என்கிறது யுனெஸ்கோ அறிக்கை.

எவை எவையெல்லாம் தெய்வம் என்று அடுக்குகிற பாரதி நிறைவாக, "எழுதுகோல் தெய்வமிந்த எழுத்தும் தெய்வம்" என்று எழுத்தைத் தெய்வ நிலைக்கு உயர்த்திவிடுகிறார்.

எழுத்து ஓர் அதிசயம்,

எழுத்துக்களால் ஆன சொல் ஓர் அதிசயம்,

இவற்றாலான புத்தகம் ஓர் அதிசயம்.

வாசிப்பு ஓர் அற்புத மாயாசாலம் என்பதற்கு

நானே சான்று.

நான் மட்டுமா?

இந்த மாயாசாலத்தில் மயங்கித் திளைத்தோர் பலரும் சான்று.

தன்னுள் ஆழும் ஒருவரின், படைப்புணர்வைக் கோருகிற, படைப்புணர்வைத் தூண்டுகிற, படைப்புணர்வைத் துலங்கச் செய்கிற, வாசிப்புக்கு இணையான வேறொன்று இல்லவே இல்லை.

*(22-5-19 அன்று அழகப்பா பல்கலைக்கழகத்தில் நிகழ்ந்த உலகப் புத்தக விழாவில் ஆற்றிய உரையின் எழுத்து வடிவம்)*



கட்டுரை

# தமிழ்க் குழந்தை இலக்கியத்தில் நாட்டுப்புற இலக்கியத்தின் தாக்கம்

**சுகுமாரன்**

'ஒரு ஊர்ல...' என்றோ 'முன்னொரு காலத்தில்...' என்றோ இன்றும் நாம் கதை சொல்லிக் கொண்டிருப்பது நாட்டுப்புற இலக்கியத்தின் தாக்கத்தில்தான். இன்றும் நாம் எழுதும் கதைகளில், பாடல்களில் குழந்தைகளை குருவிகளோடு பறக்க வைக்கிறோம். வண்ணத்துப் பூச்சிகளோடு பேச வைக்கிறோம். சிங்கம்தான் காட்டுக்கு ராஜாவாக இருக்கிறது. யானைகளுக்கு சிறகுகள் முளைத்து வானத்தில் பறக்கின்றன. நரி இன்னமும் தந்திரம் செய்கிறது. பூனைக்கும் எலிக்கும் பகைமை தீரவில்லை. நாய்தான் காவலுக்குக் கெட்டிக்காரன். பூதங்களுக்கு பசி தீரவில்லை. கடலுக்கடியில் நாகக் கன்னிகை இருக்கிறாள். சுண்டைக்காய் இளவரசன் ஆகிறது. தமிழ்க் குழந்தை இலக்கியத்தின் எண்ணத்திலும் வண்ணத்திலும் நாட்டுப்புற இலக்கியம் மாயாஜாலம் செய்து கொண்டிருக்கிறது. மாயாஜாலத்தோடு சேர்ந்து ஓர் அறத்தையும் கற்பிக்கிறது. விறகுவெட்டியும் தேவதையும் கதையின் அறம் உண்மை அல்லவா?

வாய்மொழியாக (oral) சொல்லப்பட்டு வந்தவையே நாட்டுப்புற இலக்கியமாகும் (folk literature). நாட்டுப்புற இலக்கியம் தலைமுறை தலைமுறையாக சொல்லப்பட்டு, கடத்தப்பட்டு, காக்கப்பட்டது.

தொன்மக் கதைகள் (myths), பழங்கால புனைவுக் கதைகள் (legends), இதிகாசங்கள் (epics), நீதிக் கதைகள் (fables), நாடோடிக் கதைகள் (folk tales), நாட்டுப்புற பாடல்கள் (folk songs), பழமொழி, சொலவடைகள் (proverbs), விடுகதைகளும் (riddles) நாட்டுப்புற இலக்கியத்தில் அடங்கும்.

'நாடோடிப் பாடலுக்கு தாய் தந்தை யாரோ' என்பது ஒரு திரைப்பாடலின் வரியாகும். நாட்டுப்புற இலக்கியத்திற்கு முகந்தெரியாத மனித சமூகமே படைப்பாளியாக இருக்கிறது. நாட்டுப்புற இலக்கியம் ஒரு கூட்டுப் படைப்பு. அப்படைப்புகளில் சமூகத்தின் பண்பாடு. நீதி நியாயங்கள் இடம் பெறுகின்றன. இவை சமூகத்தின் நனவிலி மனதில் பதிந்து கிடக்கின்றன.

ஒவ்வொரு சமூகமும் வளமான நாட்டுப்புற இலக்கியத்தைக் கொண்டுள்ளது. பக்தி, பற்று, பணிவு, பரிவு, துணிவு, பயம், பாசம், நேசம், நன்மை, தீமை போன்ற எல்லா பண்புகளையும் (values) நாட்டுப்புற இலக்கியம் அடிப்படையாகக் கொண்டிருக்கிறது.

நாட்டுப்புற இலக்கியம் குழந்தை இலக்கியத்தின் வேர். நாட்டுப்புற இலக்கியத்தின் தாக்கம் தமிழ்க் குழந்தை இலக்கியத்தில் பெரும்பான்மையாகக் காணப்படுகிறது.

தமிழ் நாட்டுப்புற இலக்கியத்தின் மீது வெளிச்சம் பாய்ச்சியவர்கள் ஆராய்ச்சி அறிஞர் நா.வானமாமலை, எழுத்தாளர்கள் கி.ராஜநாராயணன், வீர.வேலுச்சாமி, கழனியூரன், ச.மாடசாமி ஆகியோராவர். அவர்களைப் பின்பற்றி பொன்னீலன், பாரததேவி, ரோஸ்லெட் டானிபாய் ஆகியோர் நாட்டுப்புற கதைகளை சேகரித்துத் தந்துள்ளனர்.

நாட்டுப்புற கதைகளில் நாயகன் X நாயகி X வில்லன் என்று ஒரே மாதிரியான (stereo typical) பாத்திர வார்ப்பே காணப்படுகிறது. நாயகன் X நாயகிக்கு வரும் சிக்கல் இயற்கைக்கு மாறான அதீத சக்தியின் உதவியால் (aided by super natural forces) தீர்க்கப்படுவதாக அமைகிறது.

நாட்டுப்புற கதைகளில் ஒரே மாதிரியான சம்பவங்கள் திரும்ப திரும்ப (Repetitions patterns) வருகின்றன. முடிவு பெரும்பாலும் மகிழ்ச்சிகரமாகவே அமைகிறது.

குழந்தை எழுத்தாளர் உதய சங்கரின் 'மாயக் கண்ணாடி', 'அண்டா மழை' ஆகிய இருகதைத் தொகுப்புகளில் உள்ள கதைகளில் நாட்டுப்புற கதைப் பண்புகளின் தாக்கம் மேலோங்கி காணப்படுகிறது.

திரும்பத் திரும்ப கூறுதல் என்பது நாட்டுப்புற கதைகளின் பண்பாகும். 'மாயக்கண்ணாடி' தொகுப்பிலுள்ள II கதைகளிலும் ஒரே மாதிரி குணாம்சம் கொண்ட ராஜாவே பாத்திரமாக வருகிறார். நாட்டுப்புற கதைகளில் வரும் சிக்கல் இயற்கைக்கு மாறான அதீத சக்தியின் உதவியால் தீர்க்கப்படுவதாக அமையும். மாயக் கண்ணாடி கதையில் வரும் சிக்கல் இவ்வாறே தீர்க்கப்படுகிறது.

கிள்ளியூர் தேசத்து ராஜா சோம்பேறி, சாப்பாட்டு ராமன். எப்போதும் சாப்பிட்டு பூதம் மாதிரி ஆகி விடுகிறார். கண்ணாடியில் தன் உருவத்தைப் பார்த்த அவர் பயந்து விடுகிறார். நாட்டில் யாரும் கண்ணாடி பயன்படுத்தக் கூடாது என்று உத்தரவு போடுகிறார். இதனால் மக்கள் சிக்கலுக்கு உள்ளாகிறார்கள். இச்சிக்கல் நாட்டுப்புற கதைகளில் வருவதுபோல் தேவதையின் உதவியால் தீர்க்கப்படுகிறது.

'பிரம்படி வைத்தியம்' கதையில் வரும் சிக்கலும் தேவதைகளால் தான் தீர்க்கப்படுகிறது.

'அண்டா மழை' கதையிலும் மழை பொய்த்துப் போன சிக்கலை மழை தேவதைதான் தீர்த்து வைக்கிறாள்.

'பஞ்சுமிட்டாய்' கதையிலும் இடி ராஜாவால் மக்களுக்கு ஏற்பட்ட பிரச்சனைகள் தேவதைகளால் தான் தீர்த்து வைக்கப்படுகிறது.

'மண்ணாக மாறிய பொன்' கதையில் குபேர தேவதையும் 'திருட்டு விளையாட்டு' கதையில் உழைப்பு தேவதையும் 'இலவசம், இலவசம், இலவசம்' கதையில் அறிவு தேவதையும் கதையில் எழும் சிக்கல்களைத் தீர்க்கிறார்கள்.

உதயசங்கரின் 'பேசும் தாடி' சிறுவர் நாவலிலும் சிறுகதைகளிலும் நாட்டுப்புற இலக்கியத்தின் தாக்கம் காணப்படுகிறது.

நாட்டுப்புற கதைகளில் சிக்கல்களை விலங்குகளோ அல்லது பறவைகளோ தீர்த்து வைப்பதாக வரும். வை.கோவிந்தன் எழுதிய 'சின்னத்தம்பியும் புலியும்' கதையில் ஒரு முயல் சிக்கலை தீர்த்து வைக்கிறது. ஒரு புலி கூண்டுக்குள் மாட்டிக் கொள்கிறது. சின்னத்தம்பி இரக்கப்பட்டு புலியை விடுவிக்கிறான். புலி நன்றி மறந்து சின்னத் தம்பியை கொன்று தின்ன முயற்சிக்கிறது. சின்னத்தம்பிக்கு ஏற்பட்ட சிக்கலை முயல்தான் சமயோசிதமாகத் தீர்த்து வைக்கிறது.

நாட்டுப்புற கதைகள் மக்களின் நம்பிக்கைகளை கதைப்பொருளாகப் பேசுகின்றன. கொடும்பாவி கட்டினால் மழை பெய்யும் என்பது அதிலொரு நம்பிக்கை. மயில் தோகை விரித்து ஆடினால் மழைபெய்யும் என்ற நம்பிக்கையை அடிப்படையாக

வைத்து ஒரு நாட்டுப்புற கதை இருக்கிறது. அதைப்போல் விஷ்ணுபுரம் சரவணன் கொடும்பாவி கட்டினால் மழை பெய்யும் என்ற நம்பிக்கையை வைத்து 'வானத்துடன் டூ' கதையை எழுதி உள்ளார்.

சிறுமி துர்காவின் ஊரில் மழையே பெய்யவில்லை. தண்ணீர் கஷ்டம். சிநேகிதியின் ஆலோசனைப்படி துர்கா கொடும்பாவி கட்டுகிறாள். கொடும்பாவி கட்டி 10 நாட்களாகியும் மழை பெய்யவில்லை. 11 ஆம் நாள் மழை பெய்யவில்லையென்றால் வானத்துடன் டூ விடப்போவதாக துர்கா சொல்கிறாள். அன்றிரவே மழை பெய்து விடுகிறது.

நாட்டுப்புற கதைகளில் முடிவு எப்போதும் சுபமாக அமையும். விஷ்ணுபுரம் சரவணன் எழுதிய 'மான் தப்பிப்பது எப்படி?' கதையிலும் புலியிடமிருந்தும் மலைப்பாம்பிடமிருந்தும் மான் தப்பித்து விடுகிறது.

விழியன் எழுதிய 'கிச்சா பச்சா' கதையில் காகங்கள் ஏன் கருப்பாச்சு? என்பதை பர்மா நாட்டு நாடோடிக் கதையின் மூலமே விளக்கியிருக்கிறார். விழியன் எழுதிய பல படைப்புகளில் நாட்டுப்புற இலக்கியத்தின் தாக்கத்தைக் காணமுடியும்.

சிறுவர்களிடம் மிகவும் பிரபலமான கதை 'சுண்டைக்காயின் சாகசம்.' 'சுண்டைக்காய் இளவரசன்' என்ற சிறுவர் நாவலில் யெஸ். பாலபாரதி நாட்டுப்புற கதைகளின் பாணியில் மூன்று கதைகளைக் கூறியிருக்கிறார். சாபம், சாப விமோசனம், சாகசப் பயணம், இறுதியில் வெற்றி என்பவை நாட்டுப்புற கதைகளின் போக்காகும். அதை சிறப்பாகக் கையாண்டு குழந்தைகளுக்குப் பிடித்த ஒரு கற்பனை உலகத்தை யெஸ்.பாலபாரதி தந்திருக்கிறார்.

குழந்தை எழுத்தாளர்கள் பலரும் நாட்டுப்புற கதைகளை மீளவும் எழுதியிருக்கிறார்கள். நெ.சி.தெய்வசிகாமணி 'இரண்டு கிளிகள்' கதையை அவ்வாறு எழுதியிருக்கிறார்.

'டால்ஸ்டாயின் குட்டிக் கதைகள்' கூட நாட்டுப்புற கதைகளை மறுபடியும் கூறியதுதான்.

குழந்தைகளுக்கு மிகவும் பிடித்தமானவை நாட்டுப்புற கதைகளே. அதனால் குழந்தை எழுத்தாளர்கள் பலரும் நாட்டுப்புற பாணியிலான கதைகளை எழுதி வெளியிட்டுள்ளனர். அயல்நாட்டு நாடோடிக் கதைகளை மொழிபெயர்த்தும் தந்துள்ளனர்.

நாட்டுப்புற பாணியிலான கதைகளை எழுதுவதில் பெ.தூரன், வாண்டு மாமா, வை.கோவிந்தன், முல்லை தங்கராசன் ஆகியோர் வல்லவர்கள். பெ.தூரனின் நிலாப்பாட்டி, நாட்டிய ராணி, ஓலைக் கிளி ஆகியனவும் வாண்டுமாமாவின் தங்கத் தீவு, மந்திரக்குளம், சந்திரகிரி கோட்டை, முல்லை தங்கராசனின் தங்க மயில் தேவதை, அதிசய குதிரை ஆகிய கதைகள் நாட்டுப்புற கதைகளின் தாக்கத்தில் எழுதப்பட்டவையாகும். நாகை தருமனின் 'மாயாபுரி மன்னன் ராஜியின் தங்க மாம்பழம், பூவண்ணனின் எரிமலை அரக்கன், ஆலந்தூர் கோ.மோகனரங்கனின் சந்திர மண்டலத்தில் மந்திரவாதி, சந்தனுவின் வேதாள உலகில் விச்சு என்று பெரிய பட்டியலே உள்ளது. இவையெல்லாம் முன்னொரு காலத்தில்...

முதலில் குழந்தைகளுக்கு நாட்டுப்புற பாடல்களோடுதான் பரிச்சயம் ஏற்படுகிறது.

**'காக்கா, காக்கா கண்ணுக்கு மை கொண்டு வா**

**'கைவீசம்மா கைவீசு',**

**'சாய்ந்தாடம்மா சாய்ந்தாடு',**

**'நிலா, நிலா, ஓடி வா',**

**'பச்சைக் கிளியே வா, வா',**

**'ஆனை ஆனை அழகர் ஆனை',**

போன்ற நாடோடிப் பாடல்கள் குழந்தைகளை மகிழ்வூட்டுகின்றன.

'மழலையர் மணிப்பாடல்கள்' என்ற நூலில் கவிஞர் வெற்றிச் செழியன் நாட்டுப்புற பாடல்களின் தாக்கத்தில் சில பாடல்களை எழுதியிருக்கிறார்.

'கைவீசம்மா கை வீசு' என்ற பாடல் தாக்கத்தில்,

**'கைவீசம்மா கை வீசு**
**கூடி மகிழ்ந்து கை வீசு**
**குதித்து ஆடிக் கை வீசு'**

என்றும்

**'தம்பி, தம்பி!**
**எங்கே போற? சந்தைக்கு**
**சந்தைக்கு எதற்கு? வாளி வாங்க.**
**வாளி எதற்கு? தண்ணீர் எடுக்க.'**

என்ற பாடலிலும் நாட்டுப்புற பாடலின் தாக்கத்தைக் காணமுடிகிறது.

'தாத்தா' பற்றிய வேடிக்கையான மகிழ்வூட்டும் நாட்டுப்புற பாடல் இது.

**'தாடி நீண்ட தாத்தா**
**தடவி ஒரு நாள் பார்த்தார்.**
**மாடப்புறா ரெண்டு**

மைனாப் பறவை ரெண்டு
காடக்குருவி ரெண்டு
நரிக்குருவி ரெண்டு
தாடிக்குள்ளே தங்கி
முட்டெ யிட்டன ரெண்டு.'

இப்பாடலின் தாக்கத்தில் தம்பி சீனிவாசன் எழுதிய பாடல் அதே வேடிக்கை உணர்வை குழந்தைகளுக்குத் தருகிறது.

'காட்டுப் பாக்கம் தாத்தாவுக்குக்
காடு போல தாடியாம்
காடு போல தாடியாம்
மாடி மேலே நிற்கும் போது
தாடி ரோடில் புரளுமாம்.
ஆந்தை இரண்டு, கோழி, மைனா
அண்டங் காக்கை, குருவிகள்
பாந்தமாகத் தாடியுள்ளே
பதுங்கிக் கொண்டிருந்தன.
உச்சி மீது நின்ற தாத்தா
உடல் குலுங்கத் தும்மினார்
அச்சு அச்சு என்றபோது
அவை அனைத்தும் பறந்தன.'

சுகுமாரன் எழுதிய 'தங்கச்சிப் பாப்பா' சிறுவர் பாடல் நூலில் நாட்டுப்புற பாடல்களின் தாக்கத்தில் 'காக்காவுக்குக் கல்யாணம்', 'பிரியாணி', 'எண்கள்' ஆகிய பாடல்கள் அமைந்துள்ளன. 'ஆமையும் முயலும்' என்கிற நாட்டுப்புற கதை கதைப்பாடலாக மாறியுள்ளது.

கிருங்கை சேதுபதியின் 'சிறகு முளைத்த யானை' குழந்தைப் பாடல் நாட்டுப்புற பாடலின் தாக்கம் கொண்டதே.

குழந்தைக் கவிஞர்கள் பலரும் நாட்டுப்புற கதைகளை கதைப் பாடலாக எழுதியுள்ளனர். அதில் முக்கியமானவர் தண்டரை முகில் வண்ணன் ஆவார். அவர் சோவியத் நாட்டுப்புற கதைகளை கதைப் பாடல்களாக தந்துள்ளார்.

'சங்கு சக்கர சாமி வந்து
சிங்கு சிங் குன்னு ஆடுமாம்'

என்கிற நாட்டுப்புற பாடலை அழ.வள்ளியப்பா இப்படி பாடுகிறார்.

'சங்கு சக்கரச்சாமியாம்
சாய்ந்து படுத்து கிடக்குமாம்.'

குழந்தையைத் தாலாட்டும் பாடல்கள் நாட்டுப்புற பாடல்களாக இருக்கின்றன. அத்தாக்கத்தில் அழ.வள்ளியப்பாவும் தாலாட்டுப் பாடல்களை எழுதியிருக்கிறார்.



'ஆராரோ, ஆராரோ
ஆரிரரோ ஆராரோ
சூடாமணியே
துலக்கமாய் நின்றொளிரும்
வாடா மலரே, என்
மரகதமே கண் வளராய்.'

'கை வீசம்மா கை வீசு' நாட்டுப்புற பாடலை புரட்சிக் கவிஞர் பாரதிதாசனும் இப்படி எழுதியிருக்கிறார்.

'கை வீசம்மா கை வீசு!
கடலை வாங்கலாம் கை வீசு!
நெய் உருண்டை கை வீசு!
நிறைய வாங்கலாம் கை வீசு!
.............................

'தட்டாங்கி' என்ற பாடல் புரட்சிக் கவிஞர் எழுதியது. நாட்டுப்புற பாடலின் தாக்கத்தால் விளைந்தது தான்.

'தட்டாங்கி தட்டாங்கி
தலை மேலே தாழம்பூ!
பட்டாலே சட்டை
பஞ்சாலே சல்லடம்
செட்டாக அணிந்து
சீராக முந்தி
தட்டு நீ தட்டு
தட்டாங்கி தட்டாங்கி'

'எலி படும் பாடு' என்ற தலைப்பில் 'எலியாரே, எங்கே போறீங்க? நான் இருட்டறையில் நல்லுணவைத் தேடப் போறேங்க' என்று கோ.பெரியண்ணன் நாட்டுப்புற பாணியில் எழுதியிருக்கிறார்.

நாட்டுப்புற இலக்கியத்தின் தாக்கம் தமிழ்க் குழந்தை இலக்கியத்தை வளமிக்கதாக மாற்றியுள்ளது. பண்பாட்டின் சாரத்தையும் கற்பனை வளத்தையும் குழந்தைகருக்குத் தந்துள்ளது காலத்தின் தேவைக்கேற்ப புதிய உள்ளடக்கத்தையும் பெற்றுள்ளது.

●


KAAVYA TAMIL (QUARTERLY) JULY - SEPTEMBER 2019
Regd No : TN TAM 8012 / 43610
சுந்தரபாண்டியன்
படைப்புகள்
சிறுகதைகள்
களவு
அம்மா
வரம்
சாபம்
நாவல்கள்
கன்னடியர் மகள்
திப்புசுல்தான்
சாணக்கியன்
ஆராரோ
அந்தி
நாடகம்
அக்னி
கவிதை
மேலும்
பகல் கனவுகள்
தொடர்புக்கு : 044 - 23726882
98404 80232
16, இரண்டாம் குறுக்குத் தெரு, டிரஸ்ட்புரம், கோடம்பாக்கம், சென்னை - 600 024
பேச : 044 - 23726882 , 9840480232
மின்னஞ்சல் : kaavyabooks@gmail.com இணையம் : www.kaavyaa.com
31
ஆடி
ஜூலை - செப்டம்பர் 2019
மலர் 8 இதழ் 3
KAAVYA TAMIL ISSN 2277 - 9221
விலை ₹ 100
காவ்யா
தமிழ்
கலை, இலக்கியம், பண்பாட்டு பன்னாட்டுக் காலாண்டிதழ்
இயக்குநர் மகேந்திரனின்
உதிராப் பூ
சண்முகசுந்தரத்தின்
தோப்பில் ஒரு
தனிமரம்
கிரீஷ் கர்னாடின்
நாகமண்டலம் [நாடகம்]
கவிப்பேரரசுவின்
கருஞ்சூரியன் பெரியார்
சினிமா அரசியல் சினிமா
வீரபாண்டிய கட்டபொம்மன்
சுந்தரபாண்டியனின்
புத்தரின் புன்னகை
[சிறுகதை]
வைரமுத்து
தமிழாற்றுப்படை
[கவிதை]
அட்டக்கத்தி
பா.ரஞ்சித்
ஓ.முத்தையா பேட்டி!
ஞானி,
ஞானசேகரன்,
விக்கிரமாதித்யன்,
நரேந்திரகுமார்
மற்றும் சில கட்டுரைகள்




# தமிழ் இந்தி சமஸ்கிருதம்

## உதயை மு.வீரையன்

தேசியக் கல்விக் கொள்கை-2019 வரைவு அறிக்கை 484 பக்கங்களுடன் ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டுள்ளது. இதனை 'கஸ்தூரி ரங்கன் குழு அறிக்கை' என்றுதான் கூறவேண்டும். பிரதமர் மோடியின் முதல் ஆட்சிக் காலத்திலேயே அமைக்கப்பட்டு விட்டது. இஸ்ரோ முன்னாள் தலைவர் கஸ்தூரி ரங்கன் தலைமையில் 2017ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது.

புதிய கல்விக்கொள்கை கூட்டாட்சித் தத்துவத்திற்கும், அரசமைப்பின் அடிப்படை அம்சத்திற்கும் எதிரானது என்று கூறப்படுகிறது. இதுபற்றி நாடு தழுவிய அளவில் விவாதங்கள் நடத்தப்பட வேண்டும் என்றும், அதற்குப் போதிய அவகாசம் தரப்படவேண்டும் என்றும் மாணவர்கள், பெற்றோர்கள், கல்வியாளர்கள் போர்க்குரல் எழுப்பி வருகின்றனர்.

ஏற்கெனவே வெளிவந்த கல்விக் குழுக்களின் அறிக்கைகளிலிருந்து இது முற்றிலும் மாறுபட்டதாக இருக்கிறது. தொடக்கக் கல்வி முதல் பல்கலைக்கழகக் கல்வி வரை மாற்றங்களைப் புகுத்த ஆயத்தமாகிறது. இக்கல்விக் கொள்கை முந்தைய கல்வியாளர்களின் பரிந்துரைகளுக்கு நேர்மாறானதாக உள்ளது.

டாக்டர் இராதாகிருஷ்ணன் குழு அறிக்கை, இலட்சுமணசாமி முதலியார் குழு அறிக்கை, கோத்தாரி குழு அறிக்கை போன்ற கல்வியாளர்களின் பரிந்துரைகளின் அடித்தளத்தையே புரட்டிப் போட்டு இந்துத்துவக் கொள்கைகளுக்கு முதன்மை இடம் அளிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் இருமொழிக் கொள்கையே கடந்த 50 ஆண்டுகளாக நடைமுறையில் உள்ளது. இதனை மறுத்து மும்மொழிக் கொள்கை என்ற

பெயரால் இந்தி மற்றும் சமஸ்கிருதத் திணிப்பிற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இதனைக் கல்வியாளர்களும், அரசியல் கட்சித் தலைவர்களும் கடுமையாக எதிர்த்தும், இரண்டே நாளில் கஸ்தூரி ரங்கன் வரைவு அறிக்கையில் புதிய திருத்தம் வெளியிடப்பட்டது. இந்தியைத் திணிப்பது இல்லை என்றும் ஆனால் மும்மொழித் திட்டம் தொடரும் என்றும் அறிவிக்கப்பட்டது.

தாய்மொழி, ஆங்கிலம் தவிர்த்து மூன்றாவது மொழியாக இந்தியை அல்லது சமஸ்கிருதத்தை தமிழகம் எப்போதும் ஏற்றுக் கொண்டதில்லை. மத்திய அரசு கொண்டுவரும் மும்மொழித் திட்டத்தின் நோக்கமே அதுதான்.

"மூன்றாவது மொழியை மாணவர்களே விருப்பப்படி தேர்வு செய்து கொள்ளலாம் எனப் பரிந்துரை மாற்றியமைக்கப்பட்டுள்ளது. ஆனால் மூன்றாவது மொழியை மாணவர்களே தேர்வு செய்து கொள்ளலாம் என்பதே மும்மொழிக் கொள்கையை மத்திய அரசு மாற்றிக் கொள்ளவில்லை என்பதற்கான அடையாளம்" என்று கல்வியாளர்கள் கூறுகின்றனர்.

1968-இல் அன்றைய பிரதமர் இந்திராகாந்தி ஆட்சியின் போது முதல் தேசிய கல்விக் கொள்கை கொண்டுவரப்பட்டது. அனைத்து குழந்தைகளுக்குமான கட்டாயக் கல்வியை நிறைவேற்றுவது என்று அறிவித்த அந்தக் கொள்கையில்தான் மும்மொழித் திட்டமும் புகுத்தப்பட்டது.

அதற்குத் தமிழ்நாடு கடுமையான எதிர்ப்பைப் பதிவு செய்தது. 1986-இல் பிரதமராக இருந்த ராஜீவ்காந்தி புதிய கல்விக் கொள்கையைக் கொண்டு வந்தார். குறிப்பாக தலித், பழங்குடி குழந்தைகளுக்கான கல்வியில் பாகுபாடுகளை அகற்றுதல் அதன் நோக்கமாகக் கூறப்பட்டது. அதுவும் மும்மொழித் திட்டத்தையே வலியுறுத்தியது.

பாரம்பரியம், கலாச்சாரம் என்ற பின்னணியைக் கூறி சமஸ்கிருதத்தை ஒரு மொழிப்பாடமாகக் கற்பிக்க வழி செய்யப்பட்டது. 1992-இல் நரசிம்மராவ் அதில் மாற்றங்கள் செய்தார். 2005-இல் பிரதமராக இருந்த மன்மோகன் ஆட்சியில் அது செயல்படுத்தப்பட்டது. அதில்தான் மருத்துவம், பொறியயல் உள்ளிட்ட படிப்புகளுக்கான தேசிய நுழைவுத் தேர்வுகள் புகுத்தப்பட்டன.

இப்போது மத்திய மனித ஆற்றல் மேம்பாட்டுத்துறை வெளியிட்டுள்ள புதிய கல்விக் கொள்கைக்கான வரைவு ஆவணத்தில் இடைநிலைப் பள்ளி வரையில் இந்தியைக் கட்டாயப் பாடமாக்க பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. சில மாநிலங்களில் எழுந்த எதிர்ப்பின் காரணமாக 'இந்தித் திணிப்பு' பற்றிய வரிகள் மாற்றியமைக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் இரயில்வேயில் பணியாற்றும் கட்டுப்பாட்டுப் பிரிவு அதிகாரிகள், இரயில் நிலைய அதிகாரிகளுக்கு இடையே தகவல் தொடர்புக்கு இனி இந்தி அல்லது ஆங்கிலத்தில்தான் பேச வேண்டுமென்று தெற்கு இரயில்வே உத்தரவிட்டுள்ளது. இதற்குக் கடும் எதிர்ப்பு ஏற்பட்டது.

மதுரை அருகே கடந்த மாதம் 10-ஆம் நாள் ஒரே தண்டவாளத்தில் இரு ரயில்கள் இயக்கப்பட்டன. இருப்பினும் பெரும் விபத்து தவிர்க்கப்பட்டது. இரயில்வே அதிகாரிகள் பேசிக்கொண்ட வெவ்வேறான மொழியால் ஒருவரின் தகவலை மற்றவர் புரிந்து கொள்வதில் ஏற்பட்ட சிக்கலே இந்த நிகழ்வுக்குக் காரணம் எனத் தெரிய வந்தது.

இதனால் இனி யாரும் மாநில மொழியில் பேசிக் கொள்ளக் கூடாது என தெற்கு இரயில்வே கடந்த ஜூன் 12, 2019 சுற்றறிக்கை வெளியிட்டது. அதில் "கட்டுப்பாட்டுப் பிரிவு அதிகாரிகள் இரயில்வே நிலைய அதிகாரிகளுக்கு இடையே தகவல் தொடர்புக்கு இனி இந்தி அல்லது ஆங்கிலத்தில் மட்டுமே பேசவேண்டும். தொடர்பை மேம்படுத்தும் நோக்கிலும் தொடர்பு கொள்வதில் ஏற்படும் சிக்கல்களை தவிர்க்கும் பொருட்டு இந்த உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது" என்று கூறப்பட்டிருந்தது.

இந்த உத்தரவுக்கு அரசியல் கட்சித் தலைவர்கள் மற்றும் தொழிற்சங்கங்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்ததால் இந்த உத்தரவை மாற்றம் செய்து மறுஉத்தரவை வெளியிட்டது. 'அதிகாரிகள் தாங்கள் பிறப்பிக்கும் கட்டளைகள் அனைத்தும் தெளிவாகவும், எளிதாகவும் புரிந்துகொள்ளும் வகையில் பேசிக்கொள்ளலாம்' என்பதே அந்த மாற்றமாகும்.

கடந்த சில ஆண்டுகளாக தெற்கு இரயில்வேயில் இந்திய மொழி பேசுவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. குறிப்பாக இரயில் நிலைய மேலாளர்கள் பிரிவில் 40 விழுக்காடு இந்திக்காரர்களாக இருக்கின்றனர். இவர்களுக்குத் தமிழ் மொழி முழுமையாகத் தெரியாது. இவ்வாறு மத்திய அரசு அலுவலகங்கள் எல்லாம் இந்திக்காரர்களால் நிரப்பப்படுகிறது.

இந்தி பேசாத மக்கள் மீது இந்தியைத் திணிக்க முற்படும் பாஜகவின் ஆர்வக் கோளாறு

மிகவும் ஆபத்தானது. தேசத்தின் மொழிகள் பற்றிய விவரங்களும், அதைப் பேசுவோர் பற்றிய புள்ளி விவரங்களும் மத்திய அரசிடம் இல்லை. இந்நிலையில் இந்தி பேசுவோர் பெரும்பான்மை என்று தவறாகக் கூறுகின்றனர்.

மொழிப் பிரச்சனையில் நமது நாடு பல போராட்டங்களைச் சந்தித்திருக்கிறது. தமிழ்நாடு, கர்நாடகா, தெலுங்கானா போன்ற பல மாநில மக்கள் தம் மொழிக்காகப் போராடியுள்ளனர். இந்தப் போராட்டங்களை ஆட்சியாளர்கள் அவ்வப்போது மறந்துபோய் விடுகின்றனர். மற்றொரு போராட்டத்தின் மூலம் அவற்றை நினைவுபடுத்த வேண்டியுள்ளது.

இந்தியாவில் மட்டும்தான் குழந்தைகள் மூன்று மொழிகளைக் கற்கக் கட்டாயப்படுத்தப் படுகின்றனர். இந்தியாவில் நூற்றுக் கணக்கான மொழிகள், குறிப்பாக பழங்குடி இன மக்களின் மொழிகள் ஆட்சியாளர்களின் அங்கீகாரத்தை இழந்துள்ளன. அந்தக் குழந்தைகள் நான்கு மொழிகளைக் கற்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர்.

ஐ.நா.வின் யுனெஸ்கோ அமைப்பு 2016-ஆம் ஆண்டு இந்தியாவில் சுமார் 4. 7 கோடி குழந்தைகள் பத்தாம் வகுப்புடன் பள்ளிக் கல்வியை கைவிட்டு விட்டனர் எனக் கண்டுபிடித்துக் கூறியுள்ளது. இதற்கு என்ன காரணம்?

பெண் குழந்தைகளை ஒதுக்குதல், குடும்பப்பொருளாதாரம், இவற்றோடு இன்னொரு முக்கிய காரணம் மொழிச்சுமையும் ஆகும். குழந்தைகள் பல மொழிகளைக் கற்கக் கட்டாயப்படுத்துவதால் பள்ளிப் படிப்பை வெறுத்துக் கைவிடும் போக்கு உருவாகிறது.

இந்தியா பலமொழிகளைப் பேசும் ஒரு துணைக் கண்டமாக இருக்கிறது. இந்த நிலையை மாற்றி ஒரு நாடாக ஆக்க வேண்டுமானால் இந்தியை அனைவரும் பேசும்படி செய்ய வேண்டும் என்று போலி தேசிய வாதிகளும், இந்துத்துவ அமைப்புகளும் திட்டம் போட்டு செயலாற்றுகின்றன.

இந்தியைத் திணிப்பது என்பது மாநிலங்களுக்கு அரசமைப்புச் சட்டம் அளித்துள்ள அடிப்படை உரிமைகளைத் தகர்க்கும் செயலாகும். யானை தன் தலையிலேயே மண்ணை வாரிப் போட்டுக் கொள்வது போன்றதாகும்.

உலகத்தின் சிறந்த உயர்தனிச் செம்மொழிகளில் தமிழுக்கும் இடம் உண்டு. கிரேக்கம், இலத்தீன், எபிரேயம், சீனம், சமஸ்கிருதம், தமிழ் என்னும் இந்தப் பட்டியலில் சீனமும், தமிழும்தான் இன்றும் வழக்காற்றில் உயிரோடு உள்ளன.

**“கன்னடமும் களிதெலுங்கும் கவின்மலை**
**யாளமும் துளுவும்**

**உன்னுதரத் துதித்தெழுந்து ஒன்றுபல**
**ஆயிடினும்**

**ஆரியம்போல் உலகவழக் கழிந்தொழிந்து**
**சிதையா உன்**

**சீரிளமைத் திறம் வியந்து செயல்மறந்து**
**வாழ்த்துதுமே”**

என்று மனோன்மணியம் சுந்தரம்பிள்ளை இதுபற்றியே பாடிவைத்தார்.

இந்திய மொழியியலை ஆராய்ந்த கால்டுவெல் இந்திய மொழிகளை திராவிட மொழிக் குடும்பம் என்றும், ஆரிய மொழிக்குடும்பம் என்றும் இரண்டாகப் பகுத்தார். திராவிட மொழிக் குடும்பத்திற்குத் தமிழே தாய் என்றும், ஆரிய மொழிக் குடும்பத்தைச் சேர்ந்ததே சமஸ்கிருதம் என்றும் அறுதியிட்டுக் கூறினார்.

“தமிழ் பழைமையானது; நலம் சிறந்தது; உயர்நிலையில் உள்ளது. விரும்பினால் வடமொழி உதவியின்றி இயங்க வல்லது” என்பது ஆய்வாளர் டாக்டர் கால்டுவெல் கூற்று.

சமஸ்கிருதத்தை தேவமொழி என்று கூறி அன்று முதல் இன்றுவரை மத்திய ஆட்சியாளர்கள் செல்லப்பிள்ளையாக வளர்த்து வருகின்றனர். மக்களின் வரிப் பணத்தை வாரி வழங்குகின்றனர். ஆயினும் அந்த மொழி செத்த மொழியாகவே இன்னும் இருந்து வருகிறது. உயிரூட்டும் முயற்சியும் ஓயவில்லை.

“இந்திய மொழிகளின் வளர்ச்சிக்கு சமஸ்கிருதத்துக்கு உள்ள சிறப்பு முக்கியத்துவத்தையும், அறிவு வளர்ச்சிக்கும் நாட்டின் பண்பாட்டு ஒற்றுமைக்குமான அதன் தனித்துவப் பங்களிப்பையும் கவனத்தில் கொண்டு சமஸ்கிருதப் படிப்புக்கான வசதிகள் பள்ளிகளிலும், உயர்கல்வி நிறுவனங்களிலும் செய்யப்படும்” என்று அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

எக்காலத்திலும் மக்கள் பேசும் மொழியாக சமஸ்கிருதம் இருந்ததில்லை. மக்களால் பேசப்படாத ஒரு மொழியை மாணவர்கள் படிக்கவேண்டும் என்று கட்டாயப்படுத்தப்படுகிறது. எல்லாக் கல்விக் கொள்கைகளிலும் இது இடம் பெறுவதன் மூலம் அதன் அரசியல் ஆதிக்கத் தன்மையை அறிய முடிகிறது. தமிழ், இந்தி, சமஸ்கிருதம் என்னும் இந்த முக்கோணம் முரண்பாடுகளின் முக்கோணம். ●

மக்களுக்காகச் சிந்திப்போம்

## 15-ஆம் ஆண்டு

## ஈரோடு புத்தகத் திருவிழாவில்

# 15,000 மரக்கன்றுகள் வழங்கும் நிகழ்வு

மக்கள் சிந்தனைப் பேரவை சமூக முன்னேற்றத்திற்கும் மாற்றத்திற்கும் அடித்தளமிடக் கூடிய - சாதி, மதம், அரசியல்கட்சி போன்ற எல்லைகளைக் கடந்த ஒரு பொது நல அமைப்பாகும்.

இவ்வமைப்பு கடந்த 20 ஆண்டுகளுக்கும் மேலாகத் தொடர்ந்து இடைவிடாது மக்கள் பணியில் தன்னை ஈடுபடுத்தி வருகிறது. தற்போது பேரவை மாநிலந்தழுவிய அமைப்பாக விரிவடைந்துள்ளது.

கல்வி, புத்தகவாசிப்பு, அறிவு, சிந்தனை போன்ற தளங்களில் ஆழமாகச் செயல்பட்டுவரும் மக்கள் சிந்தனைப் பேரவை - மொழி, இலக்கியம், கலை, வரலாறு, பண்பாடு, அறிவியல், சமூகசேவை, இயற்கைப் பாதுகாப்பு போன்ற களங்களிலும் முழுக் கவனத்தைச் செலுத்தி வருகிறது.

**ஈரோடு புத்தகத் திருவிழாவின் 15ஆம் ஆண்டை முன்னிட்டு பொதுமக்களுக்கு திருவிழாவின் நிறைவு நாளன்று (13.08.2019) 15,000 மரக்கன்றுகளை வழங்க பேரவை முடிவெடுத்துள்ளது.**

இதற்கு நன்கு திட்டமிட்டிருப்பதோடு இதற்கான முறையான ஏற்பாடுகளை இப்போதிருந்தே பேரவை மிகுந்த கவனத்துடன் செய்துவருகிறது.

ஓரளவுக்கு வளர்ந்த மரக்கன்றுகளை வழங்குவதென்றும், அவ்வாறு வழங்கப்படுவதற்கு முன்பே - மரம் நடுவதால் நாட்டுக்கும் வீட்டிற்கும் ஏற்படும் நன்மைகளை உணர வைப்பதென்றும், வாங்கிச் சென்றவுடன் - அவற்றை நட்டு முறையாக வளர்க்க வேண்டும் என்ற உணர்வை ஏற்படுத்திய பின்னரே மரக்கன்றுகளை பொதுமக்களுக்கு வழங்குவதென்றும் முடிவுசெய்யப்பட்டுள்ளது.

**அறிவு வேள்விக்கும் பண்பாட்டுப் புரட்சிக்கும் அடித்தளமிடக் கூடிய புத்தகத் திருவிழாவின் 15ஆம் ஆண்டில் பசுமைப் புரட்சிக்கு வித்திடும் பேரவையின் மரம் வழங்கும் முயற்சிக்கும் உயிரோட்டமான ஒத்துழைப்பு நல்கிட அனைவரையும் அன்புடன் வேண்டுகிறோம்.**

**மக்கள் சிந்தனைப் பேரவை**

மாநிலத் தலைமை அலுவலகம்

A-47, சம்பத் நகர், ஈரோடு - 638 011. தொலைபேசி : 0424-2269186,

e-mail : info@makkalsinthanaiperavai.org stalingunasekaran.t@gmail.com

Website : www.makkalsinthanaiperavai.org www.erodebookfestival.org www.tstalingunasekaran.com

facebook : makkalsinthanaiperavaierode youtube : makkalsinthanaiperavaierode

# யாழ்ப்பாணப் புத்தகக் கண்காட்சி - 2019

**27.08.2019 - 01.09.2019**

இலங்கை யாழ் நகரில் யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் 27.08.2019 முதல் 01.09.2019 வரை புத்தகக் கண்காட்சி நடைபெறவுள்ளது. கண்காட்சியில் தமிழ்நாட்டிலிருந்து நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட் பங்கெடுக்கவுள்ளது. இலங்கை பூபாலசிங்கம் புத்தக சாலையுடன் நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் இணைந்து **ஸ்டால் எண்.5ல்** செயல்படவுள்ளது. இங்கு குறிப்பாக இலங்கை எழுத்தாளர்களின் படைப்புகள் இடம்பெறும்.

கண்காட்சியில் குழந்தைகள் இலக்கியம், அறிவியல், பொதுஅறிவு, சுயமுன்னேற்ற நூல்கள், அகராதிகள், கதைகள், சிறுகதை, நாவல், அரசியல், சமையல், மருத்துவம், தொழில்நுட்பம், சோவியத் மற்றும் பிற நாட்டுக் கதைகள், திருக்குறள், பாரதியார், பாரதிதாசன், பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் பாடல் கள், இலக்கணம், இலக்கியம், தத்துவம், கட்டுரைகள், வரலாறு, வாழ்க்கை வரலாறு, மார்க்சிய நூல்கள் இன்னும் ஏராளமான தலைப்புகளில் புத்தகங்கள் இடம்பெறவுள்ளன.

நடைபெறவுள்ள யாழ் நகரப் புத்தகச் சந்தையில், வவுனியா, கிளிநொச்சி, மன்னார், யாழ்நகரம் போன்ற இடங்களிலுள்ள மாணவமாணவிகள், ஆசிரியர்கள், விஞ்ஞானிகள், புத்தகப் பிரியர்கள், இலக்கியவாதிகள், பேச்சாளர்கள், எழுத்தாளர்கள், அலுவலகத்தில் பணிபுரியும் மேலதிகாரிகள், சிப்பந்திகள் அனைவரும் பங்கெடுத்து ஆதரவு அளிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் வெளியிடும் அனைத்து நூல்களும் இலங்கையிலுள்ள பூபாலசிங்கம் புத்தக சாலையில் கிடைக்கும்.

*அமைப்பாளர்கள்*

**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**
(New Century Book House (P) Ltd.,)

41-பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்
அம்பத்தூர், சென்னை - 600 098.
தமிழ்நாடு, தென்னிந்தியா.தொலைபேசி எண்:
0091-44-26258410, 26251968, 9444019708.
மின்னஞ்சல் - info@ncbh.in, www.ncbhpublisher.in

**பூபாலசிங்கம் புத்தகசாலை**
(Poobalasingham Book Depot)

எண்: 202, செட்டியார் வீதி
கொழும்பு 011. இலங்கை.
தொலைபேசி எண்: 011-2422321
மின்னஞ்சல் - Poobalasingham202@gmail.com

மக்களுக்காகச் சிந்திப்போம்

# 15–ஆம் ஆண்டு
# ஈரோடு புத்தகத் திருவிழாவில்
# மகளிர் எழுச்சி தினம்

## 15 பெண் ஆளுமைகள் பங்கேற்கும் நிகழ்வு

**மக்கள் சிந்தனைப் பேரவையின் சார்பில் நடைபெறவுள்ள 15ஆம் ஆண்டு ஈரோடு புத்தகத் திருவிழா வருகிற ஆகஸ்ட் 2ஆம் தேதி முதல் 13ஆம் தேதி வரை 12 நாட்களுக்கு ஈரோடு வ.உ.சி. பூங்கா மைதானத்தில் நடைபெறவுள்ளது.**

- 08.08.2019 ஆம் தேதி வியாழக்கிழமை மாலை 6.00 மணிக்கு நடைபெறவுள்ள சிந்தனை அரங்க நிகழ்வை **மகளிர் எழுச்சி தினம்** என்று அறிவித்து அதனை பெண்களுக்கான சிறப்பு நிகழ்ச்சியாக நடத்திட முடிவு செய்யப்பட்டுள்ளது.

- மக்கள் தொகையில் சரிபாதியாகவுள்ள பெண்களின் அனைத்துவகை முன்னேற்றம் குறித்தும், குடும்பச்சூழலிலும் – பொதுவாழ்விலும் – சமூக வளர்ச்சியிலும் பெண்களின் அளப்பரிய பங்களிப்பு பற்றியும் அழுத்தமான விழிப்புணர்வையும் எழுச்சியையும் உருவாக்கும் நோக்கத்தோடு இச்சிறப்பு நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

- புத்தகத் திருவிழாவின் 15ஆம் ஆண்டை முன்னிட்டு அவரவர் துறைகளில் ஆழத்தடம் பதித்த ஈரோடு மாவட்டத்திலுள்ள 15 பெண் ஆளுமைகள் இந்நிகழ்வில் சிறப்பிக்கப்படவுள்ளனர். அவர்களின் அனுபவக் கருத்துரைகளும் இடம் பெறுகின்றன.

- கல்வி, அறிவு, சிந்தனை, வாசிப்பு, படைப்பு, பண்பாடு, சமூகம், பணி, சேவை, தன்னம்பிக்கை, தலைமைத்துவம், குடும்பம் போன்ற பல தளங்களில் பெண்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்கும் முயற்சியே இந்நிகழ்ச்சியின் நோக்கமாகும்.

**இந்நிகழ்ச்சியின் நோக்கம் முழுமையாக நிறைவேறும் விதத்தில் பல்லாயிரக்கணக்கான பெண்கள் இந்நிகழ்வில் பங்கேற்று இம்முயற்சியை வெற்றிபெற வைக்க அன்புடன் வேண்டுகிறோம்.**

**மகாகவி பாரதி, தந்தை பெரியார், ஐயா எஸ். மீனாட்சிசுந்தர முதலியார் போன்ற பெண்களின் முன்னேற்றத்திற்காக ஓயாது உழைத்திட்ட பெருமக்களின் வழியில் நடைபோடும் ஆயிரக்கணக்கான ஆண்மக்களும், பெரும்திரளான எண்ணிக்கையில் பொது மக்களும் இந்நிகழ்வில் பங்கேற்றுச் சிறப்பிக்க வேண்டுகிறோம்.**

## மக்கள் சிந்தனைப் பேரவை

மாநிலத் தலைமை அலுவலகம்,
A-47, சம்பத் நகர், ஈரோடு – 638 011. தொலைபேசி 0424 2269186
Email : info@makkalsinthanaiperavai.org / Email : stalingunasekaran.t@gmail.com
Website : www.makkalsinthanaiperavai.org / www.erodebookfestival.org / www.tstalingunasekaran.com
facebook : makkalsinthanaiperavaierode / youtube : makkalsinthanaiperavaierode



# உ. வே. சாமிநாதையர் ‘தமிழ்த் தாத்தா’ ஆன வரலாறு

## முனைவர் இரா. வெங்கடேசன்

**19,** பிப்ரவரி, 1855ஆம் ஆண்டு பிறந்த உ.வே.சாமிநாதையருக்கு 06, மார்ச்சு, 1935-ஆம் நாள் எண்பதாம் ஆண்டு நிறைவு விழாக் கொண்டாட்டம் நடத்தப்பெற்றுள்ளது.கால அளவைக் கொண்டு 25, 50, 100ஆண்டுகள் நிறைவடையும்பொழுது வெள்ளி, பொன், வைரம் எனக் கொண்டாட்டங்கள் நடத்துவதைப் போன்று, ஒருவரின் வாழ்நாட்களில் அறுபதாம் வயது நிறைவடையும்பொழுது‘சஷ்டிபூர்த்தி’என்றும் ,எண்பதாவது வயது நிறைவடையும்பொழுது ‘சதாபிஷேகம்’என்றும்அழைப்பது வைதீக வழக்கமாகும். அந்த நாளை விழாவாகக் கொண்டாடி மகிழ்வது வைதீகர்களின் மரபாக உள்ளது.

1915, பிப்ரவரி, 2ஆம் நாள் உ.வே.சா. அவர்களுக்கு அறுபதாம் ஆண்டு நிறைவுற்றது; இந்தச் ‘சஷ்டிபூர்த்தி’யைக் கொண்டாட அன்பர்கள், உறவினர்கள் விரும்பியும் உ.வே.சா. அதைக் கொண்டாட விரும்பாமல் அன்றைய நாளில் துணைவியார் சரஸ்வதியுடன் திருக்காளத்தி சென்று அபிஷேகம் செய்து, கிரிப்பிரதட்சிணம் செய்துவிட்டு வந்ததோடு முடித்துக்கொண்டுள்ளார்.

எண்பதாம் ஆண்டு நிறைவைக் கொண்டாடும் ‘சதாபிஷேக’ விழா அன்பர்களும் உறவினர்களும் விரும்பி வேண்டிக்கொண்டு ஏற்பாடு செய்தபடி1935, மார்ச்சு 06-ஆம் நாள் கொண்டாடப்பட்டுள்ளது.

உ. வே. சாமிநாதையர் அவர்களின் சதாபிஷேக விழா வெகுசிறப்பாகக் கொண்டாடப்பட்டுள்ளது. இந்த விழாவைக் கொண்டாடுவதற்கு அன்றைய பொதுப் பணித்துறை அமைச்சராக இருந்த கனம் பி. டி. ராஜன் அவர்களைத் தலைவராகக் கொண்ட ஒரு விழாக்குழு அமைக்கப்பட்டுள்ளது. இந்த விழாக் குழுவில் டி. சிவராமசேதுப்பிள்ளை, பெ.நா. அப்புசுவாமி, எஸ். வையாபுரிப்பிள்ளை ஆகிய மூவரும் உறுப்பினர்களாகவும், கே.வி. கிருஷ்ணசாமி ஐயர் பொருளாளராகவும்இருந்து செயல்பட்டுள்ளனர்.

சதாபிஷேக விழாவிற்குரிய முன் ஏற்பாடுகளையும், விழா சிறப்பாக நடைபெறுவதற்குரிய காரியங்களையும் உ.வே.சா.அவர்களின் மாணாக்கர்களான கி. வா. ஜகந்நாதையர், வி. மு. சுப்பிரமணிய ஐயர், ச.கு.கணபதி ஐயர், செல்லமையர் ஆகிய நால்வரும் செய்துமுடித்திருந்தனர். உ.வேசா. அவர்களின் அன்பர்களின் பட்டியலைத் தயாரித்து அவர்களின் முகவரிகளைத் திரட்டி விழாக்குழுவின் அறிக்கைகளை அனுப்புதல், இதழ்களுக்கு விழா குறித்த அறிவிப்புச் செய்தியை அனுப்பி, அது வெளிவரும்படி செய்தல் முதலான பணிகளை இவர்கள் செவ்வனே செய்துமுடித்தனர். இதற்கிடையில், ஏற்கனவே உ.வே.சா. அவர்களைப் பற்றித் தமிழறிஞர்கள் எழுதியிருந்த குறிப்புகளையெல்லாம் கி.வா.ஜ. திரட்டி முடித்திருந்தார். அவற்றின் சிலவற்றை ஆனந்தவிகடன், கலைமகள் போன்ற இதழ்களில் வெளிவரவும் செய்திருந்தார்.

சுதேசமித்திரன், ஆனந்தவிகடன், சுதந்திரச் சங்கு, தினமணி, ஜனமித்திரன், லோகோபகாரி, தாருல் இஸ்லாம், இந்துநேசன், இந்து சாதனம், மதுரமித்ரன், பாரத ஜோதி போன்ற அன்றைக்கு வெளிவந்துகொண்டிருந்த முக்கியமான தமிழ் இதழ்களிலும், தி இந்து, இந்தியன் எக்ஸ்பிரஸ், மெட்ராஸ் மெயில் போன்ற ஆங்கில இதழ்களிலும் சதாபிஷேக விழா குறித்த செய்திகள் வெளிவந்திருந்தன.

கி.வா.ஜ. அவர்கள், உ.வே.சா. பற்றி கட்டுரைகள் எழுதியும் பிற அன்பர்களை எழுதச்சொல்லியும் கலைமகள், ஆனந்தவிகடன் முதலான இதழ்களில் வெளிவரும்படி செய்திருந்தார்.

விழாக் குழுவின் ஏற்பாட்டில் சென்னைப் பல்கலைக்கழகச் செனட் மண்டபத்தில் மார்ச்சு மாதம் 6ஆம் தேதி, புதன்கிழமை மாலை 5 மணிக்கு உ.வே.சா. அவர்களின் சதாபிஷேக விழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பெற்றது.அதற்கு முன்பாக அன்று காலையில் உ.வே.சா. அவர்களின் 'தியாகராஜ விலாச' இல்லத்தில் சதாபிஷேக முகூர்த்த விழா வைதீக முறைப்படி நடத்தி வைக்கப்பெற்றது. புண்ணிய தீர்த்தங்களால் அபிஷேகம் நடத்தி முடித்த பின்னர், பலவகையான தானங்கள் வழங்கப் பெற்றுள்ளன. உறவினர்கள், அன்பர்கள், பொதுமக்கள் என பலரும் வந்து அந்நிகழ்வில் பங்கேற்று, உ.வே.சா. அவர்களை வாழ்த்தியும் வாழ்த்துகளைப் பெற்றும் சிறப்பித்துள்ளனர்.

மாலையில் சென்னைப் பல்கலைக்கழகச் செனெட் அரங்கில் விழா நடைபெற்றது. விழாவிற்கு முன்னதாகப் பல்கலைக்கழக செனெட் தோட்டத்தில் பாண்டு வாத்தியஇசை முழக்கத்துடன் உ.வே.சா. அவர்களுடைய திருமகன் கல்யாணசுந்தரம் ஐயர் அவர்களால் தேநீர் விருந்து அளிக்கப்பட்டுள்ளது.

சதாபிஷேக விழாவிற்கு, சென்னை மாகாணத்தின் தற்காலிக ஆளுநராக அப்போது நியமிக்கப்பட்டிருந்த ஸர் மஹமத் உஸ்மான் ஸாஹிப் பகதூர் அவர்கள் தலைமை வகித்திருந்தார்கள்.

விழாவில், உ.வே.சா. அவர்களுக்குப் பல உபசாரபத்திரங்கள் படித்து அளிக்கப்பட்டன. முதலில் நண்பர்களும் அபிமானிகளும் அளித்த உபசாரபத்திரத்தை விழாக்குழு உறுப்பினரான சிவராமசேதுப் பிள்ளையவர்கள் வாசித்தளித்துள்ளார். அந்தப் பத்திரம் பனையேட்டில் எழுதப்பெற்றதாக இருந்தது. அப்பத்திரம் இரண்டு தாங்கப்பெற்ற ஒரு வெள்ளிக்குழாயில் வைத்து அளிக்கப்பட்டுள்ளது.

சென்னைத் தமிழ்ச் சங்கம், சென்னைச் சமஸ்கிருத சங்கம், சென்னை வித்துவச் சிரோமணி மண்டலம், சென்னைப் புத்தகசாலைச் சங்கம், சென்னை அரசினர் பேரகராதிச் சபை (Tamil Lexicon Committee), வண்ணைத் தமிழ் அபிவிருத்திச் சங்கம், கும்கோணம் கல்லூரிப் பழைய மாணவர் சங்கம், இராசதானிக் கல்லூரித் தமிழ் மாணவர் சங்கம், லயோலாக் கல்லூரித் தமிழ் மாணவர் சங்கம், மகமதிய கல்லூரித் தமிழ் மாணவர் சங்கம், பச்சையப்பன் கல்லூரித் தமிழ் மாணவர் சங்கம், கும்பகோணம் கல்லூரித் தமிழ் மாணவர் சங்கம் ஆகியவற்றின் சார்பில் ஒன்றன்பின் ஒன்றாக உபசார பத்திரங்கள் வாசித்து அளிக்கப்பட்டுள்ளன.

அன்பர்களும், நண்பர்கள், மாணவர்கள் அளித்த உபசார பத்திரங்கள் அளிப்பிற்குக்குப் உ.வே.சா. அவர்களின் பதிப்புப் பணிக்கு உதவும் வகையில், விழாக் குழுவின் சார்பில் கனம் பி.டி.ராஜன் அவர்கள் 3001 ரூபாய்க்குரிய உண்டியலடங்கிய வெள்ளிப் பையொன்றை ஐயரவர்களிடம் சேர்ப்பித்தார். பொதுமக்கள் பலரும் அன்புடன் அளித்த நிதியிலிருந்து இத்தொகை

வழங்கப்பெற்றது. இந்த நிதியைத் திரட்டுவதற்குரிய கூட்டமொன்று, விழா நடைபெறுவதற்கு முன்னர் மார்ச்சு மாதம் முதல்தேதி வெள்ளிக்கிழமை மாலை 5-30 மணிக்குத் தேனாம்பேட்டை மௌப்ரேஸ் ரோட்டில் இருந்தவிழாக் குழுத் தலைவர் கனம் பி. டி. ராஜன் அவர்கள் வீட்டில் நடைபெற்றிருக்கிறது.

விழாக் குழுவின் நிதியளிப்பு நிகழ்விற்குப் பின்னர், நண்பர்கள் சம்மானங்கள் அளித்துச் சிறப்பித்தனர். உ.வே.சா. எழுதியிருந்த மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களின் சரித்திரத்தைப் படித்து இன்புற்ற அன்பர் ஒருவர் உ.வே.சா. அவர்களுடைய வரலாறு அதனினும் பன்மடங்கு அரிய, உயரிய செய்திகளையும் தமிழின் சரித்திரத்தையும் வெளிப்படுத்தித் தமிழுலகுக்கு வழிகாட்டியாக நின்று நிலவுமென்ற கருத்தில் அவர் அச்சரித்திரத்தை அவரே எழுதி வெளியிட வேண்டுமென்ற தமது விருப்பத்தைச் சபையினருக்கு 501 ரூ. அனுப்பி வேண்டியிருந்தார். பெயர் வெளியிட விரும்பாத அன்பர் அளித்த அத்தொகை விழாக் குழுவின் சார்பில் உ.வே.சா. அவர்களுக்கு வழங்கப்பட்டது. இது போன்ற கோரிக்கையை அன்பர் பலரும் சதாபிஷேக வாழ்த்துக் கட்டுரையில் விடுத்திருந்தனர். சதாபிஷேக விழா நடைபெற்று முடிந்த ஏழு ஆண்டுகளுக்குப் பின்னர்தான் 1942இல் தனது சரித்திரத்தை ஆனந்த விகடன் இதழில் தொடராக எழுதி வெளியிடத் தொடங்கினார் உ.வே.சா.

டாக்டர் உ.வே.சா. அவர்களின் உருவப்படத்தைச் சென்னைப் பல்கலைக்கழக மண்டபத்தில் வைப்பதற்குரிய ஏற்பாட்டையும் சதாபிஷேக விழாக் குழுவினர் செய்திருந்தனர். திருப்பனந்தாள் ஆதீனம் காசிவாசி சுவாமிநாத தம்பிரான் உதவியால் ஆர். துரை என்பவர் வரைந்த உ.வே.சா. உருவப்படம் பல்கலைக்கழகத் துணைவேந்தர் லிட்டில் ஹேல்ஸ் அவர்களிடம் அளிக்கப்பட்டது. பல்கலைக்கழகத்தின் சார்பாக அதை அவர் பெற்றுக்கொண்டு வாழ்த்துரை வழங்கிச் சிறப்பித்துள்ளார்.

இந்தக் கொண்டாட்டத்தில் படித்துக் கொடுக்கப்பட்ட உபசார பத்திரங்கள் எல்லாவற்றையும் தொகுத்து ஒரு சிறுநூலாக டாக்டர் உ.வே.சா. அவர்களின் படங்களுடன் அச்சிடப்பட்டு விழா நடைபெற்ற அன்றைய நாளிலேயே வந்திருந்த அனைவருக்கும் வழங்கப்பட்டுள்ளன. டாக்டர் ஐயரின் சதாபிஷேக மலர் என்று ‘கலைமகள்’ தனிப்பிரசுரமொன்றை 64 பக்கங்கள் கொண்டதாக அச்சிடப்பட்டு வந்திருந்த அனைவருக்கும் வழங்கப்பட்டுள்ளது. இதில் டாக்டர் உ.வே.சா.அவர்களின் வரலாறும் அவரைப் பற்றிப் பலர் எழுதிய கட்டுரைகளும் அடங்கியிருந்தன.

விழாவில் முத்தையா பாகவதர் அவர்களின் பாட்டுக்கச்சேரியும் நடைபெற்றுள்ளது. ஆந்திர பல்கலைக்கழகத்தின் சார்பாக அப்பல்கலைக்கழகத் தமிழ், கன்னட மொழிகளின் பாடத்திட்டக்குழுவின் தலைவர் ராவ் பகதூர் கிருஷ்ணராவ் பான்ஸ்லே அவர்கள் உ.வே.சா. அவர்களுக்கு அறுபது ஆண்டு பழமைவாய்ந்த ஒரு எழுத்தாணியையும் ஒரு பௌண்டன் பேனாவையும் பரிசாக அளித்து மகிழ்ந்தார்.

உ.வே.சா. அவர்களின் சதாபிஷேக விழா சென்னையில் மட்டுமின்றித் தமிழகத்தின் பல்வேறு ஊர்களிலும் யாழ்ப்பாணம், ரங்கூன், கம்போடியா ஆகிய வெளிநாடுகளிலும் கொண்டாடப்பட்டுள்ளது. சதாபிஷேக விழாவிற்கு முன்னதாகவும் பின்னதாகவும் பல்வேறு இதழ்கள் உ.வே.சா. அவர்களை வாழ்த்திக் கட்டுரைகள் எழுதி வெளியிட்டுச் சிறப்பித்துள்ளன. ந.மு.வேங்கடசாமி நாட்டார், ப.சம்பந்த முதலியார், வீ.இராமாநுஜாச்சாரியார், மு.கதிரேச செட்டியார், மு. இராகவையங்கார், சக்கரவர்த்தி இராசகோபாலாச்சாரியார், டி.கே.சிதம்பரநாத முதலியார், வெ.ப.சுப்பிரமணிய முதலியார், எஸ். சத்தியமூர்த்தி ஆகியோர் கட்டுரை எழுதிச் சிறப்பித்துள்ளனர். ரா.இராகவையங்கார், வ.உ.சிதம்பரம் பிள்ளை, முன்னீர்ப் பள்ளம் பூர்ணலிங்கம் பிள்ளை, கே.ஜி.சேஷையர், இ.மு.சுப்பிரமணிய பிள்ளை, வித்துவான் மா.இராசமாணிக்கம், அ.மு.பரமசிவானந்தம் உள்ளிட்ட அறிஞர்கள் பலர் வாழ்த்துப் பாக்களை எழுதி அளித்துச் சிறப்பித்துள்ளனர்.

சதாபிஷேக விழாவினையொட்டி பல ஊர்களில் இருந்தும் அன்பர்கள் உ.வே.சா. அவர்களுக்குக் கடிதம் எழுதியும், தந்தி அனுப்பியும் வாழ்த்துக்களைப் பகிர்ந்துகொண்டுள்ளனர்.

சதாபிஷேக விழாவிற்கு முன்னும் பின்னுமான சில நாட்களில் உ.வே.சா. அவர்களின் வாழ்வில் சில முக்கியமான நிகழ்வுகள் நடந்தேறியுள்ளன. ஒன்று, அன்பர்கள் பலரும் உ.வே.சா. அவர்கள் தன் சரித்திரத்தைத் தானே எழுதி வெளியிட வேண்டும் என்ற கோரிக்கையை நேரடியாக அவரிடம் வைத்தது; இரண்டு ‘தமிழ்த் தாத்தா’ என அவரை அன்போடு அழைத்து மகிழ்ந்தது. இந்த இரண்டும் உ.வே.சா. அவர்களின் பெரு வாழ்வில் நடந்தேறிய முக்கியமான நிகழ்வுகளாகக் கருதத்தக்கது. இவற்றுள் அவரின் ‘என் சரித்திரம்’ நூலை பலரும் படித்து மகிழ்ந்திருப்பர். ‘தமிழ்த்

தாத்தா' எனும் பெயர் அவருக்கு நிலைபெற்ற வரலாற்றை இங்கு நினைவுபடுத்தி பார்ப்போம்.

சதாபிஷேக விழாவிற்கு முன்னும் பின்னுமாகக் கல்கி கிருஷ்ணமூர்த்தி அவர்கள் மூன்று கட்டுரைகளை தொடர்ச்சியாக மூன்று வாரம் ஆனந்தவிகடன் இதழில் எழுதி வெளியிட்டிருக்கிறார். அந்த மூன்று கட்டுரைகளுள் முதல் கட்டுரை சதாபிஷேக விழாவின் அறிவிப்புச் செய்தியாகவும், இரண்டாவது கட்டுரை சதாபிஷேக விழாவிற்கு ஏற்பாடு செய்திருந்த விழாக் குழுவினருக்கு எழுதுவதாகவும், மூன்றாவது கட்டுரை உ.வே. சா. அவர்களுக்கு எழுதுவதாகவும் இருந்தன. இந்த மூன்று கட்டுரைகளும் மூன்று வார ஆனந்த விகடனில் தனித் தனியே வெளிவந்திருக்கின்றன. இதற்கடுத்த வார ஆனந்த விகடன் இதழை உ.வே.சா. அவர்களைப் பற்றிய கட்டுரைகள் அடங்கியதாகவே வெளிவரும்படி கல்கி செய்திருக்கிறார். இதுமட்டுமின்றி சதாபிஷேக விழா நடைபெற்று முடிந்த பின்னர் அவ்விழாகுறித்து 17-3-1935-இல் ஆனந்த விகடன் இதழில் 'தமிழ்த் திருவிழா' என்கிற தலைப்பில் ஒரு கட்டுரை எழுதி வெளியிட்டு சிறப்புச் செய்திருக்கிறார்.

'தமிழ்த் தாத்தா' எனும் பெயர் உ.வே.சா. அவர்களுக்கு நிலைபெற்ற வரலாற்றுக் குறிப்புகள் இந்த மூன்று கட்டுரைகள் வழியே வெளிப்பட்டு நிற்கின்றன. அதனால், கல்கி அவர்கள், சதாபிஷேக விழா நடைபெறுவது குறித்தும், விழா குழுவினருக்கும், உ.வே.சா. அவர்களுக்கும் ஆனந்த விகடனில் எழுதி வெளியிட்ட அந்த மூன்று கட்டுரைகளும் வெளிவந்த வண்ணமே இங்குத் தரப்படுகின்றன.

**1**

ஸ்ரீமத் சகலகுண சம்பன்ன அகண்டித லக்ஷ்மீ அலங்கிருத ஆசிருத ரக்ஷிக மகாமேரு சமான தீர இகபர சௌபாக்கிய வதான்னிய மூர்த்தன்னிய சதுஷ்டய சாதாரண திக்விஜய பிரபு குல திலக மங்கள குண கணாலங்கிருத வாசாலக பரிபாக சிரோரத்ன மகா புருஷ மகாராஜமான்ய ராஜஸ்ரீ பொதுஜனம் அவர்கள் திவ்ய சமுகத்திற்கு விகடன் தாழ்மையாகச் செய்துகொள்ளும் விஞ்ஞாபனம்.

என்ன, பெரியவாள் முழிக்கிறாய்ப் போலிருக்கிறது? ஒன்றும் விளங்கவில்லையாக்கும்! "என்னமோ காமாசோமாவென்று எல்லாருக்கும் தெரிந்த பாஷையில் எப்போதும் எழுதும் விகடனுக்கு இன்று என்ன வந்தது?" என்று யோசிக்கிறீராக்கும். அதெல்லாம் முடியாது; இன்று உம்மைக் கதற வைத்துத் திணற அடித்து விடுவதாக உத்தேசம். தினம்போல் சுலபமாய்த் தப்பித்துக் கொண்டு போகலாமென எண்ண வேண்டாம். எங்கே, தைரியமிருந்தால் பின்வரும் புத்தகங்களின் பெயர்களைப் படியும், பார்க்கலாம்:-

மருதூர் யமகவந்தாதி, தில்லை யமகவந்தாதி, திருவேரகத்துயமகவந்தாதி, துறைசையமகவந்தாதி, மறைசை யந்தாதி, திருக்குற்றால யமகவந்தாதி, பழமலைத் திரிபந்தாதி, திருப்புகலூர் அந்தாதி, வயலூர்ப் பதிற்றுப்பத்தந்தாதி, பாலைவனப் பதிற்றுப்பத்தந்தாதி, முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ், செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத்தமிழ், அமுதாம்பிகை பிள்ளைத்தமிழ், பிரம்மவித்யா நாயகி பிள்ளைத்தமிழ், மயூரகிரி இரட்டைமணிமாலை, வாளொளிபுற்றூர்ப் புராணம், வாட்போக்கிக் கலம்பகம், திருநாகைக்காரோணப் புராணம், திருவெண்ணீற்றுமை பிள்ளைத்தமிழ், கலைசைச் சிலேடைவெண்பா.........

அதற்குள்ளாகவா சரணாகதி அடைந்துவிட்டீர்? இந்த நூல்களின் பெயர்களைப் படிப்பதே உமக்குச் சிரமமாயிருக்கிறதே, அவைகளைக் கற்றல் எவ்வளவு சிரமமாயிருக்க வேண்டும்? அவற்றைப் போன்று விகடனில் நாலைந்து பக்கங்களுக்குப் பெயர் ஜாபிதா மட்டும் கொடுக்கக்கூடிய அவ்வளவு தமிழ் நூல்களையும் கற்றுத் தேர்தல் என்றால், அது எத்தகைய செயற்கரிய செயல்?

அப்பேர்ப்பட்ட அரும்பெரும் செயல் புரிந்த பெரியார் ஒருவர் நமது தமிழ்நாட்டில் இருக்கிறார். அவர் யார் தெரியுமா? அவருடைய முழுப்பெயரைப் படிப்பதுகூடக் கொஞ்சம் கடினமான விஷயந்தான். மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்ய கலாநிதி டாக்டர் உ.வே.சாமிநாதையர் அவர்கள்.

அய்யர்வாள் படித்திருக்கிற பழந்தமிழ் நூல்கள் எல்லாவற்றின் பெயரையும் சொல்வதென்றால் மிகவும் பிரயாசையான காரியமே. ஆனால் அவர் படிக்காத பழந்தமிழ் நூல்களைக் குறிப்பிடுவது மிகவும் சுலபம். 'ஒன்றும் இல்லை' என்று இரண்டே வார்த்தையில் கூறுதல் எளிதல்லவா?

பொதுஜன ஸ்வாமி! நீரும் நானும் கூடத்தான் தமிழ் நூல்கள் படித்திருக்கிறோம். அதாவது, அத்தியாயத் தலைப்புக்களுடனும், அரும்பத அகராதிகளுடனும், முன்னுரை பின்னுரைகளுடனும் முத்து முத்தாக அச்சிட்ட புத்தகங்களைப் படித்திருக்கிறோம். ஆனால் அய்யர்வாள் தமிழ் படித்தது எப்படித் தெரியுமா? அந்தக் காலத்தில் அச்சிட்ட புஸ்தகங்களே அபூர்வம். ஒரு பண்டார சந்நதி அந்நாளில் கம்பராமாயணம் அச்சுப் பிரதியைப் பார்த்துவிட்டு "ஓகோ! இதைக்கூடப் 'புக்கு' (Book)ப் போட்டுவிட்டானா?" என்று வியந்தாராம்! இவ்வாறு, அச்சிட்ட புத்தகமே

வியப்பளித்த காலம் அது. அந்நாளில், கறையான் அரித்த ஓலைச் சுவடிகளில் தெளிவின்றி எழுதியிருந்த எழுத்துக்களைக் கண்நோவு காணும்படி படித்தாக வேண்டும். அந்த ஓலைச்சுவடிகளும் கிடைப்பது கடினம். ஊர் ஊராகச் சென்று, யார் யாரிடம் எந்த ஓலைச்சுவடியிருக்கிறதென்று அறிந்து அவர்களிடம் கெஞ்சிக் கூத்தாடி வாங்கிக் கற்றாகவேண்டும்.

அய்யர் அவர்கள் தம் இளம்பிராயத்தில் அவ்வாறெல்லாம் பிரயாசைப்பட்டுப் படித்ததனால்தான், தமிழ்மொழிக்கு வேறு எவராலும் செய்யப் பெறாத மகோபகாரம் செய்தல் சாத்தியமாயிற்று. அவர்கள் வடமொழிக்கு வியாஸ பகவானும், தமிழ் மொழிக்கு அகஸ்திய முனிவரும் எத்தகைய தொண்டு செய்தார்களென்று சொல்லப்படுகிறதோ, அவ்வளவு சிறப்பான தொண்டை இந்நாளில் டாக்டர் சாமிநாதையர் அவர்கள் தமிழுக்குச் செய்திருக்கிறார்கள். அவர்களால் பதிப்பிக்கப்பெற்ற பழைய தமிழ் நூல்களின் ஜாபிதாவைப் பாருங்கள்:-

சீவகசிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, பெருங்கதை, பத்துப்பாட்டு, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், புறநானூறு, புறப்பொருள் வெண்பாமாலை, நன்னூல் மயிலைநாதருரை, நன்னூல் சங்கர நமச்சிவாயருரை, தக்கயாகப்பரணி, பாசவதைப் பரணி, திருப்பாதிரிப்புலியூர்க் கலம்பகம், திருக்காளத்திநாதருலா, திருப்பூவண நாதருலா, தேவை உலா, மதுரைச் சொக்கநாதருலா, கடம்பர்கோயில் உலா, சங்கரலிங்க உலா, தமிழ்விடுதூது, வண்டுவிடுதூது, தென்றல்விடுதூது, திருவாவடுதுறைக்கோவை, திருமயிலைத் திரிபந்தாதி, கூழை அந்தாதி, பழனிப்பிள்ளைத் தமிழ், திருக்கழுக்குன்றச் சிலேடை வெண்பா, ஸ்ரீசிவக்கொழுந்து தேசிகர் பிரபந்தங்கள், ஸ்ரீமீனாட்சிசுந்தரம்பிள்ளை பிரபந்தத் திரட்டு, திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம், தியாகராஜ லீலை.

தமிழ்ச் செல்வம், தமிழ்ச் செல்வம் என்று நாமெல்லாம் பெருமையடித்துக்கொள்கிறோம்; அய்யவர்களின் அரிய முயற்சிகள் இல்லாமற் போயிருந்தால், ‘உங்களுடைய தமிழ்ச் செல்வம் எங்கே?’ என்று கேட்பவர்களுக்கு, ‘எங்கேயோ பூமியில் புதையுண்டு கிடக்கிறது; தோண்டிப்பார்த்தால் ஒருவேளை அகப்படலாம்’ என்றே பதில் சொல்ல வேண்டியிருந்திருக்கும்.

அய்யர் அவர்கள், தாம் இளம்பிராயத்தில் தமிழ் நூல் கற்பதற்காகப் பட்ட சிரமங்களை எண்ணி, அத்தகைய கஷ்டம் இனி வரும் சந்ததிகளுக்கு ஏற்படக்கூடாதென்று கங்கணங் கட்டிக்கொண்டிருக்க வேண்டும்.

பழைய ஓலைச்சுவடிகளிலிருந்து பாடபேதங்களை ஆராய்ந்து புத்தகம் பதிப்பித்தல் எவ்வளவு சிரம சாத்தியமான காரியம் என்பது தெரியுமா? எல்லையற்ற பொறுமையும், உழைப்புத் திறமையும், அறிவுத் தெளிவும் அதற்கு வேண்டும். அந்தத் தொண்டின் அருமையை அறிந்திருப்பவர்கள், அய்யர் அவர்கள் பதிப்பித்த ஒவ்வொரு புத்தகத்துக்காகவும் அவருக்குத் தமிழ்நாட்டில் ஒவ்வொரு ஞாபகச் சிலை நிறுவவேண்டும் என்று சொல்வார்கள்.

பொதுஜன ஸ்வாமி! தமிழ் மொழிக்கும் தமிழ் நாட்டுக்கும் அத்தகைய பரோபகாரம் செய்திருக்கும் - இன்னமும் செய்துவரும் - பெரியாருக்குச் சமீபத்தில் 80-ஆவது வயது பூர்த்தியாகப்போகிறது. இந்த விசேஷ சம்பவத்தை நாளது மார்ச்சு மாதம் 6-ஆம் நாளன்று சிறப்பாகக் கொண்டாடுவதற்காகத் தமிழன்பர்கள் சிலர் ஏற்பாடு செய்துவருகிறார்கள். அன்றைய தினம் அய்யர் அவர்களுடைய உருவப்படம் ஒன்றைப் புதிய சர்வகலாசாலை மண்டபத்தில் திறந்து வைக்கவும், அய்யர் அவர்களுக்கு ஓர் உபசாரப்பத்திரம் படித்துக் கொடுக்கவும் உத்தேசித்திருக்கிறார்கள். மேற்படி வைபவத்துக்கு இஷ்டமித்ர பந்துக்களுடன் உம்மை அழையாவிட்டாலும் நீர் வந்துசேர வேண்டியது.

ஆமாம், சந்தேகம் என்ன? தமிழ் யார் வீட்டுச் சொத்து? மற்றவர்களுக்குள்ள பாத்தியதை தமிழில் நமக்கும் உண்டு. தமிழ்த்தாய் நம் எல்லாருக்குந்தான் தாய். எனவே, அய்யர்வாள் விஷயத்திலும் நம் எல்லாருக்கும் சமமான பாத்தியதை உண்டு.

இப்படிக்கு

**அன்பன்,**

**விகடன்.**

## 2

உயர்திருவாளர் தமிழ் அன்பர் அவர்களுக்கு விகடன் வரையும் விகிதமாவது:-

தங்களுடைய அழைப்புக்கடிதம் பெற்றேன். மெத்த மெத்த சந்தோஷம். அய்யர் அவர்களுடைய எண்பதாம் வயதுப் பூர்த்தியைத் தாங்கள் விமரிசையாகக் கொண்டாட எண்ணியிருப்பது மிகவும் பொருத்தமானதே.

நம்முடைய காலத்தில், நம் கண் முன்னால், தமிழ் மொழிக்குப் பெருமையளித்தவர்களுக்குள் இரண்டு பேர் சிறந்து விளங்குகிறார்கள். ஒருவர், தேசீயகவி சுப்பிரமணிய பாரதி; மற்றவர் மகாமகோபாத்தியாய சாமிநாதையர்.

பாரதியார் வாடாமலர்களைத் தொடுத்துத் தமிழ்த்தாய்க்குப் பாமாலை சூட்டினார்; புதிய நாகரிகமுறையில் அழகிய சின்னஞ்சிறு ஆபரணங்களைச் செய்து அணிவித்தார்.

அய்யர் அவர்களோ, காணாமற்போயிருந்த தாயின் பழைய ஆபரணங்கள் பலவற்றைத் தேடிக் கண்டுபிடித்துத் தந்தார்; துருப்பிடித்துக் கிடந்த நகைகளை யெல்லாம் துருவெடுத்துச் சுத்தம் செய்து மெருகிட்டு அளித்தார்.

எனவே, இரண்டுபேரும் ஒவ்வொருவகையில் தமிழ்த்தாய்க்கு மகத்தான சேவை செய்திருக்கிறார்கள்.

ஆனால் பாரதியார் ஒரு தவறு செய்தார்; திடீரென்று யாரிடமும் சொல்லிக்கொள்ளாமல் அவர்பாட்டுக்கு இறந்து போய்விட்டார்! என்ன அவசரமோ தெரியவில்லை?

"ஏதடா! நாம் செய்த சேவையைத் தமிழர்கள் அறிந்து பாராட்டுவதற்குக் கொஞ்சம் அவகாசம் கொடுக்க வேண்டாமா?" என்று அவருக்குச் சற்றும் தெரியாமல் போயிற்று.

ஆனால் அய்யர் அவர்கள் அத்தகைய தவறைச் செய்யவில்லை. அவர்கள் தமிழர்களின் மதாந்த குணத்தை நன்கறிந்தவர் போலிருக்கிறது. "நம்முடைய தொண்டின் பெருமையை இந்தத் தமிழர்கள் அறியவேண்டுமானால் 80 வயதுக்குமேல் ஜீவித்தே தீரவேண்டும்" என்று இளம்பிராயத்திலேயே தீர்மானித்திருப்பார் போலிருக்கிறது.

எப்படியிருந்தாலும், நம்முடைய அதிர்ஷ்டந்தான். அவருடைய எண்பத்தோராவது வயதிலாவது அவரைக் கௌரவப்படுத்த வேண்டுமென்று நமக்குத் தோன்றியது பெரிய காரியமல்லவா?

ஏதோ, இவ்வளவு தாமதமாகத் தொடங்கியிருக்கும் காரியத்தை அதற்கேற்ற பெருமையுடன் சிறப்பாக நடத்தி வைப்பீர்களென்று எதிர்பார்க்கிறேன்.

இப்படிக்கு,
**நண்பன்,**
**விகடன்.**

**3**

தமிழ்த் தாத்தா ஸ்ரீ உ. வே.சாமிநாதையர் அவர்கள் சமுகத்துக்குப் பேரன் பரிவுடன் எழுதிக்கொள்வது.

பெரியவாள் என்ன யோசிக்கிறீர்கள்? இது என்ன புதிய பட்டமாயிருக்கிறது, இவன் யார் கொடுப்பது என்றா? அப்படியெல்லாம் தாங்கள் நிராகரிக்கமாட்டீர்களென்று நம்புகிறேன். சகலமும் அறிந்த பெரியாராகிய தாங்கள் 'நான் அளித்திருக்கும் பட்டத்தின் பொருத்தத்தை அங்கீகரிக்காமல் இருக்க முடியாது. முதலாவது ஔவையாருக்கு எப்படி 'தமிழ்ப் பாட்டி' என்னும் பட்டம் பொருந்துமோ அது போலவே தங்களுடைய பிராயத்தினாலும், தமிழுக்குத் தாங்கள் செய்திருக்கும் தொண்டினாலும் 'தமிழ்த் தாத்தா' என்னும் பட்டம் தங்களுக்குப் பொருந்தும்.

இரண்டாவதாக, மேற்படி பட்டத்திலுள்ள இரண்டு 'த்' களையும் நீக்கிவிட்டால் தாங்கள் 'தமிழ் தாதா' ஆகிறீர்கள். நமது நாட்டின் பரம்பரை வழக்கத்தை அநுசரித்து அகப்பட்ட நூல்களையெல்லாம் ஒளித்து வைக்காமல் அச்சிட்டு வெளியாக்கிப் பதினாயிரக் கணக்கானவர்களுக்குப் பயன்படும்படி செய்த தங்களை, 'தமிழ்தாதா' என்று சொல்லாமல் வேறு யாரைச் சொல்வது?

மூன்றாவதாக, 'ருசி கண்ட பூனை உறியை உறியைத் தாவும்' என்பது போலத் தமிழன்பர்கள் இன்னமும் தங்களை நோக்கி, 'தமிழ் தா! தா!' தமிழ் நூல்களைத் தா! தா! என்று கேட்டுக்கொண்டுதானிருக்கிறார்கள் (மேற்படி சிலேடை என் சொந்தமல்ல இரவல்தான் என்பதையும் பெரியவாளிடத்திலே தெரிவித்துக்கொண்டுவிடுகிறேன்.)

ஆகவே, இவ்வளவு பொருத்தமான பட்டத்தைத் தாங்கள் அங்கீகரித்தே தீரவேண்டும். அப்படி அங்கீகரிக்காவிட்டாலும் நான் என்னமோ அந்தப் பட்டத்தால்தான் தங்களை அழைப்பேன்.

ஏனென்றால், 'மகாமகோபாத்தியாயர்', தாக்ஷிணாத்யகலாநிதி' முதலியவை வாயில் நுழைவதே கடினமாயிருக்க, 'தமிழ்த் தாத்தா' என்பதோ தங்களுடைய தமிழ் வசனநடையைப் போல் எளிதாயிருக்கின்றது.

நல்லவேளை, ஞாபகம் வந்தது. தங்களுடைய தமிழ் வசனநடையைப் பற்றித்தான் ஒன்று கேட்கவேண்டுமென்றிருக்கிறேன். அதென்ன, தாங்கள் அவ்வளவு பெரிய தமிழ்ப் புலவராயிருந்துகொண்டு எவ்வளவு எளிய தமிழ்நடை எழுதுகிறீர்கள்?

என் நண்பர் ஒருவர் தங்களைப்பற்றி நிந்தாஸ்துதியாக ஒன்று சொல்வது வழக்கம்:- 'இந்த அய்யர்வாள் தமிழுக்கு ரொம்ப துரோகம் செய்திருக்கிறார்கள். இவர்கள் வெளியிடும் பழந்தமிழ்க் காவியங்களில் அரும்பத அகராதி ஒன்று சேர்த்திருக்கிறார்களா? அந்த அரும்பத

அகராதிகளை வைத்துக்கொண்டு கடுமை கடுமையான வார்த்தைகளைக் கோத்து இந்த நாளில் சிலர் தமிழ் எழுதுகிறார்கள்!' என்று.

அப்படியாகத் தங்களுடைய புத்தகங்களின் உதவியினால் அநேகர் பல் உடைந்து, காது கிடுகிடாய்க்கும்படியான தமிழ்நடை யெல்லாம் எழுதும்போது, தாங்கள் மட்டும் எனக்கெல்லாங்கூட விளங்கும்படியான வெள்ளைச் சொற்களையே உபயோகிக்கிறீர்களே, அது ஏன்? நானும் தங்களுடைய கட்டுரைகளை எல்லாம் படித்தேன்; தாங்கள் எழுதிய ஸ்ரீமீனாக்ஷிசுந்தரம் பிள்ளை அவர்கள் சரித்திரத்தையும் படித்தேன். எனக்கு விளங்காத வார்த்தை ஒன்றுகூட இல்லை. இது தங்களுடைய கௌரவத்துக்குக் குறைவு என்று தாங்கள் நினைக்கவில்லையா?

போகட்டும்; தங்களுக்குச் சமீபத்தில் 80-வயது நிரம்பப்போகிறது என்று சொல்கிறார்களே, அது உண்மைதானா? எனக்கு என்னமோ நம்பிக்கையில்லை. பார்த்தால் பாலியமாய்த் தோன்றுகிறதே? தாங்கள் செய்யும் வேலையைப் பார்த்தாலும் அவ்வளவு வயதானவராக நினைக்கக்கூடவில்லையே?

எனக்கு என்ன தோன்றுகிறதென்றால், தாங்கள் ஒரே மூர்த்தன்னியமாய்த் தமிழ்த்தாயின் சேவையில் ஈடுபட்டிருக்கையில் ஒருவேளை வயதுக் கணக்கை மறந்திருக்கலாமென்று.

உண்மையாகவே தங்களுக்கு 80 வயது பூர்த்தியாகிற விஷயத்தில் அதை எப்படிச் சாதித்தீர்கள் என்னும் இரகசியத்தைத் தயைசெய்து தெரிவித்துவிடுங்கள். எனக்கென்னமோ, தமிழ் மக்களாகிய நாங்கள் செய்த பூர்வஜன்ம சுகிர்தந்தான் தங்களது நீடித்த ஆயுளுக்குக் காரணம் என்று தோன்றுகிறது.

எதுவாயிருந்தாலும், மார்ச்சு மாதம் 6-ஆம் தேதியன்று தங்களுடைய பேரன் பேத்திகள் எல்லாரும் தங்களுக்குத் திருஷ்டி கழித்துக் கொட்டுவது என்று தீர்மானித்திருக்கிறார்கள். இது தங்கள் காதுக்கும் எட்டியிருக்குமென்று நம்புகிறேன்.

ஏதோ, உருவப்படமாம்; உபசாரப் பத்திரமாம்; தங்களுக்கு இதெல்லாம் உபத்திரவமாய்த்தானிருக்கும். ஆனாலும் பேரன் பேத்திகளின் மனத்திருப்திக்காகத் தாங்கள் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்.

கடைசியாக ஒன்று தங்களைக் கேட்டுக்கொள்கிறேன். அதாவது மார்ச்சு மாதம் 6-ஆம் நாள் வைபவங்கள் முடிந்து 7-ஆம் நாள் பிறந்ததோ இல்லையோ, உடனே இந்த வயது விவகாரங்களை யெல்லாம் மறந்துவிடுங்கள். நீங்கள் பாட்டுக்குத் தமிழ்த்தாயின் சேவையில் ஈடுபட்டிருங்கள். தப்பித் தவறி வயதைப் பற்றி ஞாபகம் வந்தால், 81 என்பதைத் திருப்பி வைத்து 18 என்று எண்ணிக்கொள்ளுங்கள். என்றும் பதினாறு வயதாயிருந்த மார்க்கண்டனைப்போல் தாங்களும் 18 வயதுக்குமேல் போகாமலே இருந்துவிடுங்கள்.

ஏனெனில், தாங்கள் செய்ய வேண்டிய தொண்டுகள் இன்னும் எவ்வளவோ பாக்கியிருக்கின்றன. தமிழ்த்தாய் இன்னமும் கையில் ஏராளமான பழைய நகைகளை வைத்துக்கொண்டு காத்திருக்கிறாள். அவைகளையும் தாங்கள் மெருகிட்டுத் தரவேண்டுமாம். எப்படியும் ஸ்திரீ யல்லவா? அசாத்திய நகை ஆசை! நிற்க. தங்களிடமிருந்து பேரன் பேத்திகளாகிய நாங்கள் ஆவலுடன் எதிர்பார்க்கிற இன்னும் ஒரு காரியம் பாக்கியிருக்கிறது. எங்களுக்குக் கதை கேட்பதில் மிகவும் பிரியம். தங்கள் சொந்தக் கதையை முழுதும் பூரணமாய்க் கேட்கவேண்டுமென்று ஆவல் கொண்டிருக்கிறோம்.

ஸ்ரீமீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்களின் சரித்திரத்தில் ஒருவாறு எங்களுக்கு ஆசை காட்டியிருக்கிறீர்கள். ஸ்ரீமீனாட்சி சுந்தரம்பிள்ளை, ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர், ஸ்ரீமான்கள் வேதநாயகம் பிள்ளை, கோபாலகிருஷ்ண பாரதி, மகாவைத்தியநாத ஐயர், இராமஸ்வாமி சிவன் முதலிய தமிழ்ப் பெரியார்கள் வாழ்ந்த அக்காலத்தைப் பற்றி மேற்படி சரித்திரத்தில் படித்த பிறகு அதற்குப் பிந்திய காலத்தைப்பற்றியும் தெரிந்துகொள்ள வேண்டுமென்று பேராவல் கொண்டிருக்கிறோம். அந்த ஆவலைப் பூர்த்திசெய்தல் தங்கள் பொறுப்பு.

தங்களுடைய சுயசரிதத்தை எழுதினால், அது பெரும்பாலும் தமிழ் மக்களின் சரித்திரமாகவே இருக்குமென்பதில் ஐயமில்லை.

ஏதோ நான் சொல்லவேண்டியதைச் சொல்லிவிட்டேன், அப்புறம் தங்கள் விருப்பம்.

**இங்ஙனம், அடியேன்,**

**விகடன்.**

**ஆனந்தவிகடன், 12-2-35**

*(1898, ஜூலை, மணிமேகலை மூலமும் அரும்பதவுரையும், முதல் பதிப்பு வெளிவந்தது; முதன் முதலாக உ.வே.சா. உரை எழுதி வெளியிட்ட நூல் இதுவாகும்; 1924, ஜூலை, சிதம்பரம், மீனாட்சி தமிழ்க் கல்லூரியின் முதல்வர் பொறுப்பை ஏற்றல்,1937, ஜூலை, 16, வெ. ப. சுப்பிரமணிய முதலியார் 80-ஆம் ஆண்டு நிறைவு விழாவிற்குத் தலைமை தாங்குதல்)*